திருநாகேஸ்வரம்



பதிப்பாசிரியர்

சி. பி. சிங், இஆப.,

முதன்மைச்செயலாளர் (ம) ஆணையர்

ஆசிரியர்

நா. ரெங்கசாமி

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை

சென்னை-600 008

2011 - திருவள்ளுவர் ஆண்டு 2042

திருநாகேஸ்வரம்

திருநாகேஸ்வரம்

ஆசிரியர்

நா. ரெங்கசாமி

பதிப்பாசிரியர்

சி. பி. சிங் இ.ஆ.ப.,

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை-600 008

2011, திருவள்ளுவர் ஆண்டு 2042.

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Thirunageswaram
Editor	:	Principal Secretary & Commissioner
Copy right	:	T.N. State Dept. of Archaeology
Subject	:	History
Language	:	Tamil
Edition	:	First
Publication No	:	249
Year	:	2011
No. of Copies	:	500
No. of Pages	:	108
Type Point	:	11pt
Paper used	:	80 GSM Maplitho
Price	:	Rs. 26 /-
Printer & Publisher	:	State Dept. of Archaeology Tamil Valarchi Valaagam Halls Road, Egmore Chennai - 600 008.

சி. பி. சிங், இஆப.,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தொல்லியல் துறை,
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை - 600 008.

நாள் : 29 - 08 - 2011

பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தமிழகத்தின் பண்பாட்டுத் தரவுகளை வெளிக்கொணரும் பணியில் முழுமையாக ஈடுபட்டு வருகின்றது. இத்தரவுகளை அனைவரும் அறிந்துக் கொள்ளும் வகையில் கல்வெட்டுகள், அகழாய்வுகள் செப்பேடுகள், கலை, கட்டடக்கலை மற்றும் செப்புத்திருமேனிகள் குறித்த அனைத்தையும் நூலாக வெளியிடும் பணியினை மேற்கொண்டு வருகிறது.

மேலும் இத்துறையின் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் மூலம் தொல்லியல், தமிழ், வரலாறு மற்றும் வடமொழி ஆகியவற்றில் முதுகலைப் பட்டம் பயின்ற மாணவர்களுக்கு ஓராண்டு முதுகலைப் பட்டயப் பயிற்சி உதவித்தொகையுடன் வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சியில் தொல்லியல், கல்வெட்டியல், கலை, கட்டடக்கலை, வரலாறு, நாணயவியல் ஆகியவற்றில் வகுப்புகளும், களப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின் இறுதியில் மாணவர்கள் ஒரு கோயிலினை ஆய்வு செய்து முழுமையாக ஆய்வுநூல் சமர்ப்பிக் கின்றனர். இவ்வாய்வேட்டினை ஒவ்வொரு ஆண்டும் இரண்டு முதல் நான்கு நூல்கள் வரை நூலாக இத்துறை வெளியிடுகிறது.

2001-2002 - ஆம் ஆண்டு இக்கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் பயின்ற மாணவரான திரு. நா. ரெங்கசாமி அவர்கள் சமர்ப்பித்த

திருநாகேஸ்வரம் என்ற ஆய்வேடு 2010-2011 - ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் நூலாக வெளியிடப்படுகிறது. இந்நூல் ஆசிரியர் கல்வெட்டுகளிலிருந்து பல்வேறு செய்திகளைச் சான்றுகளுடன் விவரித்துள்ளார். குறிப்பாக அளவைகளைக் குறித்து சிறப்பான முறையில் எழுதியுள்ளார். மதநல்லிணக்கத்திற்கு சான்றாக கல்வெட்டுச் செய்தியினைக் குறிப்பிட்டிருப்பதும் மிகச் சிறப்பாகும்.

இந்நூலாசிரியர் திரு. நா. ரெங்கசாமி அவர்களுக்கும் இந்நூலின் பதிப்புப் பணியினை சிறப்புற மேற்கொண்ட கல்வெட்டாய்வாளர்கள் திரு. கி. சு. சம்பத் மற்றும் திரு. இரா. சிவானந்தம் திரு. வெ. இராமமூர்த்தி மேலும் நூலினை வெளிக்கொண்டுவரும் வகையில் D.T.P. மற்றும் அட்டை வடிவமைப்பு பணியினை மேற்கொண்ட திருமதி. கோ. கீதா மற்றும் அச்சுப்பிரிவின் அனைத்துப் பணியாளர்களுக்கும் எனது நல்வாழ்த்துகள்.

இந்நூலை வெளியிட நிதியுதவி அளித்திட்ட தமிழ்நாடு அரசக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினை ஆய்வாளர்கள், கல்லூரி, பள்ளி மாணவர்கள் மற்றும் அனைவரும் படித்துப் பயன்பெறக் கேட்டுக் கொள்கிறேன்.

சி. பி. சிங்

பொருளடக்கம்

திருநாகேஸ்வரம் கோயில் பக்க எண்கள்

ஊர் அமைவிடம் 1

கோயில் அமைப்பு 1

குன்றுமாமுலை அம்மன் 3

சிற்பங்கள், செப்புத்திருமேனிகள் 14

கல்வெட்டுச் செய்திகள்

1. கல்வெட்டுகளின் காலம், எண்ணிக்கை, படியெடுத்தக் காலம், எழுத்துகள், மொழிகள் 31
2. கல்வெட்டுகளில் மெய்கீர்த்திகள் 36
3. கல்வெட்டுகளில் மன்னர்களின் பெயர்கள் 41
4. காலக் கணியக் குறிப்புகள் 43
5. கல்வெட்டுகளில் நாடு, ஊர்ப்பெயர் 45
6. கல்வெட்டுகளில் இறைவன், இறைவி பெயர் 47
7. நிலங்கள், நிலப்பெயர்கள் 48
8. நில எல்லைகள் 49
9. இறையிலி 51
10. நொந்தா விளக்குகள்: தானம் 53
11. வழிபாடுகள் மற்றும் விழாக்கள் 55
12. கோயில் நிர்வாகம். 60
13. செப்புத் திருமேனிகள் 65
14. அணிகலன்கள், எடைக்கற்கள் 66
15. காசுகள் 69
16. அளவைகள் 71
17. கட்டடக்கலை 75
18. பயிற்சிக் களம் 77
19. இயற்கைச் சீற்றம் 78
20. ஆவணம் 79
21. ஓம்படைக் கிளவி 81

உப்பிலியப்பன் கோயில் 83

ஆய்வின் வழித்துணை நூல்கள் 94

நிழற்படங்கள் 95

1. திருநாகேஸ்வரம் கோயில் நிழற்படங்கள்
2. உப்பிலியப்பன் கோயில் நிழற்படங்கள்

திருநாகேஸ்வரம்

ஊர் இருப்பிடம்

தமிழகத்தின் தலைநகரான, சென்னையையும், தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சாவூரையும் நேர்வழியில் தொடர்பு படுத்தும் நெடுஞ்சாலையில், தஞ்சாவூரிலிருந்து சுமார் 40 கிலோ மீட்டர் தொலைவில் கும்பகோணம் உள்ளது. கும்பகோணத்திலிருந்து (கிழக்கு நோக்கி) காரைக்கால் செல்லும் சாலையில் 6 கிலோ மீட்டர் தொலைவில் திருநாகேஸ்வரம் உள்ளது.

கோயில் இருப்பிடம்

திருநாகேஸ்வரம் பேரூராட்சியின் 13வது வார்டுக்கு உட்பட்ட பகுதியில், கிழக்குமடவிளாகம், தெற்குமடவிளாகம், மேற்குமடவிளாகம், வடக்குமடவிளாகம் ஆகிய நான்கெல்லைக்கும் உட்பட்ட பகுதியில் நாகநாதசுவாமி திருக்கோயில் உள்ளது.

கோபுரங்களும், சுதைச் சிற்பங்களும்

கோபுரம் என்பது கோயில் நுழைவாயிலை அலங்கரிப்பது, விமானம் என்பது கருவறையின் மேல் பகுதியை அலங்கரிப்பது. இவ்வாலயத்தில் மொத்தம் 7 கோபுரங்கள் இருக்கின்றன. கிழக்குத் திசையில் இரண்டு (உள், வெளி) கோபுரங்களும், தெற்கு, மேற்கு, வடக்கு திசைகளில் தலா ஒவ்வொரு கோபுரமும், வடகிழக்கு மூலையில் தனி ஆலயமாக உள்ள குன்றுமாமுலை அம்மன் ஆலயத்தில் தெற்குப் பார்த்த நுழைவாயில் கோபுரம் ஒன்றும், கிழக்கு பார்த்த அம்பாள் சன்னதியின் நுழைவு கோபுரம் ஒன்றும் ஆக ஏழு கோபுரங்கள் உள்ளன.

கிழக்கு கோபுரம்

கோயிலின் கீழ்த்திசை முதற்கோபுரம் 5 மாட நிலைக் கோபுரமாக உள்ளது. 7 கலசங்கள் உள்ளன. சுதைச்சிற்ப வேலை மிகுதியாக உள்ளது. கோயிலின் உட்புற கிழக்கு கோபுரம் 4 மாட

நிலை கோபுரமாக உள்ளது. இதனைக் கட்டைக் கோபுரம் என்றும் அழைக்கின்றனர். இதில் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்து உள்ளன. மேற்கண்ட இரண்டு கோபுரங்களுக்கும் இடையில் கிழக்கிலிருந்து பலிபீடம், நந்தி மண்டபம், கொடிமரம் ஆகியவை உள்ளன.

இரண்டாவது வாயிற் கோபுரத்தின் மேலே கஜலெட்சுமி ஓவியம் உள்ளது. கிழக்குத் திசையிலுள்ள நான்கு நிலைக் கோபுரத்தின் மேல் மூன்று நிலைகளில் மட்டும் சுதைச் சிற்பங்கள் உள்ளன.

கிழக்குப் புறமுள்ள ஐந்து நிலைக் கோபுரத்தில் கீழிருந்து ஐந்தாவது மாடநிலையில் ஆண் வீரர்களின் சிற்பங்கள் உள்ளன. நான்காவதில், ஸ்ரீதேவி, பூதேவியருடன் விஷ்ணு பாம்பணையில் வைகுந்தப்பெருமாளாக வீற்றிருக்கிறார். இராமர், சீதை, மற்றும் முனிவர்களது உருவங்களும் உள்ளன. மூன்றாவதில் தட்சணாமூர்த்தி, பிட்சாடனர், உக்ரத்துடன் அம்மன், மீனாட்சித் திருக்கல்யாணம் ஆகிய சிற்பங்கள் உள்ளன. இரண்டாவதில் ஐந்துமுக சிவன் (சதாசிவம்), விஷ்ணு, பிரம்மா, சிவன் சிற்பங்கள் ஆகியவை உள்ளன. முதலாவதில் காளை வாகனத்தில் சிவனும், யானை வாகனத்தில் இந்திரன் உருவமும் உள்ளன.

தெற்கு கோபுரம்

கோயிலின் தெற்கு கோபுரம் ஐந்து மாடநிலைகளை உடையது. மாடநிலைகளின் வெளிப்புறங்களில் வண்ணம் தீட்டப்பட்டுள்ளது. தெற்கு கோபுரக் காவல் தெய்வமாக கணநாதர் வீற்றிருக்கிறார்.

மேற்கு கோபுரம்

மேற்கு திசைக் கோபுரம் ஏழு மாடநிலைக் கோபுரமாக உள்ளது. சிற்பங்கள் இல்லை. அடித்தளம் கடினக் கற்களால் ஆனது. மேல்பகுதி செங்கல் சுதையால் ஆனது. மாடநிலைப் பகுதிகளில் தற்கால வண்ணம் தீட்டப்பட்டுள்ளது.

வடக்கு கோபுரம்

வடக்குக் கோபுரம் மிகவும் பழமையானதாக பழுதடைந்து இருக்கிறது. ஐந்து நிலை மாடங்களைக் கொண்டது. தூண்பகுதி

தூண்பகுதி கடினக்கல்லால் ஆனது. மாடப்பகுதி செங்கல்லால் ஆனது. சிற்பங்கள் இல்லை. கற்கள் சிதைந்துள்ளன. கோபுரத்தின் உச்சிமாடத்தில் சிமெண்ட் பூசப்பட்டுள்ளது. வடக்குக் கோபுரம் காவல் தெய்வமாக துர்க்காதேவி வீற்றிருக்கிறாள்.

குன்றுமாமுலை அம்மன்

குன்றுமாமுலையம்மன் சன்னதி, தனி ஆலயமாக ஒட்டுமொத்த ஆலயத்தின் கிழக்குப்புற இரு கோபுரங்களுக்கும் இடையில் வடகிழக்கு மூலையில் கிழக்கு நோக்கி உள்ளது. தனி ஆலயத்தின் வாயிற் கோபுரம் தெற்குப் பக்கம் உள்ளது. ஐந்து மாடநிலைக் கோபுரமாக உள்ளது. கீழிருந்து முதல் மூன்று நிலைமாடங்களில் சிற்பங்கள் இல்லை. மேல் இரண்டு நிலை மாடங்களில் மட்டும் சிற்பங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

1982, 1995-ல் நடைபெற்ற குடமுழுக்கின் போது, சிதைந்த சிற்பங்கள் அகற்றப்பட்டு புதுசிற்பங்களை வைத்து எளிமையாக்கி உள்ளனர். கோபுரத்தில் தெய்வானை, முருகன் திருக்கல்யாணம், பிட்சாடனார், தட்சிணாமூர்த்தி, திருவாசி, ஆடும் நடராஜர் காலடியில் முயலகன், அமர்ந்த நிலையில் அம்மன் ஆகிய சிற்பங்கள் மேலிரண்டு மாடநிலைகளில் இருக்கின்றன.

குன்றுமாமுலை அம்மன் சன்னதியின் வாயிற்கோபுரம் கிழக்குப் பார்த்து மூன்று மாடநிலைக் கொண்ட கோபுரமாக உள்ளது. சிற்பங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

விமானம்

சிவபெருமான் ஐந்து முகம் உடையவர். ஒட்டுமொத்த ஆலயத்தின் நான்கு திசைகளில் இருக்கும் நான்கு கோபுரங்கள் நான்கு முகமாகவும், நாகநாதசுவாமி வீற்றிருக்கும் கருவறையின் விமானம் ஐந்தாவது முகம் என்றும் கூறப்படுகிறது. கருவறையின் விமானம் கண்களில் படாத அளவிற்கு உட்பிரகார மதில் உயரமாக எழுப்பப்பட்டுள்ளது.

பலிபீடம், கொடிமரம், நந்திமண்டபம்

கிழக்குத் திசையில் வெளிப்புற மதிற்சுவரில் உள்ள ஐந்து மாடநிலை கோபுரத்திற்கும் - உட்புற மதிற்சுவரில் உள்ள நான்கு

மாடநிலைக் கோபுரத்திற்கும் இடையில், நான்கு மாடநிலைக் கோபுரத்தின் அருகில் கிழக்குத் திசையிலிருந்து விநாயகர், பலிபீடம், நந்திமண்டபம், கொடிமரம் ஆகியன வரிசையாக உள்ளன.

சன்னதிகள்

இக்கோயிலில் நாகநாதசுவாமி மூலவர் சன்னதியாகும் பிறையணி அம்மன், குன்றுமாமுலை அம்மன், ஸ்ரீ இராகுபகவான், சோமாஸ்கந்தர், விநாயகர், சுப்ரமணியர், பாலசாஸ்தா, சண்டிகேஸ்வரர், சண்டிகேஸ்வரி சன்னதி போன்று பல சன்னதிகளும் உள்ளன.

நாகநாதசுவாமி சன்னதி

நாகநாதசுவாமி சன்னதி கிழக்கு நோக்கி உள்ளது. கருவறையில் நாகநாதசுவாமி இலிங்க வடிவில் காட்சியளிக்கிறார். இலிங்கத்தின் மேல்புறம் நாகம் தன்தலையை குடையாக விரித்துள்ளது போல் அலங்கார நாகக் குடை உள்ளது.

பிறையணியம்மன் சன்னதி

நாகநாதசுவாமி சன்னதிக்கு (இடது புறத்தில்) வடக்குப் பக்கம் பிறையணியம்மன் சன்னதி உள்ளது. அம்மனை சந்திரபகவான் தன் தன்னொளி வீசி தரிசிப்பதற்காக அர்த்தமண்டபத்தில் மூடுதளத்தில் வட்டவடிவ துளை உள்ளது. அர்த்த மண்டபத்தில் ஒரு விநாயகர் வீற்றிருக்கிறார்.

சென்பக விநாயகர்

கிழக்குத் திசையில் வெளிப்புற மதிற்சுவரில் உள்ள 5 மாடநிலைக் கோபுரத்துக்கும் வெளிப்புறத்தில், கோபுரத்தை யொட்டிய தெற்குப் பக்கத்தில் சென்பக விநாயகர் வீற்றிருக்கிறார். இந்த ஆலயத்தின் அருகிலிருந்த சென்பக வனத்தில் சுயம்புவாக இருந்த விநாயகரை இங்கு கொண்டு வந்து நிறுவியுள்ளதாகக் கூறப்படுகிறது.

மழுபொருத்த விநாயகர்

கிழக்குத் திசையில் உள்ள இரு கோபுரங்களுக்கும் இடையில், உட்புற மதிற்சுவரில் உள்ள ஐந்து மாடநிலைக் கோபுரத்திற்கும்

தென்கிழக்கில் உள்ள சூர்யபுஷ்கரிணி தீர்த்தத்திற்கும் (அதே நேர் கோணத்தில்) சற்று முன்பாக மழுபொருத்த விநாயகர் தனிச் சன்னதியில் வீற்றிருக்கிறார்.

பலிபீட விநாயகர்

கிழக்கிலிருந்து பலிபீடம், நந்தி மண்படம், கொடிமரம் ஆகியன கருவறையை நோக்கி நேர்வரிசையில் உள்ளது. இதில் பலிபீடத்திற்கும் முன்னதாக சிறிய சந்நதியில் விநாயகர் கிழக்கு நோக்கி வீற்றிருக்கிறார்.

கணநாதர் ரகசியம்

கிழக்குத் திசையில் உட்புற மதிற்சுவரில் உள்ள 4 மாடநிலைக் கட்டைக் கோபுரத்தின் வெளிப்புற வலது (தெற்கு) பக்கம் 'கணநாதர் ரகசியம்' என்ற பெயருடன் தனிச்சன்னதி ஒன்று இருக்கிறது. கணநாதர் என்றால் விநாயகர். ஆனால் இங்கு விநாயகர் சிற்பம் இல்லை. வேறு எந்த சிற்பமும் இடம் பெறவுமில்லை. "கணநாதர் ரகசியம்" என்பதால் இங்கு விநாயகர் அருவமாகவுள்ளார் என கூறப்படுகிறது.

வாரண வள்ளல்

ஸ்ரீ நாகநாத சுவாமிக் கருவறையை ஒட்டிய உட்பிரகாரத்தில், தென்மேற்கு மூலையில் ஸ்ரீ வாரணவள்ளல் என்ற பெயரில் விநாயகர் உள்ளார்.

தேவராஜ கணபதி

குன்றுமாமுலை அம்மன் ஆலயத்தில் மகா மண்டபத்தில் நந்திதேவருக்கும் வலதுபுறத்தில் உள்ள மண்டபத்தில் தேவராஜகணபதி வீற்றிருக்கிறார். இம்மண்டபத்தின் நான்கு தூண்களும் வட்டவடிவில் உள்ளது. இந்த மண்டபம் காலத்தால் பிந்தியவை எனக் கருதலாம்.

நர்த்தனக் கணபதி

குன்றுமாமுலை அம்மன் கருவறையின் வலதுபுற தேவ கோஷ்டத்தில் நர்த்தனக் கணபதி சிலை உள்ளது.

சுரம்தீர்த்த விநாயகர்

குன்றுமாமுலை அம்மன் கருவறையை ஒட்டி பள்ளமான சுற்றுப்பாதை உள்ளது. அதையடுத்து மேடானத் திருச்சுற்றாலை உள்ளது. இதில் தென்மேற்குத் திசையில் சுரம்தீர்த்த விநாயகர் அமர்ந்த நிலையில் உள்ளது குறிப்பிடத்தக்கது ஆகும்.

சுயம்பு ஆதி விநாயகர்

இத்திருக்கோயில் ஸ்ரீவிநாயகப் பெருமான் (ஸ்தல விநாயகர்) இத்திருக்கோயில் நிர்மாணிப்பதற்கும் முன்பிருந்தே உள்ளதாக ஸ்தல மகாத்மியம் கூறுகிறது. இவ்விநாயகரை அகஸ்தியர், துர்வாஜர், கௌசிகர், காசிபர் மற்றும் 18 சித்தர்களும், ஞானிகளும் வழிபட்டு விமோசனம் பெற்றதாக ஒரு செவிவழிச் செய்தியுண்டு.

கதவு அன்பளிப்பு

கிழக்குத் திசையில் உட்புற மதிற்சுவரில் உள்ள நான்கு மாடநிலைக் கட்டைக் கோபுரத்தின் இரண்டு பெரிய மரக் கதவுகளும் கி.பி. 1896-இல் செய்யப்பட்டிருக்கிறது. இதை அறிவிக்கும் பட்டையம், இக்கோபுரத்தின் தெற்குப்புறக் கதவில் பொருத்தப்பட்டிருக்கிறது. "1896-ஆம் ஆண்டு சூன் மாதம் 13-ஆம் தேதி, தமிழ் துன்முகி வருடம் ஆனி மாதம் 1-ஆம் தேதி என்ற நாள் குறிப்புகளுடன், திருநாகிச்சரம் ஸ்ரீநாகநாதசுவாமி கோயில் கோபுர வாசல் கதவு இரண்டும் இதே ஊரைச் சேர்ந்த கீழவடம்போக்கித் தெருவின் காத்தான் வைத்தியலிங்கம் பிள்ளை குமாரர் ராமசாமிப் பிள்ளையின் உபயம" என்றும், முடிவில் குன்றுமாமுலை அம்மன் துணை என்றும் பொறிக்கப்பட்டுள்ளது.

நாகநாத கொத்தனார்

குரங்கு உருவ சிற்ப தூணுக்கும் தெற்கில் கருவறை நடைபாதை உள்ளது. அப்பாதைக்கும் தெற்கில் பாதையை ஒட்டிய தூண் ஒன்றின் கீழ் நான்கடிகளுக்குள் "நாகநாத கொத்தனார்" என்ற பெயருடன் மனித உருவம் செதுக்கப் பட்டுள்ளது. மனித உருவ சிற்பத்தின் மேல்பகுதியில், வளைவாக நாகநாத கொத்தனார் என்று செதுக்கப்பட்டுள்ளதால் ஆலயப் பணி செய்த சிற்பி என்று கருத இடமுண்டு.

திருக்குளம்

நாகநாதசுவாமி ஆலயத்தின் தென்கிழக்கு மூலையில் (அக்னி மூலை), "குட்டவல்வினை நோய் தீர்க்கும் சூர்ய புஷ்கரிணி தீர்த்தம்" என்ற பெயருடன் திருக்குளம் இருக்கிறது. திருக்குளத்திற்கு நுழைவாயில் வடக்கு, மேற்குப் பக்கங்களிலும் உள்ளன. திருக்குளத்தின் நான்கு பக்கங்களிலிருந்தும், படிகள் கீழ்நோக்கி திருக்குளத்தின் மையப்புள்ளியை நோக்கிச் செல்வதுபோல் படிகள் கட்டப்பட்டிருக்கின்றன. திருக்குளத்தின் வடக்கு, மேற்குப் பக்கங்களில் மக்கள் பாதுகாப்பாக நீராடுவதற்கு தடுப்புக் கம்பி அமைக்கப் பட்டுள்ளது. திருக்குளத்தின் நான்கு பக்கங்களிலும் மதிற்சுவர் கட்டப்பட்டுள்ளது. மதிற்சுவருக்கும் திருக்குளப்படிக்கும் இடையில் உள்ள பகுதியில் கூண்டு வடிவ மூடுதளப் பகுதியுடன் மண்டபமும் இரண்டு வரிசைத் தூண்களும் உள்ளன.

நிலத்தடி வாய்க்கால் அமைப்பு

திருக்குளத்தில் நீர்வற்றாமல் இருக்க, ஆலயத்தின் தென்மேற்குத் திசையில் ஓடும் காவிரியாற்றில் இருந்து அரசலாற்றுக்கும், அரசலாற்றிலிருந்து எமதீர்த்த குளத்திற்கும், எமதீர்த்த குளத்திலிருந்து, ஆலயத்தில் உள்ள சூரிய புஷ்கரிணித் திருக்குளத்திற்கு நிலத்தின்கீழ் மூடி அமைக்கப்பட்ட வாய்க்கால் (பாதாள) வழியாக நீர் வந்திருக்கிறது. அதேபோல் சூர்யபுஷ்கரிணியிலிருந்து நீர் வெளியேற, ஊரின் கிழக்குப் பகுதியில் உள்ள பிடாரிக்குளத்திற்கு பாதாள வழியாகவே நீர் வெளியேற்றப்பட்டிருக்கிறது. தற்போது இந்த பாதாள போக்குவரத்து வழி அடைபட்டிருக்கிறது. சுற்றுப் பகுதிகளில், விழும் மழைநீரே இன்று இக்குளங்களை நிரப்புகின்றன. அது போதாமையால், ஆலயத்தின் வடக்குப் பகுதியில் உள்ள ஆழ்குழாய் கிணற்றிலிருந்து திருக்குளத்திற்கு நீர் நிரப்பப்படுகிறது. திருக்குளத்தின் வடமேற்கு மூலையில் திருக்குளத்திற்கு நீர் வரத்து வழி உள்ளது.

அர்த்தநாரீஸ்வரத் தத்துவக் கருவறை

நாகநாதசுவாமி மூலவர் கருவறை தெற்குப்பக்கமும், பிறையணியம்மனின் கருவறை வடக்குப் பக்கமுமாக இருகருவறையும்

கிழக்கு நோக்கி அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு கருவறையைச் சுற்றியும் தனித்தனிச் சுற்றுப்பாதை இல்லாமல், இரண்டுக்கும் சேர்த்து ஒரே சுற்றுப்பாதையாக உள்ளது. சுவாமி கருவறையின் வடக்குப்புறச் சுவரும், அம்பாள் கருவறை அர்த்தமண்டபத்தின் தெற்குப் புறச் சுவரும் இணைந்துள்ளதால், இறைவனையும், இறைவியையும் தனித்தனியாக சுற்றி வர முடியாது. அர்த்தநாரீஸ்வரராகவும், அர்த்தநாரீஸ்வரியாகவும் விளங்கும் இறைவன், இறைவியர் அர்த்தநாரீஸ்வர தத்துவத்திலேயே இங்கு அருள்பாலிக்கின்றனர். சுவாமியின் வலது பாகத்தில் அம்பாளும், அம்பாளின் இடது பாகத்தில் இறைவனும் அமைந்திருக்கும், அர்த்தநாரீஸ்வர தத்துவத்தைப் போலவே, கிழக்கு நோக்கிய இறைவனின் கருவறைக்கு இடதுபுறம் கிழக்கு நோக்கிய அம்பாள் கருவறையும், கிழக்கு நோக்கிய அம்பாள் கருவறைக்கு வலதுபுறம் கிழக்கு நோக்கிய இறைவனது கருவறையும் அமைக்கப்பட்டுள்ளன.

திருச்சிற்றம்பலமுடையான் மண்டபம்

குலோத்துங்க சோழனிடம் அமைச்சராகப் பணிபுரிந்த சேக்கிழார் நாகநாதசுவாமியின்மேல் பற்றுக் கொண்டு இவ்வாலயத்தில் திருச்சிற்றம்பலமுடையான் எனும் மகா மண்டபத்தை எடுப்பித்தார். நாகநாத சுவாமி கருவறையின் முன் மண்டபமாக இம்மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தின் நுழைவாயிலின் தெற்குபுறம் அதிகார நந்திகேஸ்வரர் தனித்து நின்ற நிலையில் உள்ளார்.

சேக்கிழார் சிற்பம்

திருச்சிற்றம்பலமுடையான் மண்டபத்தில் கீழ்புறத்தில் வடக்கு நோக்கி சேக்கிழார் சிற்பம் அமர்ந்த நிலையில் இருக்கிறது. சேக்கிழார்க்கு வலதுபுறம் சேக்கிழாரின் தாயார் அழகாம்பிகையின் சிற்பம் நின்ற நிலையில் இருக்கிறது. சேக்கிழாருக்கு இடது புறம் சேக்கிழாரின் தம்பி பாலறாவாயர் சிற்பம் அமர்ந்த நிலையில் இருக்கிறது. இம்மூன்று சிற்பங்களும் - எதிர்திசையில் தெற்கு நோக்கியுள்ள நடராஜர் மண்டபத்தில் நடனமிடும் நடராஜரை கைகூப்பி வணங்கிய வண்ணம் உள்ளன.

சேக்கிழார் வைகாசிப் பூசப் பெருவிழா

தெய்வச் சேக்கிழார் பிறப்பெடுத்தது வைகாசி மாத பூச நட்சத்திரத்திலாகும். சைவ சமயத்திற்கும், இத்திருக்கோயிலுக்கும்

தெய்வச் சேக்கிழார் ஆற்றிய திருத்தொண்டுக்காக, இத்திருக்கோயில் நிர்வாகம் சேக்கிழாரின் பெயரில் 1968-ஆம் ஆண்டு முதல் "சேக்கிழார் வைகாசிப் பூசப் பெருவிழா" என்ற விழாவை நடத்தி சேக்கிழாருக்கு பெருமை சேர்த்துவருகிறது.

சேக்கிழார் வைகாசிப் பூசப் பெருவிழா நாட்களில், திருக்கோயில் நிர்வாகம் முதல் நாள் விழா ஏற்பாடுகளை செய்து கொள்கிறது. மற்ற நாட்களில் சைவமடங்கள், ஆதீனங்கள் தங்கள் பொறுப்பில் விழாக்களை நடத்துகின்றன.

வடதிருநாகேஸ்வரம்

சேக்கிழார் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த செல்வமலி குன்றத்தூர் என்னும் ஊரில் பிறந்தவர். குலோத்துங்கனிடம் அமைச்சர் பொறுப்பேற்றுச் செயல்பட தன் ஊரை விட்டு வந்தார். சோழர் தலைநகராக விளங்கிய கங்கை கொண்ட சோழபுரத்துக்கு அருகில் உள்ள திருநாகேஸ்வரத்தில் உள்ள நாகநாதசுவாமி மேல் பக்திப் பற்றுதல் கொண்டார். அதன் விளைவாக இத்திருக்கோயிலில் திருச்சிற்றம்பலமுடையான் எனும் மகா மண்டபத்தையும் எடுப்பித்தார். மேலும், பக்திப் பற்றுத் தனியாதவராக, தான் பிறந்த குன்றத்தூரிலேயே நாகநாதசுவாமிக்கு ஆலயம் எடுப்பித்து வடதிருநாகேஸ்வரம் என பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

நால்வரும் - பரவையாரும்

திருச்சிற்றம்பலமுடையான் மண்டபத்தின் கீழ் ஓரத்தில் வடக்கு நோக்கி கிழக்கிலிருந்து பரவையார், சுந்தரர், ஞானசம்பந்தர், அப்பர், மாணிக்கவாசகர் ஆகியோரின் திருவுருவச்சிற்பங்கள் நின்ற நிலையில், தனியாக சிறு மண்டபத்தில் இருக்கின்றன. பரவையார், சுந்தரமூர்த்திப் பெருமானின் துணைவியாவார்.

திருநாகேஸ்வரத் தேவாரப் பதிகங்கள்

திருநாகேஸ்வரத்து இறைவனை சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடியுள்ளனர். ஞானசம்பந்தர் இரண்டு பதிகங்களில் 22 பாடல்களும், அப்பர் மூன்று பதிகங்களில் 30 பாடல்களும், சுந்தரர் ஒரு பதிகத்தில் 11 பாடல்களும் பாடியுள்ளனர்.

நவக்கிரக மண்டலத்தில் சூரியன், மேற்கு நோக்கி நடுவில் வீற்றிருக்கிறார். மற்ற எட்டு கிரகங்களும் சூரியனை நோக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

சனிபகவான்

நவக்கிரக மேடைக்கும் வடக்கில், சனி பகவான் தனி மேடையில் மேற்கு நோக்கி வீற்றிருக்கிறார்.

வாகனங்கள்

உற்சவ மூர்த்திகள் புறப்பாட்டிற்காக பலவகை வாகனங்கள் உள்ளன. வாகனங்கள் அனைத்தும் அலங்கார மண்டபத்தில் (கருவறை நோக்கிச் செல்லும் பாதைக்கும்) சனிபகவான் மேடைக்கும் வடக்கில் தரைதளத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. உற்சவ நாட்களில் மட்டும் உற்சவமூர்த்திகளுடைய வாகனம் பயன்படுத்தப்படுகிறது.

செப்புத் திருமேனிகள்

இத்திருக்கோயிலில் சமயம் சார்ந்த உற்சவ வழிபாடுகள் மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. காலை, மதியம், மாலை, இரவு, கிழமை, திதி, நட்சத்திரம், மாதாந்திரம் மற்றும் வருடாந்திரம் சார்ந்த உற்சவ வழிபாடுகள் கடைபிடிக்கப்படுகின்றன.

கருவறைத் தெய்வங்களுக்கு நடத்தப்படும் வழிபாட்டு முறைகளுக்கு இணையாக உற்சவத்திருமேனிகளுக்கும் வழிபாட்டு முறைகள் கடைபிடிக்கப்படுகின்றன. உற்சவத்தெய்வங்களைப் பொறுத்தவரை, அத்தெய்வங்கள் பக்தர்கள் இருக்குமிடத்திற்கு உற்சவகாலத்தில் வந்து, தரிசனம் தந்து அருள்புரிபவையாக உள்ளன.

உற்சவங்களைப் பொறுத்தவரை திருக்கோயிலின் உற்சவ மண்டபத்தில் நடத்தப்படும் உற்சவங்கள் என்றும், கோயிலின் உள் வளாகத்திற்குள் (உட்பிரகாரங்களுக்குள்) நடத்தப்படும் உற்சவங்கள் என்றும், கோயிலுக்கு வெளியே வெளிமாட வீதிகளில், ஊர் தெருக்களில் நடத்தப்படும் உற்சவங்கள் என்றும் பல வகையான உற்சவங்கள் நடத்தப்படும்.

இத்திருக்கோயிலில் உள்ள முக்கியமான கருவறைத் தெய்வங்களுக்கும், மற்றும் சில தெய்வங்களுக்கும் உற்சவத் திருமேனிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

அந்தந்த தெய்வத்திற்குரிய செப்புத்திருமேனிகளை - அந்தந்த தெய்வத்திற்குரிய விழா நாட்களில் சிறப்புக்குரிய வகையில் வழிபாடு செய்யப்படுகிறது. மற்ற நாட்களில் உற்சவர்களுக் கென்று ஒதுக்கப்பட்டுள்ள அறையில், வைத்து பாதுகாக்கப்படுகிறது.

செப்புத்திருமேனிகள் என்பது 'செம்பு' எனும் உலோகத்தால் ஆனது என்று பொருள்படும். செம்பு உலோகத்தை மட்டும் முழுவதும் பயன்படுத்தி தெய்வத்திருமேனிகள் வடிவமைக்க முடியாது. அதனால் செம்பு, பித்தளை, ஈயம், வெள்ளி, தங்கம் ஆகிய உலோகங்களை பயன்படுத்தி - கலவையாக்கப்பட்டு தெய்வத்திருமேனிகள் வடிவமைக்கப்படுகின்றன. இக்கலவையில் 'செம்பு' உலோகத்தின் அளவு கூடுதலாக இருக்கும். இதனால், இவைகள் 'செப்புத்திருமேனிகள்' மற்றும் ஐம்பொன் (பஞ்சலோக) சிலைகள் என்று அழைக்கப்படுகின்றன.

இக்கோயிலில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலகட்டத்தைச் சேர்ந்த 25 செப்புத் திருமேனிகள் இருக்கின்றன. இவை அனைத்தும் அந்தந்த காலகட்டத்தைச் சேர்ந்த செப்புத்திருமேனி வடிவமைப்பு முறையில் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

ஆண்டுவாரியாக இவ்வாலயத்தில் செய்யப்பட்டுள்ள செப்புத்திருமேனிகள் பற்றிய விபரம்,

1. கி.பி. 11-12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாகநாத விநாயகர்.
2. கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அம்மன்
   (இருபுறமும் தோழியர்கள் இணைந்தது)
3. கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சண்முகம்
   (சுப்பிரமணியர், வள்ளி, தெய்வானை)
4. கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிங்காரவேலர்
5. கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த போகசக்தி அம்மன்

நாயன்மார்கள்

அர்த்தநாரீஸ்வரத்தத்துவக் கருவறையை ஒட்டியப் பிரகாரத்தில், வடக்குத் திசையில் உள்ள திருச்சுற்றுத் திண்ணையில் நாயன்மார்கள் திருவுருவ சிற்பங்கள் உள்ளன. இந்த ஆலயத்தில் நாயன்மார்கள் அர்த்தநாரீஸ்வரத்தத்துவக் கருவறையின் வடக்குத் திசையிலிருந்து தெற்கு நோக்கி வீற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. நாயன்மார்களின் எண்ணிக்கை அறுபத்தி மூன்று. ஆனால் இங்கு 9 நாயன்மார்களின் திருவுருவச்சிற்பங்கள் கூடுதலாக, மொத்தம் 72 திருவுருவச் சிற்பங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

63 நாயன்மார்களை பெரிய புராணத்தில் படம் பிடித்துக்காட்டிய சேக்கிழாரையும் சேர்த்து மொத்தம் 64 நாயன்மார்கள் என சில சைவர்கள் கூறுகின்றனர். இவ்வாலயத்தில் இடம்பெற்றுள்ள 63+9=72 நாயன்மார்களின் திருவுருவச் சிற்பங்களில் சேக்கிழார் இடம்பெறவில்லை. சேக்கிழார் இவ்வாலயத்தில் திருச்சிற்றம்பலமுடையான் எனும் மகா மண்டபத்தை எடுப்பித்ததும், தான் பிறந்த குன்றத்தூரில் வடதிருநாகேஸ்வரம் அமைத்ததும் குறிப்பிடத்தக்கது.

கூடுதலாக உள்ள ஒன்பது நாயன்மார்களையும் தில்லைவாழ் அந்தணர்கள் அல்லது தொகை அடியார்கள் என்று ஒரே பெயரால் குறிப்பிட்டுவிடுவார்கள். ஆனால், இவ்வாலயத்தில் 9 நாயன்மார்கள் சிற்பங்களுக்கும் தனிப்பெயர் மற்றும் குழுப்பெயர் எழுதியிருக்கின்றனர். கூடுதலாக உள்ள ஒன்பது நாயன்மார்களின் சிற்பங்களுக்குரிய பெயர்களாவன:

1. பொய்யடிமை இல்லாத புலவர்
2. முனையடுவார்
3. பத்தராயப் பணிவார்
4. சித்தத்தை சிவன் வைத்தார்
5. திருவாரூர்ப் பிறந்தார்கள்
6. திருவாரூர்ப் பிறந்தார்கள்

7. முப்போதும் திருமேனி தீண்டுவார்
8. முழுநீறு பூசிய முனிவர்
9. அப்பாலும் அடிசார்ந்தார்

அறுபத்துமூவர் குருபூசை வழிபாடு

இவ்வாலயத்தில் ஒவ்வொரு ஆண்டும் அந்தந்த நாயன்மார்களின் திருநட்சத்திர நாட்களில், மாலையில் குருபூஜை வழிபாடு நடைபெறுகிறது. அந்தந்த நாயன்மார்கள் வாழ்க்கையை விவரிக்கும் சமயச் சொற்பொழிவும் அன்றைய தினம் நடைபெறுகிறது.

அறுபத்துமூவர் குருபூசை வழிபாடு சித்திரபானு ஆண்டு (2002-2003) அட்டவணையில் 63 நாயன்மார்களுடன் 5 பேர் சேர்த்து குரு பூஜை நடைபெறும் என அச்சிடப்பட்டுள்ளது. கூடுதலாக குருபூசை நடத்தப்படுவோரின் பெயர்களாவன.

1. சேக்கிழார் - பெரியபுராணம் இயற்றியவர்
2. மெய்கண்டதேவர் - சந்தானகுரவரில் ஒருவர்
3. தண்டியடிகள் - சைவர்
4. முனையடுவார் - கூடுதலாக உள்ள 9 நாயன்மார்களில் இவரின் திருவுருவ சிற்பம் உள்ளது.
5. தொகையடியார்கள் - எண்மர்.

கண்ணாடிப் பள்ளியறை

சேக்கிழார் பெருமான் எடுப்பித்த திருச்சிற்றம்பலமுடையான் மகா மண்டபத்தில், வடகிழக்கு மூலையில் கண்ணாடிப் பள்ளியறை உள்ளது.

நவக்கிரக அமைப்பு

அர்த்தநாரீஸ்வரத்தத்துவ கருவறையை நோக்கிச் செல்லும் பாதையில் அலங்கார மண்டபத்தில் வடக்குப்புறம் உள்ள துவாரபாலகருக்கு எதிர் இடதுபுற மேடையில் நவக்கிரக சிற்பங்கள் உள்ளன.

சுந்தரர் தம் தேவாரத்தில் பிறையணியம்மன், கிரி குஜாம்பிகை ஆகிய இருதேவியரையும் நினைத்து முறையே 'பிறையணிவாணுதலாளுமை' என்றும், 'குன்றமலைக்குமரி' என்றும் பாடியுள்ளார்.

வீரமுட்டி

திருச்சிற்றம்பலமுடையான் மண்டபத்தில் வீரமுட்டி என்கிற பெயருடன் மனித சிற்பம் நின்ற நிலையில் இருக்கிறது.

சோமாஸ்கந்தர்

அர்த்த மண்டப தெற்குச் சுவருக்கும் தெற்கில், சற்று இடைவெளி விட்டுத் திருச்சிற்றம்பலமுடையான் மகா மண்டபத்தில் தென்மேற்குப் பகுதியில், கிழக்கு நோக்கி செப்புத் திருமேனியராகச் சிவபெருமான், பார்வதி, முருகன் ஆகியோர் இணைந்து சோமாஸ் கந்தராக தனிச்சன்னதியில் வீற்றிருக்கின்றனர்.

இருதொகுதி சப்தமாதர்கள்

அர்த்தநாரீஸ்வரத்தத்துவக் கருவறைத் தெற்குபுறத் திருச்சுற்றுத் திண்ணையில் வடக்கு நோக்கி சப்தமாதர்கள் வீற்றிருக்கின்றனர். விநாயகர், பிராமி, மாகேஸ்வரி, கௌமாரீ, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி என்கிற வரிசையில் பெயர்கள் எழுதப்பட்டிருக்கின்றன. விநாயகர், இருதொகுதி சப்தமாதர்கள் உட்பட 15 சிற்பங்கள் இருக்கின்றன. இரு தொகுதி சப்தமாதர்கள் உள்ளதாலும், இவை சிவன் கோயில் பரிவார தெய்வத் தொகுதியைச் சேர்ந்தவை என்பதாலும் இங்கு இருகோயில்கள் இருந்திருக்கக் கூடிய வாய்ப்புள்ளது.

தட்சிணாமூர்த்திகள்

அர்த்தநாரீஸ்வரத்தத்துவக் கருவறையின் தென் திசைக் கோஷ்டத்தில் தெற்கு நோக்கி தட்சிணாமூர்த்தி வீற்றிருக்கிறார். இரண்டாம் பிரகாரத்தில் உட்புற மதிற் சுவரின் தென்மேற்குத் திசையிலும் ஒரு தட்சிணாமூர்த்தி தெற்கு பார்க்கத் தனிச் சன்னதியில் வீற்றிருக்கிறார்.

63 நாயன்மார்கள், 9 தொகையடியார்கள் அல்லது தில்லைவாழ் அந்தணர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள வரிசையில் ஒரு தட்சிணாமூர்த்தி சிற்பம் உள்ளது. நாயன்மார்கள் உள்ள தொகுதியின் முடிவில் ஒரு தட்சிணாமூர்த்தி சிற்பம் உள்ளது.

அருணகிரிநாதர்

அருணகிரிநாதர் திருநாகேஸ்வரத் தலத்தில் உள்ள முருகப்பெருமானை வணங்கி திருப்புகழ்ப்பாடல் பாடியுள்ளார்.

திருச்சுற்று லிங்கங்கள்

அர்த்தநாரீஸ்வரத்தத்துவக் கருவறையின் பின்புறம், திருச்சுற்றுத் திண்ணையில் தெற்கில் முருகன் சன்னதிக்கு இடப்புறமிருந்து அகஸ்தியலிங்கம், பராசரலிங்கம், கௌதமலிங்கம், சனகர்லிங்கம், சனந்தனர்லிங்கம், சனாதனர்லிங்கம், சனத்குமாரர்லிங்கம், வியாக்ரபாதர்லிங்கம், மார்க்கண்டேயலிங்கம், பதஞ்சலிலிங்கம் ஆகிய லிங்கத் திருமேனிகள் உள்ளன.

நவகோட்டங்கள்

அர்த்தநாரீஸ்வரத்தத்துவக் கருவறையில், நாகநாதசுவாமி வீற்றிருக்கும் கருவறையைச் சுற்றி நவகோட்டங்கள் இருக்கின்றன. கருவறையின் வலதுபுறம் நான்கு தேவகோட்டங்களும், பின்புறம் ஒரு தேவ கோட்டமும், இடது புறம் நான்கு தேவகோட்டங்களும் இருக்கின்றன. நவ தேவ கோட்டங்களிலும் தெய்வ சிற்பங்கள் இடம்பெற்றிருக்கின்றன. நவகோட்டங்களிலும் வலப்புறமிருந்து ஆரம்பித்து விநாயகர், நடராஜர், அகஸ்தியர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோத்பவர், பிரம்மா, அர்த்தநாரீஸ்வரர், துர்க்கை, பிட்சாடனர் என்ற வரிசைக்கிரமமாக இடதுபுறம் முடியும் வரை வீற்றிருக்கின்றனர்.

சப்தகோட்டங்கள்

அர்த்தநாரீஸ்வரத் தத்துவக் கருவறையில், பிறையணி அம்மன் வீற்றிருக்கும் கருவறையைச் சுற்றி சப்தகோட்டங்கள் இருக்கின்றன. இந்த சப்தகோட்டங்களில் எந்த தெய்வச் சிற்பமும் இடம்பெறவில்லை.

6. கி.பி. 14-15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோமாஸ்கந்தர் (அம்மனுடன் இணைந்தது)
7. கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நந்தி
8. கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நடராஜர்
9. கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிவகாமி அம்மன்
10. கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தெய்வானை
11. கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுப்ரமணியர்,
12. கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வள்ளி
13. கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சந்திரசேகரர் (அம்மனுடன் இணைந்தது)
14. கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அய்யனார், பூர்னை, புஷ்கலை
15. கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மாணிக்கவாசகர்
16. கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பள்ளியறைச் சொக்கர் (பெரியது)
17. கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பள்ளியறைச் சொக்கர் (சிறியது)
18. கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரதோஷி நாயகர் (அம்மனுடன் இணைந்தது)
19. கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிட்சாண்டவர்
20. கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆடிப்பூர அம்மன்
21. கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாகராஜா
22. கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாகக்கன்னி
23. கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாகவல்லி
24. கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அஸ்திரதேவர்
25. கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சண்டிகேஸ்வரர்

இவ்வாலயத்தில் சங்கடஹர சதுர்த்தி முதலான விநாயகர் சம்பந்தப்பட்ட விழாக்களும், மாதாந்திர கார்த்திகை நட்சத்திரம், கந்தசஷ்டி, வைகாசி விசாகப்பெருவிழா முதலான முருகன் சார்ந்த விழாக்களும், பிரதோஷ விழா, கார்த்திகை பிரம்மோற்சவம், மார்கழி திருவாதிரைத் திருவிழா, நாயன்மார்கள் குருபூஜை விழா, சேக்கிழார் விழா, தேர்த்திருவிழா முதலான உற்சவங்களும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

மடப்பள்ளி

கிழக்குத் திசையில் உள்ள 4 மாடநிலைக் கோபுரத்திற்குள் உட்புறம் தெற்கு பக்கத்தில் திருச்சுற்றுத் திண்ணையில் மடப்பள்ளி இயங்கி வருகிறது. தெய்வங்களுக்கு படையல் செய்வதற்காகவும், பக்தர்களுக்கு பலவகை பிரசாதங்கள் வழங்குவதற்காகவும், மடப்பள்ளியில் பலவகைப் பிரசாதங்கள் தயாரிக்கப்படுகின்றன.

நாக உருவ சிற்பங்கள்

1) ஆலயத்தின் அக்னி மூலையில் உள்ள திருக்குளத்தின் மேற்குப்புற வாயிலின் உட்புறத்தில், வாயிலுக்கு தெற்குப்புறத்தில் கிழக்கு நோக்கிய பிள்ளையார் உட்கார்ந்த நிலையில் உள்ளார். பிள்ளையாருக்கும் தெற்கில் தரை தளத்தில் நாகச்சிற்பங்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன.

2) ஆலயத்தின் அர்த்தநாரீஸ்வரத்தத்துவக் கருவறையை ஒட்டிய உட்பிரகாரத்தில், தென்மேற்கு மூலையில் வாலைச் சுருட்டி மெத்தையாக்கிக் கொண்டு தலையை விரித்தபடி நாகச்சிற்பம் ஒன்று வடக்கு நோக்கி உள்ளது. நாகராஜர் என்ற பெயர் சுவரில் எழுதப்பட்டுள்ளது. நாகராஜருக்கு வடக்குப்புறம் தான் வாரண வள்ளல் என்ற திருநாமத்துடன் விநாயகர் வடக்கு நோக்கி வீற்றிருக்கிறார்.

3) குன்றுமாமுலையம்மன் ஆலயத்தில், அம்மன் கருவறைக்கு தெற்கில் உள்ள திருச்சுற்றுத் திண்ணையில் வாலைச் சுருட்டி மெத்தையாக்கிக் கொண்டு தலையை விரித்தபடி நாகச்சிற்பம் வடக்கு நோக்கி பதிக்கப்பட்டிருக்கிறது. பின்புற சுவரில் "ஸ்ரீராகு" என எழுதப்பட்டுள்ளது.

4) குன்றுமாமுலையம்மன் ஆலயத்தில், அம்மன் கருவறைக்கு நேர் எதிரில் உள்ள மதில் சுவரை ஒட்டி, கருவறையை (தெற்கு) நோக்கி கி.பி. 1783-ல் எழுதப்பட்ட ஒரு அரைத்தூண் கல்வெட்டு உள்ளது. இந்தக் கல்வெட்டின் வலது கீழ் பகுதியில் வாலை சுருட்டி மெத்தையாக்கிக் கொண்டு தலையை (படம்) விரித்தபடி ஒரு நாகச்சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது.

நாகக்கன்னிகை

குன்றுமாமுலையம்மன் ஆலயத்தில், அம்மன் கருவறையோடு இணைந்துள்ள வடக்குத் திசை உட்புற மதில் சுவரின் மேல் நாகக்கன்னிகை சிற்பம் தவம் செய்வதுபோல் வடக்கு நோக்கி வீற்றிருக்கிறது.

ஓவியங்கள்

1. அலங்கார மண்டபத்தில் நாயக்கர் கால ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. கருவறை நோக்கிச் செல்லும் நடைபாதையில் மூடுதளத்தின் கீழ்புறத்தில் கிழக்கு மேற்காகவும், கருவறை நோக்கி செல்லும் நடைபாதைக்கு வடக்குப்புறத்தின் மையத்தில் உள்ள பிரதோஷமூர்த்தி வழிபாடு நடைபெறும் இடத்திலிருந்து நடைபாதை வரை மூடுதளத்தின் கீழ்புறம் தெற்கு வடக்காகவும் ஓவியங்கள் வரையப்பட்டிருக்கின்றன.

மூடுதளத்தின் கீழ்ப்புறம் நடைபாதையில் கிழக்கு மேற்கில் வரையப்பட்ட ஓவியங்களாவன, கிழக்கிலிருந்து. . . .

1. கால சம்ஹார மூர்த்தி
2. ரிக்வேத மூர்த்தி
3. யஜுர்வேத மூர்த்தி
4. சாமவேத மூர்த்தி
5. அதர்வணவேத மூர்த்தி
6. சிவன், பார்வதி திருக்கல்யாணம்
7. விநாயகர், அர்த்தநாரீஸ்வரர், ஹயக்ரீவர்
8. சென்பகாரணியத்தில் கிரிகுஜாம்பாள் பஞ்ச தீபாக்கினியில் தவம்புரிதல்
9. கைலாயங்கிரியில் சிவன், பார்வதி உடன் நந்தி

10. நாகக் குடையின் கீழுள்ள லிங்கத்தை இறைவர்கள், தேவர்கள் வழிபடுகின்றனர்

11. பிரம்மா, லிங்கோத்பவர், விஷ்ணு

மூடுதளத்தின் கீழ்ப்புறம் நடைபாதைக்கு வடக்கில் வரையப்பட்ட ஓவியங்களாவன, தெற்கிலிருந்து . . . .

1. சிவபக்தர்கள், நாதஸ்வர மேளதாளத்துடன், கூட்டமாக வருகின்றனர்.
2. விநாயகர் மூஞ்சுறு வாகனத்தில் வருகின்றார்.
3. முருகன் மயில் வாகனத்தில் வருகின்றார்.
4. சிவன், பார்வதி காளை வாகனத்தில் வருகின்றார்கள்.
5. அம்பாள் அன்னபட்சியில் வருகின்றார்.
6. சிவன் பல்லக்கில் வருகின்றார்.

2. தனி ஆலயமாக உள்ள குன்றுமாமுலை அம்மன் ஆலயத்தில், தெற்குத் திசையில் உள்ள ஐந்து மாடநிலைக் கோபுர வாயிலுக்கு நேராகத் திருச்சுற்று உட்புற மதில் சுவரில், தெற்கு நோக்கி லட்சுமி (மேற்கு), குன்றுமாமுலையம்மை (நடுவில்), சரஸ்வதி (கிழக்கு) ஆகிய முத்தேவியரின் உருவ ஓவியங்களும் தீட்டப்பட்டிருக்கின்றன.

நூற்றுக்கால் மண்டபம்

கிழக்குத் திசையில் ஆலய வெளிப்புற மதிற்சுவரில் உள்ள 5 மாடநிலைக் கோபுரத்திற்கும் - உட்புற மதிற் சுவரில் உள்ள 4 மாடநிலைக் கட்டைக் கோபுரத்திற்கும் இடையில், கருவறை நோக்கிய நடைபாதைக்கும் வடக்கில், தனி ஆலயமாக உள்ள குன்றுமாமுலையம்மன் ஆலயத்திற்கு செல்லும் நடைபாதைக்கு மேற்கில் நூற்றுக்கால் மண்டபம் அமைந்திருக்கிறது.

நூற்றுக்கால் மண்டபம், நான்கு புறத்திலும் தேர்ச்சக்கரங்கள் தாங்கிய வடிவத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. நூற்றுக்கால் மண்டபத்தின் நுழைவாயில் தெற்குத் திசையில் உள்ளது.

தற்போது நூற்றுக்கால் மண்டபத்தின் மேற்குப் புறங்களில் உள்ள இரண்டு சக்கரங்களும் மண்ணில் புதைந்துள்ளன. கிழக்குப்

புறத்தில் உள்ள இரண்டு சக்கரங்கள் வெளியில் தெரிகின்றன. நூற்றுக்கால் மண்டபத்தின் உட்புறம், தெற்கு நோக்கிய அரங்க வடிவமைப்பு உள்ளது. வடக்கு ஓரத்தில் மேடை உள்ளது.

நாயக்கர் காலக் கட்டடக் கலையை நூற்றுக்கால் மண்டபம் பிரதிபலிக்கிறது.

தூண் கல்வெட்டு

குன்றுமாமுலையம்மன் ஆலயத்தில், கிழக்கு நோக்கிய அம்மன் கருவறைக்கு எதிர்புறத்தில் உள்ள (ஒட்டு மொத்த) ஆலயத்தின் வெளிப்புற மதிற்சுவரை ஒட்டி, மேற்கு நோக்கி ஒரு அரைத்தூண் கல்வெட்டு உள்ளது. கி.பி. 1783-இல் உள்ளூர் கடைக்காரர்களால் பொறிக்கப்பட்ட இந்தக் கல்வெட்டில் முழுச் செய்தியையும் அறியமுடிகிறது. அரைத்தூண் கல்வெட்டின் வலது கீழ் ஓரத்தில் வாலைச் சுருட்டி மெத்தையாக்கிக் கொண்டு தலையை விரித்தபடி ஒரு நாகச்சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது.

தூண் கல்வெட்டுச் செய்திகள்

அரைத் தூண் கல்வெட்டின் வலது மேல் ஓரத்தில் பிறையும் திரிசூலமும் பொறிக்கப்பட்டுள்ளன. பிள்ளையார் சுழியுடனும் ஸ்வஸ்திஸ்ரீ என்ற மங்கல வார்த்தையுடனும் ஆரம்பிக்கிறது. சாலிவாகனசகாப்தம் 1705க்கு நேரான 4884, குரோதி வருஷம் தை மாதமெனக் காலக் குறிப்புகள் இருக்கின்றன.

திருநாகேஸ்வரத்தின் தென்கோடியில் இருக்கும் உப்பிலியப்பன் கோயில் அருகே உள்ள முதல்கடை முதல், வடகோடியில் இருக்கும் ராவுத்தர் கடை வரைக்கும் உள்ள எல்லா கடைகளிலும், கடை ஒன்றுக்கு அரைக்காசு வீதம், அவரவர், கடைத் தெருவில் உள்ள ஒருவர் வசூலிக்க வேண்டும். வசூலித்தக் காசுகளை மொத்தமாக ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டும். அந்தக் காசுகளை வைத்துக் கொண்டு நாகலிங்க சுவாமியார், குன்றுமாமுலையம்மனுக்கு தினந்தோறும் திருவிளக்கொளி ஏற்றி வர வேண்டும். நாளுக்கு நாள்

திருவிளக்கொளி ஏற்றுவது குறைந்து வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளும் திருவிளக்கொளி ஏற்றும் போது வழிபாட்டிற்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கையை அறிந்து, அவர்களுக்குப் பரிபாலனம் செய்ய வேண்டுமென்றும் எழுதப்பட்டிருக்கிறது.

சன்னாபுரத்தில் உள்ள முதல் கடைக்காசு, வடக்கில் உள்ள ராவுத்தர் கடைக்காசும் ஆக இரண்டு கடை காசுகள் ஊரின் வடகோடியில் உள்ள ராவுத்தர் பள்ளி வாசலுக்கு மானியமாகக் கொடுத்துள்ளனர். இந்த விதிமுறைகளுக்கு உள்ளூர் கடைக்காரர்கள் அனைவரும் சம்மதித்து மகமைப் பட்டையும் செய்து கொடுத்திருக்கின்றனர்.

இந்த வழிபாட்டு நடைமுறைகளுக்கு தடங்கல், குந்தகம், விகாதம் நினைப்பவர்கள் இந்துக்களாயிருந்தால் கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற தோஷத்திற்கு ஆளாவார்கள் என்றும், ராவுத்தர்களாயிருந்தால் மக்கா நகரிலே செய்யக் கூடாத செயலை செய்த தோஷத்திற்கு ஆளாவார்கள் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

தத்புருஷ சக்தி

தனி ஆலயமாக உள்ள குன்றுமாமுலையம்மன் கருவறையின் முன்னுள்ள மகாமண்டபத்தில், கருவறை நடைபாதைக்கும் தெற்கில் - கருவறை நடைபாதையை ஒட்டி மேற்கு நோக்கி ஸ்ரீதத்புருஷசக்தி எழுந்தருளியுள்ளார்.

சங்கநிதி, பதுமநிதி

தனி ஆலயமாக உள்ள குன்றுமாமுலையம்மன் கருவறையின் முன்னுள்ள மகா மண்டபத்தில் கருவறை நடை பாதைக்கும் தெற்கில் - கருவறை நடைபாதையை ஒட்டி ஸ்ரீதத் புருஷ சக்திக்கும் பக்கத்தில் பதுமநிதி மேற்கு நோக்கியும், கருவறை நடைபாதைக்கு வடக்கில் - கருவறைப் பாதையை ஒட்டி சங்கநிதி மேற்கு நோக்கியும் அமைந்து உள்ளது.

பாலசாஸ்தா

தனி ஆலயமாக உள்ள குன்றுமாமுலையம்மன் கருவறையின் முன்னுள்ள மகா மண்டபத்தில், கருவறை நடை பாதைக்கும் தெற்கில் - மண்டபத்தின் தென்கிழக்கு மூலையில் வடக்கு நோக்கி பாலசாஸ்தாவும், பாலசாஸ்தாவிற்கு எதிரில் - பாலசாஸ்தாவை நோக்கி கிழக்கில் சிறிய குதிரை, மத்தியில் யானை, மேற்கில் பெரிய குதிரை ஆகிய வாகன சிற்பங்களும் நின்ற நிலையில் பதிக்கப்பட்டிருக்கின்றன.

இரகசிய வெளி

தனி ஆலயமாக உள்ள குன்றுமாமுலையம்மன் கருவறையை ஒட்டியுள்ள இரகசிய வெளித்திருச்சுற்றின் மேல் பகுதியில், கூட்டு வண்டிகளின் கூடுகள் போன்ற அமைப்பில் சிமெண்டால் ஆன மூடுதளம் போடப்பட்டுள்ளது.

கருவறையை ஒட்டியுள்ள இரகசிய வெளித்திருச்சுற்று கருவறைக்கு வலது, பின், இடது பக்கங்களில் (பள்ளமாக) தாழ்வானப் பகுதியாக உள்ளது. முன் மண்டபத்திலிருந்து 4 படிக்கட்டுகள் இறங்கும்படி தாழ்வாக உள்ளது.

பெண் தெய்வ உருவங்கள்

தெற்கு இரகசிய வெளியை அடுத்தத் திருச்சுற்றுத் திண்ணையில், கருவறைக்கும் தெற்கு வலது புறத்தில் ராகுவுக்கும் தெற்கில் வடக்குப் பார்த்து ஒரு அம்பிகை சிற்பம் அமர்ந்த நிலையில் உள்ளது.

கருவறையின் பின்புறம் திருச்சுற்றுத் திண்ணையில் கருவறைக்கும் தென்மேற்கில் சுரம்தீர்த்த விநாயகருக்கும் வடக்கில் பெண் தெய்வம் கிழக்குப் பார்த்து நின்ற நிலையில் உள்ளது.

கருவறையின் பின்புற தேவகோட்டத்துக்கு எதிரில், திருச்சுற்றுத் திண்ணையில் பெண் தெய்வம் கிழக்குப் பார்த்து அமர்ந்த நிலையில் உள்ளது. எதிர் அருகிலேயே ரிஷப வாகனமும், பெண் தெய்வத்தை (மேற்கு) நோக்கியுள்ளது.

கருவறைக்கும் வடக்குப்புறத்தில் திருச்சுற்றுத் திண்ணையில், தெற்குப் பார்த்து அம்மன் சிற்பம் அமர்ந்த நிலையில் உள்ளது. கருவறையின் பின்புறத்திருச்சுற்றுத் திண்ணையில் வடமேற்கில் பாலசுப்ரமணியருக்கும் வடக்கில் ஆண் தெய்வம் கிழக்குப் பார்த்து நின்ற நிலையில் உள்ளது. இந்த ஆண், பெண் தெய்வ உருவங்களுக்குரிய பெயர்கள் சுவரில் எழுதப்படவில்லை.

கோட்ட தெய்வங்கள்

குன்றுமாமுலையம்மன் கருவறையின் வலது (தெற்கு) புற கிழக்கிலிருந்து இரண்டாவதாக உள்ள தேவகோட்டத்தில் தெற்கு நோக்கி நின்றநிலையில் பிரம்மேஸ்வரி அருள்பாலிக்கிறார். கருவறையின் பின்புற தேவகோட்டத்தில் பெண் தெய்வ உருவ சிற்பம் இடம்பெற்றிருக்கிறது. இப்பெண் தெய்வத்தின் பெயர் குறிப்பிடப்படவில்லை. அம்மன் கருவறையின் இடது புறம் (வடக்கு) தேவகோட்டத்துடன் கூடிய கோமுகி உள்ளது. இத்தேவகோட்டத்தில் தெய்வ உருவம் இடம்பெறவில்லை. இதற்கடுத்து கிழக்கில் உள்ள தேவகோட்டத்தில் ஸ்ரீதுர்க்கைச் சிற்பம் வீற்றிருக்கிறது.

பாலசுப்ரமணிய சுவாமி

குன்றுமாமுலையம்மன் ஆலயத்தில் கருவறைக்கும் வடமேற்கு மூலையில் உள்ள திருச்சுற்றுத் திண்ணையில் பாலசுப்ரமணிய சுவாமி கிழக்கு நோக்கி நின்ற நிலையில் உள்ளது.

சண்டிகேஸ்வரி

கிழக்கு நோக்கிய குன்றுமாமுலையம்மன் கருவறையின் (இடது) வடக்குப் புறத்தில் தேவகோட்டத்துடன் கூடிய கோமுகி உள்ளது. இந்த கோமுகிக்கு வலது - எதிர்புறத்தில் கருவறை சுவரை நோக்கி சுமார் 4 அடி உயரத்தில் சண்டிகேஸ்வரி உருவச்சிலை அமைந்துள்ளது.

பைரவர்

குன்றுமாமுலையம்மன் ஆலயத்தின் மகா மண்டபத்தில் கிழக்கு நோக்கிய கருவறைப் பாதைக்கும் வடக்கில் கிழக்குத் திசை சுவரை ஒட்டி மேற்கு நோக்கியபடி பைரவர் உள்ளார்.

கருவறை தெய்வங்களின் அமைப்பு

குன்றுமாமுலையம்மன் ஆலயத்தின் கிழக்கு நோக்கிய கருவறையில் சரஸ்வதி, குன்றுமாமுலையம்மன், இலட்சுமி ஆகிய முத்தேவியரும் நின்ற நிலையில் உள்ளனர். மத்தியில் குன்றுமாமுலையம்மன் கிழக்கு நோக்கி நின்ற நிலையிலும் அம்பிகைக்கும் வலது (தெற்கு) புறத்தில் சரஸ்வதி வடக்கு நோக்கி நின்ற நிலையிலும், அம்பிகைக்கும் இடது (வடக்கு) புறத்தில் இலட்சுமி தெற்கு நோக்கி நின்ற நிலையிலும் உள்ளனர்.

கருவறையில் - நடுவில் குன்றுமாமுலையம்மனும், வலதுபுறம் சரஸ்வதியும், இடதுபுறம் இலட்சுமியும் என வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

ஓவியத்தில் - நடுவில் குன்றுமாமுலையம்மனும் வலதுபுறம் இலட்மியும், இடதுபுறம் சரசுவதியும் என வரையப்பட்டுள்ளது. குன்றுமாமுலையம்மன் ஆலயத்தில் வாயிற் காவலர்களாக துவாரபாலகிகள் இருபுறமும் வீற்றிருக்கின்றனர். சன்னதிக்கு எதிரில் காளைவாகனம் (நந்தி) வீற்றிருக்கிறது. பலிபீடமும் இருக்கிறது.

நவசக்திகள்

குன்றுமாமுலையம்மன் ஆலயத்தின் கருவறையைச் சுற்றியுள்ள திருச்சுற்று மேட்டில், வாமாயிதேவி, ஜேஷ்டாதேவி, ரௌத்ரிதேவி, காளிதேவி, கலவிகரணிதேவி, பலவிகரணிதேவி, பலப்ரமதன்யைதேவி, சர்வபூதசமணீ தேவி, மனோன்மணீ தேவி ஆகிய பெயர்களில் நவசக்திகளின் திருவுருவங்கள் வீற்றிருக்கின்றன.

திருச்சுற்று மதில் அமைப்பு

குன்றுமாமுலையம்மன் ஆலய திருச்சுற்று மதிலின் உட்புற சுவர் கீழிருந்து சுமார் 1 அடி உயரத்திற்கு பழைய கருங்கற்களால் கட்டப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் செங்கல் வைத்துக் கட்டப்பட்டிருக்கிறது.

உட்புறத் திருச்சுற்று மதிலின் மேல் நந்தி உருவங்கள் உள்ளன. அம்மதிலின் மேலேயே குடுமியுடன் ஒரு முனிவரும், மதில் சுவரின் தெற்குப் பக்கம் அமர்ந்த நிலையில் - தலை முழுவதும்

முடி இல்லாத நிலையில் (மொட்டையடித்த) ஒரு முனிவரும் தவம் மேற்கொண்டுள்ளனர். உட்புற மதில் இணையும் நான்கு மூலையிலும் இரு நந்திகள் இணையாமல், இருநந்திகளுக்கு இடையில் பெண் பூதகணம் சங்கை வைத்துக் கொண்டும், வணங்கிக் கொண்டுமிருக்கின்றன.

வழிபட்டோர்

அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் இவ்வாலய தெய்வங்களை வழிபட்டு, பாடியுமுள்ளனர். சேக்கிழார் பெருமானும் இவ்வாலய இறைவன் மேல் தனியா-பக்தித்தாகம் கொண்டு வணங்கி திருப்பணிகள் செய்துள்ளார்.

நந்தவனம்

கிழக்கு நோக்கிய நாகநாத சுவாமி ஆலயத்தின் பின்புறமும் (மேற்கு), இடது புறமும் (வடக்கு) உள்ள வெளிப்பிரகாரத்தில் மரம், செடி, கொடிகள் வளர்க்கப்படுகின்றன. அவை வேம்பு, தென்னை, புளி, பப்பாளி, மூங்கில், இளந்தை, எலுமிச்சை, வில்வம், கொய்யா, புங்கை, அரசு, தேக்கு, அத்தி, மா, பலா, வாழை, வாகை, இலவ, தூங்குமூஞ்சி, திருவாச்சி, சிகப்பு அரளிச்செடி ஆகியவை நந்தவனத்தில் வளர்க்கப்பட்டுள்ளது.

ஆலயத் திருப்பணி

நீர்த்தெளி (குடமுழுக்கு) விழாக்களின் போது ஒட்டுமொத்த ஆலயத் திருப்பணி செய்தபோது சுவர்களில் Sand Plast செய்ததில் சுவர்களில் எழுதப்பட்ட (கல்வெட்டு) எழுத்துகள் ஆங்காங்கே பெயர்ந்துள்ளன. கோபுரங்களில் உள்ள சிலைகளுக்கும் வண்ணந்தீட்டும் பணி நடைபெற்றிருக்கிறது. அவ்வப்போது தேவைக்கேற்றத் திருப்பணிகளையும் ஆலய நிர்வாகம் செய்து வருகிறது.

ஆலயப் பதிப்புகள்

ஆலயத்தின் சார்பாக அவ்வப்போது நடைபெறும் விழாக்களுக்கு அழைப்பிதழ்களும், ஆலயத்தைப் பற்றிக் குறிப்புகளடங்கிய புத்தகமும்

பதிப்பித்து வெளியிடப்படுகின்றன. சிலவற்றை ஆலய சேவகர்கள் பதிப்பித்துத்தர - அவற்றை ஆலய நிர்வாகம் இலவசமாக வழங்கி வருகிறது.

கால்கோள் விழா

அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் திருப்பணிக்காக 25-2-1972-ல் கால்கோள்விழா நடைபெற்றதற்கான கல்வெட்டும் இருக்கிறது.

நீர்த்தெளி விழாக்கள்

ஆலயத்தில் கி.பி. 1982, கி.பி. 1995களில் நீர்த்தெளி விழாக்கள் (கும்பாபிஷேகங்கள்) நடைபெற்றிருக்கின்றன.

இராகு கோடி திருமண மண்டபம்

ஆலயத்தின் சார்பாக இராகுகோடி திருமண மண்டபம் இயங்கி வருகிறது. இது ஆலயத்தின் பிரதான நுழைவு வாயிலாக (கிழக்கு மேற்காக) உள்ள (கிழக்கு வெளி இராஜகோபுரத்திற்கு எதிரில்) சிவன் சன்னதித் தெருவில் தெற்குப் பக்கம் வடக்குநோக்கி உள்ளது. இராகு கோடி திருமண மண்டபம் - திருமணம் சம்பந்தப்பட்ட உற்றார், உறவினர், சுற்றத்தார், நட்பினர் தங்குவதற்கும், திருமண விருந்து உண்பதற்கும் பயன்படுகிறது.

பக்தர்கள் தங்குமிடம்

ஆலயத்தின் பிரதான நுழைவு வாயிலாக (கிழக்கு மேற்காக) உள்ள சிவன் சன்னதியில், தெற்குப் பக்கம் கிழக்குத் திசை ஐந்துமாடநிலைக் கோபுரத்தின் (எதிர் வலது புறம்) அருகில் அடுக்குமாடிக் கட்டடம் உள்ளது. இதில் பக்தர்கள், வாடகை கொடுத்து தங்கி வருகின்றனர்.

பக்தர்களுக்குக் கட்டுப்பாடு

ஆலய நிர்வாகத்தாரால் ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்கு சில கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

1. ஆலயத்திற்குள் லுங்கி அணிந்து வரக்கூடாது.

2. ஆலயத்தைப் புகைப்படம் எடுக்கவோ, புகைப்படக் கருவிகளை ஆலயத் திற்குள் கொண்டு செல்லவோ அனுமதிக்கப்படமாட்டாது.

3. வெளியிலிருந்து கொண்டு வரும் நெய் தீபம் மற்றும் விளக்கு தீபம் ஆலயத்தினுள் ஏற்ற அனுமதிக்கப்படமாட்டாது.

வருமானம்

கோயிலுக்குப் பக்தர்கள் விவசாய நிலங்களைக் காணிக்கையாகக் கொடுத்துள்ளனர். இந்த விவசாய நிலங்களை கோயில் நிர்வாகம் விவசாயிகளிடம் குத்தகைக்கு விட்டு, குத்தகை நெல், குத்தகைப் பணம் ஆகியவற்றை வசூலிக்கிறது.

மேலும், பக்தர்கள் காணிக்கையாக உண்டியல்களில் காசு, பணம், நகைளை செலுத்துகின்றனர்.

திருக்கோயிலின் திருப்பணிக்கு நன்கொடையாக பக்தர்கள் பணம் கொடுக்கின்றனர். இந்தப் பணத்திற்காக பக்தர்களுக்கு இந்திய அரசின் நிதி அமைச்சகம் வருமான வரி விலக்கு அளித்துள்ளது.

அன்றும் இன்றும் கோயில் நிர்வாகம்

முதலாம் இராசேந்திரன் (கி.பி. 1012) திருநாகேஸ்வர கோயில் நிர்வாகத்தில் கவனம் செலுத்தியுள்ளதை அவனுடைய 8, 14, 30, 31-ஆம் ஆண்டு கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது.

அதில், கோயில் நிர்வாகம் சம்பந்தபட்ட அரசனின் முதன்மை அதிகாரி முதல் - கடைநிலை ஊழியர் வரை உள்ள பணி பற்றிய விபரங்களை அறிய முடிகிறது.

முதலாம் இராசேந்திரன் காலத்தில் உள்ள கோயில் நிர்வாகிகளுக்கு இணையாக - இன்றுள்ள கோயில் நிர்வாகிகளை காணலாம்.

அடுக்களைப் பெண்டுகள்

திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மைக் கல்வெட்டுச் செய்தியின்படி மடப்பள்ளியில் பெண்கள் பணிபுரிந்திருக்கின்றனர். அவர்களை அடுக்களைப் பெண்டுகள் என்று அழைத்திருக்கின்றனர். இன்றும் மடப்பள்ளியில் பெண்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்து, முஸ்லிம் ஒற்றுமை:

அன்று : கி.பி. 1783-இல் உள்ளூர் கடைக்காரர்கள் இந்து, முஸ்லீம் வேற்றுமையின்றி ஒற்றுமையுடன் ஒரு கல்வெட்டை எழுதியிருக்கின்றனர். அதில் குறிப்பிட்ட கடைகளுக்கு ½ காசு வீதம் வசூல் செய்து, அந்தத் தொகையில் குன்றுமாமுலையம்மனுக்கு விளக்கொளி ஏற்ற வேண்டுமென்றும், மொத்தக் கடையில் இரண்டு கடை காசுகள் பள்ளி வாசலுக்கு மானியமாகக் கொடுக்க வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

இன்று : அந்த நடைமுறை இன்று வழக்கத்தில் இல்லையென்றாலும், முஸ்லீம் உள்பட பிற மதத்தினரும் திருநாகேஸ்வரம் வந்து ராகுதோஷ நிவர்த்தி செய்து கொண்டு செல்கின்றனர் என்பதை ஆய்வின் போது நேரடியாகக் காண முடிந்தது.

இறைத்தொண்டு வழிபாடு

முதலாம் ஆதித்தன் காலம் (கி.பி. 872) தொடங்கி கண்டராதித்தன், சுந்தரசோழன், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், இரண்டாம் இராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன், கோனேரின்மைக் கொண்டான், கோப்பெருஞ்சிங்க தேவர், மற்றும் உள்ளூர்கடைகாரர்கள் (கி.பி. 1783) வரை இறைத் தொண்டு செய்த செய்திகள் கல்வெட்டில் இடம்பெற்றிருக்கின்றன.

பிறகு நாயக்கர் காலங்களிலும் இங்கு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

கோயிலுக்காக இறையிலி நிலங்கள், சாவாமூவாப் பேராடுகள், செப்புத் திருமேனிகள், அணிகலன்கள், உணவுகளுக்காக பொருட்கள் ஆகியவை கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவ்வப்போது இறைத் தொண்டுக்காக கட்டட வளர்ச்சியும் நடைபெற்றிருக்கிறது.

இன்றைய நிலையில் பக்தர்கள் தங்கும் அடுக்குமாடிக் கட்டடமும், குன்றுமாமுலையம்மன் ஆலயத்தின் தெற்கு வாயிலில் நீண்ட, மேல் மூடுதளமுடைய பந்தல் பாதையும் கட்டப்பட்டிருக்கிறது.

தூய பெருமாள் நல்லூர்

மூன்றாம் இராசராசனின் 19-ஆவது (கி.பி. 1234) ஆட்சியாண்டு கல்வெட்டில் "தூயபெருமாள் நல்லூர்" என்னும் புதிய ஊர் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. இப்பெயர், மக்கள் வழக்கில் திரிந்து இன்று 'தேப்பெருமாநல்லூர்' என்று வழங்கப்பட்டு வருகிறது.

சன்னாபுரம்

கி.பி. 1783-ஐச் சேர்ந்த உள்ளூர் கடைக்காரர்களின் கல்வெட்டில் சன்னாபுரம் என்று ஊர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பெயர் 'சன்னாபுரம்' என்ற பெயரிலேயே இன்றும் வழங்கப்பட்டு வருகிறது.

நந்தவனம்

கி.பி. 872-ஐச் சேர்ந்த முதலாம் ஆதித்தனின் கல்வெட்டில் கீழை நந்தவனம், மேலை நந்தவனம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் கோயிலில் தற்போது வடமேற்கு, வடக்கில்தான் நந்தவனம் உள்ளது.

சிவதர்மம் வாசித்தல்

இரண்டாம் இராசேந்திரனது இரண்டாம் ஆட்சியாண்டு (கி.பி. 1052) கல்வெட்டில் 'சிவதர்மம் வாசித்து வக்காணிப்பான்' என்று வருகிறது. அதாவது பக்தர்களுக்கு சிவதர்மத்தை எடுத்துச் சொல்பவன், சிவபக்திப் பாடல்களை பாடிப் பொருள் கூறுபவன் என்பதாகும்.

அதுபோல் தற்போதும், நிர்வாகத்தால் ஓதுவார், ஆலயப் புலவர் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் ஸ்ரீ சேக்கிழார் வைகாசிப்பூசப் பெருவிழா, சிவராத்திரி, பிரதோஷம், இராகுப் பெயர்ச்சி மற்றுமுள்ள பண்டிகைக் காலங்களிலும் பல்வேறு இலக்கிய, ஆன்மீகத் தலைப்புகளிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படுகிறது.

இறையிலி நிலம்

அன்று : இறையிலி நிலம் என்றால், தனியார் ஒருவர் தனக்குச் சொந்தமான நிலத்தைக் கோயிலுக்கு, பொதுக்

காரியங்களுக்குக் கொடுக்கும்போது, மன்னனிடமிருந்து வரிவிலக்குப் பெற்ற நிலமாகும். இத்திருநாகேஸ்வரம் திருக்கோயிலுக்கு (தனியார்கள்) பக்தர்கள் கொடுத்த நிலங்களுக்கு இறையிலி (வரிவிலக்கு) அளிக்கப்பட்டிருக்கிறது. இறையிலி நிலங்களை கோயில் நிர்வாகம் பலருக்கும் குத்தகைக்கு விட்டு குத்தகைத் தொகையைப் பெற்றுக் கொள்கிறது.

இன்று : நிலங்களை கொடைகளாக அளிக்காவிட்டாலும், நிதியை (பணம்) நன்கொடையாக கொடுக்கின்றனர். கோயிலுக்குக் கொடுக்கப்படும் நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அன்றைய இறையிலியே, இன்றைய வருமானவரி விலக்காக நடைமுறையில் உள்ளது.

கல்வெட்டுச் செய்திகள்

கல்வெட்டுகளின் காலம்

முதலாம் ஆதித்தன், கண்டராதித்தன் சுந்தர சோழன், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், இரண்டாம் இராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன், கோப்பெருஞ்சிங்கன் ஆகியோரின் கல்வெட்டுகள் இக்கோயிலில் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

கி.பி. 871-இல் ஆட்சிக்கு வந்த முதலாம் ஆதித்தனின் இரண்டாவது ஆட்சியாண்டு முதல் அ.·.தாவது கி.பி.872 முதல் கி.பி. 1216-இல் ஆட்சிக்கு வந்த மூன்றாம் இராசராசனின் 19-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு வரை அ.·.தாவது கி.பி.1234 வரையிலான கல்வெட்டுகள் இங்கு பொறிக்கப்பட்டுள்ளன. கி.பி. 1783-இல் இவ்வூர் வியாபாரிகளால் அளிக்கப்பட்ட கொடை பற்றிக் கூறும் கல்வெட்டொன்றும் இடம் பெற்றுள்ளது.

படியெடுத்தக் கல்வெட்டுகள்

திருநாகேஸ்வரம் கோயிலில் நான்கு கட்டங்களாகப் கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. முதன் முதலாக 1897, அடுத்து 1911, அதனையடுத்து 1931-32 படியெடுக்கப்பட்டுள்ளன. ஆய்வின் போது (2002) ஒரு கல்வெட்டும் ஆக மொத்தம் 26 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன.

1897-இல் படியெடுத்தக் கல்வெட்டுகள்	4
1911-இல் படியெடுத்தக் கல்வெட்டுகள்	12
1931-32-இல் படியெடுத்தக் கல்வெட்டுகள்	9
2002-இல் படியெடுத்தக்கல்வெட்டு	1
மொத்தம்	26

1897-இல் படியெடுத்தக் கல்வெட்டுகள்

நான்கு கல்வெட்டுகளும் முழுச் செய்திகளுடன் படியெடுத்த போது நல்ல நிலையில் இருந்துள்ளன.

1897-இல் படியெடுத்த நான்கு கல்வெட்டுகளும் இந்தியக் கல்வெட்டுத் துறையின் ஆண்டறிக்கையில் (Annual Report Indian Epigraphy) 81,82,83,84 என்ற வரிசை எண்களில் ஆங்கிலக் குறிப்புகள் மட்டும் பதிப்பிக்கப்பட்டுள்ளன. தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி 6-இல் இந்நான்கு கல்வெட்டுகளும் முழுவாசகங்களுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

1911-இல் படியெடுத்தக் கல்வெட்டுகள்

முதலாம் ஆதித்தன் கல்வெட்டு ஒன்றும், சுந்தரசோழன் கல்வெட்டு ஒன்றும், முதலாம் இராசராசன் கல்வெட்டு ஒன்றும், முதலாம் இராசேந்திரன் கல்வெட்டுகள் ஐந்தும், இரண்டாம் இராசேந்திரன் கல்வெட்டு ஒன்றும், இரண்டாம் இராசராசன் கல்வெட்டு ஒன்றும், மூன்றாம் இராசராசன் கல்வெட்டு ஒன்றும், கண்டராதித்தன் கல்வெட்டு ஒன்றும், ஆக மொத்தம் பன்னிரண்டு கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன.

படியெடுக்கப்பட்ட பன்னிரெண்டு கல்வெட்டுகளும் இந்தியக் கல்வெட்டுத் துறையின் ஆண்டறிக்கையில் (Annual Report) 211 முதல் 222 வரை வரிசை எண்களில் ஆங்கிலக் குறிப்புகள் மட்டும் இடம்பெற்றுள்ளன.

இவற்றில், கல்வெட்டு ஆண்டறிக்கை எண் 222, தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதியிலும் (வரிசை எண். 91) எண் 215 தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி 13-இல் (வரிசை எண். 197) முழுக் கல்வெட்டு வாசகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஏனைய 211, 212, 213, 214, 216, 217, 218, 219, 220, 221 ஆகிய பத்துக் கல்வெட்டுகளின் முழுவாசகங்கள் இதுவரை வெளியிடப்படாமல் உள்ளன.

1931-32-இல் படியெடுக்கப்பட்டக் கல்வெட்டுகள்

முதலாம் குலோத்துங்கனின் கல்வெட்டுகள் நான்கும், மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டு ஒன்றும், மூன்றாம் இராசராசானின் கல்வெட்டுகள் இரண்டும், சகலபுவனச் சக்கரவர்த்திகள் கோப்பெருஞ் சிங்க தேவனின் கல்வெட்டு ஒன்றும், இத்திருநாகேஸ்வரத்தின் தென் பகுதியில் இருக்கும் உப்பிலியப்பன் கோயிலில் மன்னனின் பெயர், ஆட்சியாண்டு குறிப்பிடாத தமிழ்மொழிக் கல்வெட்டு ஒன்றும், ஆக ஒன்பது கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன.

இந்த ஒன்பது கல்வெட்டுகளும் இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை எண் 65, 66, 67, 68, 69, 70, 71, 72, 73 என்ற வரிசை எண்களில் ஆங்கிலக் குறிப்புகளுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளின் முழுவாசகங்கள் இதுவரை வெளிவரவில்லை

2002-இல் ஆய்வின்போது படியெடுக்கப்பட்ட கல்வெட்டு

2002 சூலையில் கள ஆய்வின்போது கி.பி. 1783-ஆம் ஆண்டு கல்வெட்டு ஒன்று கண்டறியப்பட்டது.

எழுத்துகள், மொழிகள்

திருநாகேஸ்வரத்தில் உள்ள பெரும்பாலானக் கல்வெட்டுகளின் தொடக்கத்தில் 'ஸ்வஸ்திஸ்ரீ' என்ற மங்கலச் சொல்லை எழுதியிருக்கின்றனர். அனைத்துக் கல்வெட்டுகளிலும், ஒருசில சொற்களுக்கு கிரந்த எழுத்துகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.

முதலாம் ஆதித்தனின் 2-ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்தக் (கி.பி. 872) கல்வெட்டு ஸ்வஸ்திஸ்ரீ என்ற கிரந்த எழுத்துடன் தொடங்கி மேற்கொண்டு தமிழ் மொழியில், தமிழ் எழுத்துகளில் எழுதப்பட்டிருக்கிறது.

கண்டராதித்தனின் ஆட்சியாண்டு அறிய முடியாதக் கல்வெட்டு முழுவதும் கிரந்த எழுத்திலேயே உள்ளது.

சுந்தரசோழனது ஒன்பதாவது ஆட்சியாண்டு (கி.பி. 965) கல்வெட்டு. கிரந்த எழுத்துகளால் ஆன பாடல்களில் தொடங்குகிறது. பாடலில் சில வார்த்தைகள் (கல்வெட்டு படியில்) விடுபட்டிருக்கிறது. நான்கு வரி கொண்ட இரண்டு பாடல்களும் முடிந்தவுடன் 'ஸ்வஸ்திஸ்ரீ' என்ற மங்கலச் சொல்லுடன் மேற்கொண்டு தமிழ் மொழியில், தமிழ் எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளது. ஏனைய கல்வெட்டுகள் அனைத்தும் தமிழ் மொழியில் தமிழ் எழுத்துகளால் எழுதப்பட்டுள்ளன.

❁❁❁

வரிசை எண்	கல்வெட்டு ஆண்டறிக்கை எண்(ம) ஆண்டு	மன்னன் பெயர்	ஆட்சி ஆண்டு	கி.பி. ஆண்டு
1.	222/1911	முதலாம் ஆதித்தன்	2	872
2.	219/1997	கண்டராதித்தன்	-	-
3.	215/1911	சுந்தரசோழன்	9	965
4.	218/1911	முதலாம் இராசராசன்	14	998
5.	81/1911	முதலாம் இராசராசன்	14	998
6.	82/1897	முதலாம் இராசராசன்	14	998
7.	211/1897	முதலாம் இராசேந்திரன்	6	1017
8.	212/1019	முதலாம் இராசேந்திரன்	8	1019
9.	213/1911	முதலாம் இராசேந்திரன்	14	1025
10.	83/1911	முதலாம் இராசேந்திரன்	30	1041
11.	217/1911	முதலாம் இராசேந்திரன்	31	1042
12.	216/1911	முதலாம் இராசேந்திரன்	-	-
13.	214/1911	இரண்டாம் இராசேந்திரன்	2	1052
14.	65/1931-32	முதலாம் குலோத்துங்கன்	4	1073

வரிசை எண்	கல்வெட்டு ஆண்டறிக்கை எண்(ம) ஆண்டு	மன்னன் பெயர்	ஆட்சி ஆண்டு	கி.பி. ஆண்டு
15.	68/1931-32	முதலாம் குலோத்துங்கன்	40	1109
16.	66/1931-32	முதலாம் குலோத்துங்கன்	46	1115
17.	679/31-32	முதலாம் குலோத்துங்கன்	40க்குமேல்	-
18.	221/1931-32	இரண்டாம் இராசராசன்	-	-
19.	72/1181	மூன்றாம் குலோத்துங்கன்	4	
20.	70/1931-32	மூன்றாம் இராசராசன்	8	1223
21.	71/1931-32	மூன்றாம் இராசராசன்	8	1223
22.	220/1911	மூன்றாம் இராசராசன்	19	1234
23.	84/1897	ஸ்ரீதிரிபுவனசக்கரவர்த்தி (கோனேரின்மைக் கொண்டான்)	-	-
24.	69/1931-32	கோப்பெருஞ்சிங்கன் 3	-	-
25.	2002	உள்ளூர் வியாபாரிகள்	-	-
26.	73/1931-32	-	-	-

கல்வெட்டுகளில் மெய்க்கீர்த்திகள்

சோழ மரபில் தோன்றி, குறுநில மன்னனாக விளங்கிய விசயாலயன் ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தஞ்சையை ஆண்டு வந்த முத்தரையர்களை வென்று தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு கி.பி. 846-இல் சோழராட்சியை மலரச் செய்தான். சோழ மரபில் ஆட்சி செய்த மன்னர்கள் விசயாலயன் தொடங்கி முறையே பரகேசரி, இராசகேசரி என்ற சிறப்புப் பட்டப் பெயர்களை சுழற்சி முறையில் அடுத்தடுத்து ஆட்சி பொறுப்பேற்கும் மன்னர்கள் சிறப்புப் பட்டமாக அவர்களின் பெயருக்கு முன்பு சேர்த்துக் கொண்டனர்.

பரகேசரி, இராசகேசரி என்ற அடைமொழியைக் கொண்டே அரசர்களை அடையாளம் தெரிந்து கொள்ளலாம். இதனினும் மிகத் தெளிவாக அரசர்களை அடையாளம் தெரிந்து கொள்வதற்கு மெய்க்கீர்த்திகள் பயன்பட்டு வருகிறது என்றால் மிகையாகாது.

மெய்க்கீர்த்திகளின் மூலம் குறிப்பிட்ட அரசனின் பெயர் தெளிவாக உணரப்படுகிறது. மெய்க்கீர்த்தியில் மன்னரின் வெற்றிகள், குலமரபுச் செய்திகள் போன்றவை கிடைக்கின்றன. சோழ மன்னர்களில் உச்சநிலை மன்னனாக விளங்கியவன் முதலாம் இராசராசனே. இவன் தான் முதன் முதலில் மெய்க்கீர்த்தியை கல்வெட்டுகளில் எழுதியவன். முதலாம் இராசராசனுக்குப் பிறகு வரும் ஒவ்வொரு மன்னரும் மெய்க்கீர்த்திகளின் தொடக்க அடிகளை மாற்றி, தான் பெற்ற வெற்றி, புகழ், பொருள், வழங்கிய கொடை முதலியவற்றை புறத்திணைகளின் இலக்கணக் கூறுகளுக்கிணங்க செம்பிலும், கல்லிலும் வெட்டி வைத்தனர். சில மன்னர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மெய்க்கீர்த்திகள் உண்டு.

மெய்க்கீர்த்திக் காலத்திற்கு முற்பட்டக் கல்வெட்டுகள்

சோழர்களின் குல முறைப்படி பரகேசரி விசயாலயனை அடுத்து ஆட்சிக்கு வந்த இராசகேசரி முதலாம் ஆதித்தனின் (கி.பி. 871-907) இரண்டாவது ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்றும், அடுத்து கி.பி. 950-957-ல் ஆட்சி செய்த இராசகேசரி கண்டராதித்தன் கல்வெட்டு

ஒன்றும், பரகேசரி அரிஞ்சயனை அடுத்து ஆட்சிப் பொறுப்பேற்ற இராசகேசரி சுந்தர சோழனின் (இரண்டாம் பராந்தகன்) 9-ஆம் ஆட்சியாண்டு (கி.பி. 965) கல்வெட்டு ஒன்றும் இக்கோயிலில் மெய்க்கீர்த்திகள் இல்லாமல் கிடைக்கின்றன.

முதலாம் ஆதித்தனின் கல்வெட்டு (கி.பி. 872) "ஸ்வஸ்திஸ்ரீ கோராசகேசரி பன்மற்க்கு யாண்டு இரண்டாவது" என்றும் கண்டராதித்தனின் கல்வெட்டு (கி.பி. 950-957) "ஸ்ரீகண்டராதித்ய" என்று தொடங்கும் இக்கல்வெட்டு கிரந்தக் கல்வெட்டாகவும் சுந்தர சோழனின் கல்வெட்டு (கி.பி. 965) வடமொழி ஸ்லோகத்துடன் "ஸ்வஸ்தி ஸ்ரீ கோவி ராசகேசரி பன்மற்க்கு யாண்டு 9வது" என்றும் தொடங்குகின்றன.

மேற்கண்ட மூன்று மன்னர்களும் முதலாம் இராசராசன் காலத்திற்கு முந்தியவர்கள். ஆகையால், அப்பொழுது வழக்கில் இருந்த பரகேசரி, இராசகேசரி மரபு முறை பட்டத்தினைக் கையாண்டனர்.

இராசராசனின் மெய்க்கீர்த்தி

மெய்க்கீர்த்தி எழுதும் பழக்கத்திற்கு வித்திட்ட முதலாம் இராசராசனின் 14-ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்த மூன்று கல்வெட்டுகள் கோயிலில் கிடைத்துள்ளன. அவற்றில், ஒரு கல்வெட்டு "கோவி ராஜ ராஜ ராஜகேஸரி பன்மற்க்கு யாண்டு ௰ச-ஆவது" என்று தொடங்குகிறது. இந்தக் கல்வெட்டில் முதலாம் இராசராசனின் மெய்க்கீர்த்தி இல்லை. ஆனால் முதலாம் இராசராசனின் 14-ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்த மற்ற இரண்டு கல்வெட்டுகளும் மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகின்றன.

"ஸ்வஸ்தி ஸ்ரீசாலை கலைமறுத்தருளி கங்கபாடியும்
நுளம்பபாடியும்
தடிகை பாடியும் வேங்கை நாடும் கொண்ட
கோவி ராஜ ராஜ ராஜகேஸரிபந்மர்க்கியாண்டு ௰ச-வது"

இரண்டு கல்வெட்டுகளிலும் மேற்கண்ட மெய்க்கீர்த்தி வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

முதலாம் இராசேந்திரனின் மெய்க்கீர்த்தி

முதலாம் இராசராசனை அடுத்து ஆட்சிப் பொறுப்பேற்றவன் அவனுடைய மகன் முதலாம் இராசேந்திரன் ஆவான். முதலாம் இராசேந்திரனுக்கு "திருமன்னி வளர" என்ற ஒரே தொடக்க அடியையுடைய மெய்க்கீர்த்தி மட்டுமே காணப்படுகிறது. இவனுடைய ஆறு கல்வெட்டுகள் இக்கோயிலில் காணப்படுகின்றன.

முதலாம் இராசேந்திரனுடைய ஆறாவது ஆட்சியாண்டைச் சேர்ந்த (கி.பி. 1017) கல்வெட்டு "திருமன்னி வளர" என்று தொடங்கி "தொல் பெருங்காவல் பல்பழந்தீவும்" என்பதுடன் முடிகிறது. இம்மன்னனின் 8-ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்த (கி.பி. 1019) கல்வெட்டு "திருமன்னி வளர" என்று தொடங்கி செம் பொற்திருத்தகு முடியும் மாம்பெரும் தண்டால் கொண்ட கோப்பரகேசரி என கூடுதலாகச் சென்று முடிகிறது. மேலும் இம்மன்னனின் 14, 30, 31- ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் "திருமன்னி வளர" என்று தொடங்கி "தொடுகடற் காவற் கடுமுரட் கடாரமும்" என்பது வரை இன்னும் கூடுதல் வரலாற்றுச் செய்திகளைத் தெரிவித்து முடிகிறது.

மேலுள்ள மெய்க்கீர்த்திகளை நோக்கும்போது இம்மன்னனின் 14-ஆம் ஆட்சியாண்டு (கி.பி. 1025) கல்வெட்டிலும், 31-ஆம் ஆட்சியாண்டு (கி.பி. 1042) கல்வெட்டிலும் மெய்க்கீர்த்தி செய்திகள் கூடுதல் குறைவின்றி ஒத்துப்போகின்றன.

இதன் மூலம் முதலாம் இராசேந்திரன் தன்னுடைய 14-ஆம் ஆட்சியாண்டுக்குப்பின் 31-ஆம் ஆட்சியாண்டு வரை வெற்றிக் கொண்ட நாடுகளையும் இழக்காமல் அமைதியான ஆட்சி நடத்தி வந்திருக்கிறான் என்பது புலனாகிறது.

இரண்டாம் இராசேந்திரனின் மெய்க்கீர்த்தி

இரண்டாம் இராசேந்திரனின் இரண்டாவது ஆட்சியாண்டு கி.பி. 1052) கல்வெட்டு ஒன்று இங்குள்ளது. இவனுடைய மெய்க்கீர்த்திகள் வெவ்வேறு தொடக்க அடிகளைக் கொண்டு ஒன்றுக்கு மேற்பட்டனவாக உள்ளன. இத்திருக்கோயிலில் உள்ள கல்வெட்டு,

"ஸ்வஸ்திஸ்ரீ இரட்டபாடி ஏழரை இலக்குமுங்
கொண்டு பெரியாற்றங்கரைக் . . . ."

என்ற தொடக்க அடிகளைக் கொண்டுள்ளதாக மெய்க்கீர்த்தி உள்ளது.

முதலாம் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தி

முதலாம் குலோத்துங்கனின் ஆட்சிக் காலத்தைச் சார்ந்த நான்கு கல்வெட்டுகள் இங்கு பொறிக்கப்பட்டுள்ளன. முதலாம் குலோத்துங்கனுக்கு வெவ்வேறு தொடக்க அடிகளைக் கொண்ட ஆறுக்கும் அதிகமான மெய்க்கீர்த்திகள் இருக்கின்றன.

முதலாம் குலோத்துங்கனின் 4-ஆம் ஆட்சியாண்டைச் (கி.பி.1073) சார்ந்த கல்வெட்டும், இவனின் 40-ஆவது ஆட்சியாண்டைச் (கி.பி.1109) சார்ந்த கல்வெட்டு ஒன்றும் "புகழ் மாது விளங்க" என்ற அடி கொண்ட மெய்க்கீர்த்தியும் இங்கு காணப்படுகின்றன.

இரண்டாம் இராசராசனின் மெய்க்கீர்த்தி

இரண்டாம் இராசராசனின் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த (கி.பி. 1146-1163) கல்வெட்டு ஒன்று இடம்பெற்றுள்ளது. இந்தக் கல்வெட்டு "ஸ்வஸ்தி ஸ்ரீ பூமருவிய பொழிலேழும் பொருப்பேழும் புனிநித்திலத்தாம" என்று தொடங்கி மெய்க்கீர்த்தி வாசகமே முற்றுப் பெறாத நிலையில் பொறிக்கப்பட்டுள்ளது.

"பூ மருவிய" என்ற தொடக்க அடியைக் கொண்டு இரண்டாம் இராசராசனுக்கு முன் ஆட்சிப் பொறுப்பிலிருந்த இரண்டாம் குலோத்துங்கனுக்கும், இரண்டாம் இராசராசனுக்குப் பின் ஆட்சி பொறுப்பேற்ற இரண்டாம் இராசாதிராசனுக்கும் மெய்க்கீர்த்திகள் இருக்கின்றன.

பூமருவிய புவியேழும் - இரண்டாம் குலோத்துங்கன்
பூமருவிய திருமாதும் புவிமாதும் - இரண்டாம் இராசராசன்
பூமருவிய பொருப்பேழும் புனிநித்திலத்தாம
- இரண்டாம் இராசராசன்
பூமருவிய திசைமுகத்தோன் - இரண்டாம் இராசாதிராசன்

கல்வெட்டில் உள்ள மெய்க்கீர்த்தியின் வாசகங்களோடு இரண்டாம் இராசராசனின் "பூமருவிய பொருப்பேழும் புனிநித்திலத்தாம" என்ற மெய்க்கீர்த்தியின் வாசகங்கள் ஒத்துப்போகின்றன என்பதால் இந்த மெய்க்கீர்த்தி இரண்டாம் இராசராசனுடையது என்பதை ஐயமின்றி ஏற்றுக் கொள்ள முடிகிறது.

மூன்றாம் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தி

மூன்றாம் குலோத்துங்கனின் 4-ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்த (கி.பி. 1181) கல்வெட்டு ஒன்று இங்குள்ளது. இவனுக்கு "புயல் வாய்த்து" என்ற ஒரே தொடக்க அடியைக் கொண்டு மெய்க்கீர்த்தி வாசகச் செய்திகள் வெவ்வேறாக உள்ள மூன்று மெய்க்கீர்த்திகள் உள்ளன.

மூன்றாம் இராசராசனின் மெய்க்கீர்த்தி

மூன்றாம் இராசராசனின் 8-ஆம் ஆட்சியாண்டைச் (கி.பி. 1223) சார்ந்த இரண்டு கல்வெட்டுகளும், 19-ஆம் ஆட்சியாண்டைச் (கி.பி. 1234) சார்ந்த ஒரு கல்வெட்டும் கிடைக்கின்றன. இம்மன்னனின் 8-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டில் "சீர் மன்னி இரு நான்கு" என்று மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. 19-ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்த கல்வெட்டில் "ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு பத்தொன்பதாவது" என்று தொடங்குகிறது. இக்கல்வெட்டில் மெய்க்கீர்த்தி இடம்பெறவில்லை.

கோப்பெருஞ்சிங்கன்

பிற்கால பல்லவ மன்னனான கோப்பெருஞ்சிங்கனின் 3-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு இவனை 'சகல புவனச் சக்கரவர்த்தி கோப்பெருஞ்சிங்க தேவன்' என்று கூறுகிறது. இவனது கல்வெட்டு ஒன்று மட்டுமே இங்குள்ளது.

பிற்காலக் கல்வெட்டு

கி.பி. 1783-இல் தூணில் வெட்டி வைத்த கல்வெட்டு ஒன்று உள்ளது. இக்கல்வெட்டு "ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம்" என்று தொடங்குகிறது. மெய்க்கீர்த்தி இதில் இடம்பெறவில்லை.

❀❀❀

கல்வெட்டுகளில் மன்னர்களின் பெயர்கள்

சோழர் குல மரபில் ஒரே பெயர் கொண்ட மன்னர்கள் இடைவெளிவிட்டு அடுத்தடுத்து ஆட்சி செய்துள்ளனர். பரகேசரி, இராசகேசரி என்ற பட்டப் பெயர்களில் பரகேசரி பட்டப் பெயரை ஒரே பெயர் கொண்ட மூவர் பெற்றிருக்கின்றனர். இராசகேசரிப் பட்டப் பெயரை இருவர் பெற்றிருக்கின்றனர்.

ஒரே பெயரைக் கொண்ட மூவரை அடையாளம் காண முதலாம், இரண்டாம், மூன்றாம் என மரபு வழியாக எண்ணிட்டு பெயரைச் சேர்த்துக் குறிப்பிடுகிறோம். சில மன்னர்கள் தங்கள் பட்டப் பெயரையும், சில அரசர்கள் தங்கள் இயற்பெயரையுமே கல்வெட்டில் பொறித்துள்ளனர். கோயிலில் உள்ள கல்வெட்டுகளில் மன்னர்களின் பெயர்கள் பின்வருமாறு:

முதலாம் ஆதித்தன் - கோராசகேசரி பன்மற் (2*)

கண்டராதித்தன் - ஸ்ரீ கண்டராதித்ய

சுந்தரசோழன் - கோவிராசகேசரி பன்மற்(9*)

முதலாம் இராசராசன் - கோவி ராஜ ராஜ கேசரி பன்மற்(14*)

முதலாம் இராசேந்திரன் - கோப்பரகேசரி பன்மரான ஸ்ரீராஜேந்திர சோழ தேவர் (6,8,14)*

- கோப்பரகேஸரி பன்மரான உடையார் ஸ்ரீராஜேந்திர சோழ தேவர் (30,31)*

இரண்டாம் இராசேந்திரன் - கோப்பரகேஸரி பன்மரான உடையார் ஸ்ரீராஜேந்திர சோழ தேவர் (2)*

முதலாம் குலோத்துங்கன் - இராசகேசரிவர்மன் திரிபுவனச் சக்கர வர்த்திகள் (12*)

- குலோத்துங்க சோழ தேவர் (4)*

- இராசகேசரிவர்மன் குலோத்துங்க சோழ தேவர் (40*)

	-	திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலோத்துங்க சோழதேவா(46)*
இரண்டாம் இராசராசன்	-	மெய்க்கீர்த்தியின் தொடக்க அடி வாசகங்களை வைத்து அடையாளம் காட்டப்பட்டுள்ளது. மெய்க் கீர்த்தியே முடிவுறாத நிலையில் உள்ளது.
மூன்றாம் குலோத்துங்கன்	-	பரகேசரி வர்மன் திரிபுவனச் சக்கர வர்த்திகள் குலோத்துங்க சோழ தேவர் (4)*
மூன்றாம் இராசராசன்	-	திரிபுவனச் சக்கரவர்த்தின் ராஜராஜதேவர்(8)*
	-	இராஜகேசரி வர்மன் திரிபுவனச் சக்கரவர்த்திகள் இராஜராஜ தேவர் (8)*
	-	ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் (19)*
(கோனேரின்மைகொண்டான்)	-	ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான்
கோப்பெருஞ்சிங்கன்	-	சகல புவன சக்கரவர்த்திகள் கோப்பெருஞ்சிங்க தேவர்(3)*

(*அடைப்பு குறிகளுக்குள் மன்னரின் ஆட்சியாண்டு குறிக்கப்பட்டுள்ளது)

❁❁❁

காலக் கணியக் குறிப்புகள்

நாள், திதி, நட்சத்திரம், பட்சம், மாதம், சகஆண்டு, கலியாண்டு ஆகிய காலக்கணிய(பஞ்சாங்க ஜோதிட)க் குறிப்புகள் திருநாகேஸ்வரக் கல்வெட்டுகளில் காணமுடிகின்றன.

மூன்றாம் குலோத்துங்கன்

மூன்றாம் குலோத்துங்கனின் 4-ஆவது ஆட்சியாண்டு (கி.பி.1181) கல்வெட்டில்,

4-ஆவது ஆண்டு மேஷம்,
அணிலம் (Anilam)

மூன்றாம் இராசராசன்

மூன்றாம் இராசராசன் 8-ஆவது ஆட்சியாண்டு (கி.பி.1223) கல்வெட்டுகளில்

1) 8-ஆவது ஆண்டு 92-ஆவது நாள்

2) 8-ஆவது ஆண்டு கன்னி ஞாயிறு 7, சனிக்கிழமை, மூலம்

மூன்றாம் இராசராசனின் 19-ஆவது ஆட்சியாண்டு (கி.பி.1234) கல்வெட்டில்

> "ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்குயாண்டு பத்தொன்பதாவது மகர நாயற்று அபரபக்ஷத்து திரயோதசியும் புதன்கிழமையும் பெற்ற மிருக சீரிஷத்து நாள் உய்யக்கொண்டார் வளநாட்டு உடையார் திருநாகீஸ்வரமுடையார் . . . . "

இது, இவனின் 19-ஆவது ஆட்சியாண்டாகிய (கி.பி. 1234-ஆம் வருடத்தில்) தை மாதத்தில், அபரபக்ஷம் திரயோதசி புதன்கிழமை, மிருகசீரிஷம் நட்சத்திரம் ஆகியவற்றைக் குறித்து நிற்கிறது.

கோப்பெருஞ்சிங்கன்

சகலபுவனசக்கரவர்த்தி கோப்பெருஞ்சிங்கதேவரின் மூன்றாவது ஆட்சியாண்டு கல்வெட்டில்,

. . . . . 3, சனிக்கிழமை ரோஹிணி என்ற குறிப்பு காணப்படுகிறது.

உள்ளூர் வியாபாரிகள் :

கி.பி. 1783ல் உள்ளூர்க் கடைக்காரர்கள் வைத்தக் கல்வெட்டில்,
சாலிவாகன சகாத்தம் சூளாரு (1705)
கலியாத்தம் ச சூஆ அசச (4384)
குரோதிவருஷம் தை மாதம் என்று குறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டுகளில் நாடு, ஊர்ப் பெயர்

கி.பி. 871-இல் ஆட்சிக்கு வந்த முதலாம் ஆதித்தனின் இரண்டாவது ஆட்சியாண்டு அதாவது கி.பி. 872-ஆம் ஆண்டிலிருந்து, மூன்றாம் இராசராசனின் 19-ஆவது ஆட்சியாண்டு கி.பி.1234 வரை உள்ள கல்வெட்டுகளில் ஒவ்வொரு அரசாட்சி மாறும்போதும் வளநாடு, நாடு, இவைகளின் பிரிவுகளும் ஊர்ப்பெயரும் மாற்றம் பெற்றுள்ளது.

முதலாம் ஆதித்தன் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 872) தென்கரை திரைமூர் நாட்டு குமரமாத்தாண்டபுரம் பெருநகரத்தொம் என்றும், சுந்தரசோழன் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 965) தென்கரைத் திரைமூர் நாட்டு தேவதானம் திருவீரட்டானத் திருநாகீஸ்வரம் என்றும், முதலாம் இராசராசன் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 999) தென்கரைத் திரைமூர் நாட்டு தேவதானம் திருவிண்ணகர் திருநாகீஸ்வரம் என்றும், முதலாம் இராசேந்திரன் ஆட்சிக்காலத்தில் (கி.பி.1018) உய்யக் கொண்டார் வளநாட்டுத் திரைமூர் நாட்டுத் திருவிண்ணகர் திருநாகீஸ்வரம் என்று வளநாடு குறிக்கப் பெறுகிறது. இதே முதலாம் இராசேந்திரனின் 14-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1026) கைக்கொண்ட பாம்பூர் நாட்டு திருக்குடமூக்கில் திருநாகீஸ்வரம் என்றும் நாட்டுப்பெயர் மாற்றம் பெறுகிறது. இவனின் 30-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 1042) உய்யக்கொண்டார் வளநாட்டு பாம்பூர் நாட்டு திருக்குடமூக்கில் திருநாகீஸ்வரம் என்று வழங்கி வந்துள்ளது.

இரண்டாம் இராசேந்திரனின் இரண்டாவது ஆட்சியாண்டில் (கி.பி.1052) உய்யக்கொண்டார் வளநாட்டு பாம்பூர் நாட்டு திருக்குடமூக்கில் என்று வழங்கப்பட்டிருக்கிறது.

முதலாம் குலோத்துங்கனின் 4-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1073) உய்யக்கொண்டார் வளநாட்டு பாம்பூர் நாட்டு திருநாகேஸ்வர நல்லூர் என்றும், மூன்றாம் இராசராசனின் 19-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1134) உய்யக்கொண்டார் வளநாட்டு, உடையார் திருநாகீஸ்வரமுடையார்

கோயில் என்றும், கி.பி. 1783-இல் உள்ளூர் கடை வியாபாரிகள் செய்து கொடுத்த பட்டையம் மற்றும் கல்வெட்டில் திருநாகீசுவரம் என்று ஊர்ப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலாம் ஆதித்தச் சோழன் காலத்தில் 'குமரமாத்தாண்டபுரம்' என்றழைக்கப்பட்ட இவ்வூர் சுந்தரசோழன் காலம் முதல் 'திருநாகேஸ்வரம்' என்றழைக்கப்படுகிறது. இவ்வூர் ஆதித்த சோழன் முதல் முதலாம் இராசராசனது 14-ஆம் ஆட்சியாண்டு வரை (கி.பி. 999) தென்கரைத் திரைமூர் நாட்டுப் பிரிவில் இருந்துள்ளது. இராசராசனின் 15-ஆம் ஆட்சியாண்டிற்கு பின்னர் மண்டலங்கள் பல வளநாடுகளாக பிரிக்கப்பெற்றன. அவ்வாறு பிரிக்கப்பட்டதில் இவ்வூர் உய்யக்கொண்டார் வளநாட்டுப் பிரிவிலும் அதே திரைமூர் நாட்டுப் பிரிவிலும் அமைந்திருந்தது. முதலாம் இராசேந்திரனின் 6-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில் திரைமூர் நாட்டுப் பிரிவில் இருந்த இவ்வூர் முதலாம் இராசேந்திரனின் 14-ஆம் ஆட்சியாண்டு முதல் பாம்பூர்நாட்டுப் பிரிவில் இடம் பெற்றுள்ளது.

கல்வெட்டுகளில் நாடு, ஊர்ப் பெயர்கள்

திருநாகேஸ்வரத்தில் உள்ள கல்வெட்டுகளில் நாடு, ஊர், சபைகள் பற்றிய செய்திகளும் கிடைக்கின்றன.

திருநறையூர் நாட்டு பிரம்மதேயம் மாதான மங்கலமாகிய பாரதாயகுடி, திருநறையூர் நாட்டு பிரம்மதேயம் நல்லூச்சேரி, பனங்காட்டுப்புத்தூர், ஜனநாதபுரம், காட்டுப்புத்தூர், ஆவூர், உய்யக்கொண்டார் வளநாட்டு பாம்பூர்நாட்டு திருநாகீஸ்வரம், திருப்புத்தூர், நல்லூர், ஜயங்கொண்ட சோழமண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து மருதம், வெண்ணாட்டு நாகக் கோட்டகம், குலோத்துங்க சோழவளநாட்டு திருநறையூர் நாட்டு திருநறையூரான பஞ்சவன் மகாதேவிமங்கலம், தூயபெருமாள் நல்லூர், சுங்கந்தவிர்த்த சோழநல்லூர், திருக்குடமூக்கில், வீரசோழநல்லூர், விருதராஜ பயங்கர நல்லூர், கிழானடிமங்கலம், வாணகுல விளக்கமங்கலம், திருநாகீஸ்வரநல்லூர், ஆகிய ஊர்ப்பெயர்கள் இவ்வூர் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளன.

❁❁❁

கல்வெட்டுகளில் இறைவன், இறைவி பெயர்

சுந்தரசோழன் காலத்தில் திருவீராட்டானம் திருநாகீஸ்வரத்து உடையார் எனவும், முதலாம் இராசராசன் காலம் முதல் முதலாம் இராசேந்திரனின் 7-ஆம் ஆட்சியாண்டு வரை 'திருவிண்ணகரத் திருநாகீஸ்வரமுடைய மகாதேவர்' என்றும் முதலாம் இராசேந்திரனின் 13-ஆம் ஆட்சியாண்டிலிருந்து 31-ஆம் ஆட்சியாண்டு வரை திருநாகீஸ்வரமுடைய மகாதேவர் என்றும் அழைக்கப்பட்டுள்ளது.

முதலாம் இராசேந்திரனின் 31-ஆம் ஆட்சியாண்டின் இறுதியில் இராஜேந்திர சோழ பிரம்மஸ்வரமுடைய மகாதேவர் என்றும், முதலாம் குலோத்துங்கன் காலம் தொடங்கி மூன்றாம் இராசராசன் காலம் வரை திருநாகீஸ்வரமுடையார், உடையார் திருநாகேஸ்வரமுடையார் என்றும் அழைக்கப்பட்டுள்ளது. கி.பி. 18-ஆம் நூற்றாண்டு கல்வெட்டில் இவ்வூர்இறைவன் நாகலிங்க சுவாமியார் என்றும் அழைக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. எனவே சோழர் காலம் முழுவதும் இக்கோயில் இறைவனின் பெயர் திருநாகீஸ்வரமுடையார் என்னும் பெயரிலேயே அழைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

நிலங்கள், நிலப் பெயர்கள்

பரந்து விரிந்த இவ்வுலகில் ஒரு இடத்தைக் குறிப்பிடுவதற்கு எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் ஒரு பெயரைச் சூட்டி, அந்தச் சுட்டுப் பெயராலேயே அந்த நிலம் வழங்கி வந்துள்ளது.

திருநாகேஸ்வரத்தில் உள்ளக் கல்வெட்டுகளிலும் நிலங்களுக்குப் பல்வேறு இடச்சுட்டுப் பெயர்கள் வழங்கி வந்தமையைக் காணமுடிகிறது.

முதலாம் ஆதித்தனின் இரண்டாவது ஆட்சியாண்டு (கி.பி. 872) கல்வெட்டில் திருச்சுற்று கோபுரம் புதுப்பித்து திருப்பணி செய்வதற்கு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிலம் "புதுக்குப் புறம்" என்றழைக்கப்படுகிறது. "கீழை நந்தவனம், மேலை நந்தவனம்" என்று நந்தவனங்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

முதலாம் இராசராசனின் 14-வது ஆட்சியாண்டு (கி.பி. 998) கல்வெட்டில், அருமாச்செய், காற்செய், புன்சை நிலம் வாய்க் கூற்றுபுள்ளி நிலம், 'ஐயன் கோயிற் திடல்' முகச்சோழன்புள்ளி விளாகம், புஞ்சைத்திடல், இடைக்கண்டத்து நிலம், என்ற நிலப் பெயர்கள் காணப்படுகின்றன.

முதலாம் இராசேந்திரனின் ஆறாவது ஆட்சியாண்டு (கி.பி. 1017) கல்வெட்டில், ''இளைய குஞ்சிரமல்லரில் அடிகள்ளாச்சான் "காணியில்" என்ற குறிப்பு வருகிறது. "காணி" என்பது தனிப்பட்ட ஒருவருக்கு உரிமை உடைய நிலமாகும்

மூன்றாம் இராசராசனின் 19 ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 1234) கல்வெட்டில் 'திருநாமத்துக் காணியான', பெரிய உடையார் 'விளாகம்' மசானபூமி, கொல்லை நிலம், நத்தங்குழி என நிலங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

நீர்நிலைகள்

அகிசில் நீரோடு கால், பவுத்திரமாணிக்க வதி, இராசேந்திரசோழன் வாய்க்கால், அரிசிலாற்றங்கரை ஆகிய நீர்நிலைகள் இவ்வூர் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன.

நில எல்லைகள்

நிலத்தைப் பயன்படுத்தவதில், வாங்குவதில், விற்பதில் எல்லைகள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒருவரின் எல்லைக்குட்பட்ட நிலத்தை வாங்கும்போது அதன் சுற்றுப்புற எல்லைகளை ஆதாரப்பூர்வமாக தெரிந்து கொண்டே வாங்குகிறார். நில எல்லைகள் சம்பந்தப்பட்டப் பிரச்சினைகள் காலங்காலமாக எழாமல் இருக்க திருநாகீஸ்வரமுடையார்க்கு தேவதானமாகக் கொடுத்த இறையிலி நிலங்கள் அனைத்திற்கும், எல்லைகளைக் கோடிட்டுக் காட்டியிருக்கின்றனர்.

முதலாம் ஆதித்தன் :

". . . . திருச்சுற்றாலைக்கும் கோபுரத்துக்கும் புதுக்குப்புறமாக இப்பள்ளியின் கீழை நந்தவனத்துக்கும் மேலை நந்தவனத்துக்குமாக நகரத்தோம் கொள்ளும் வாராவைகல் ஆண்டடுத்துக் கொள்வது இத்திருச்சுற்றாலைக்குங் கோபுரத்துக்கும் புதுக்குப்புறமாக நகர அனுச்சையால் வைத்துக் கொடுத்தோம் இவ்வாராவையக்கல் கொள்கவென்று . . . " என்று முதலாம் ஆதித்தனின் 2-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 872) கல்வெட்டில் குமரமாத்தாண்டபுரத்து பெருநகரத்தார்கள், திருநாகீஸ்வரமுடைய மிலாடுடையார் பள்ளிக்கு " வாராவைகல் என்ற நிலத்தைக் கொடுக்கும்போது சுற்றுட்புற எல்லைகளைக் குறித்துக் கொடுத்திருக்கின்றனர்.

முதலாம் இராசராசனின் 14-.ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த மற்றொருக் கல்வெட்டில், " ..... நிலமாவன எங்கள் தென்னூர் அறுமாச்செயில் வாய்க்காங்கரை காற்செய்யூம் இதினுக்குட்படும் கையாற்றுக்கும் எல்லையாவது, கீழ்பாற்கெல்லை வெண்காடன் பிச்சானாழிகின்ற அறுமாச்செய்க்கு மேற்கின்னும், அறுமாசெய்க்கே தெற்கினும், மாதாக்காணி சிங்கன் புலிசை நிலத்துக்கு தெற்கினும், ஆரிதன் சோமன் திருவேங்கடமும் தம்பி மாரும் நிலத்துக்கு மேற்கினும், தென்பாற்கெல்லை அரிசில் நீரோடு காலுக்கு வடக்கும்

மேல்பாற்கெல்லையில் ஆரிதன் விளாகத்து கின்னும் இவ்விளாகத்துக்கே கிழக்கினும், இவ்விளாகத்துக்கே வடக்கினும் இவ்விளாகத்துக்கே கிழக்கும் வடபாற்கெல்லை அறு மாச் செய் வாய்க்காலுக்குத் தெற்கும் இவ்விசைத்த பெருநான்கெல்லையிலும் உள்பட்ட நிலம் மிகுதிக்குறையுள்ளடங்க வாய்க்கூற்று புள்ளிநிலம் பத்துமாவும்....."

இதில், தென்பாற்கெல்லை மூன்று எல்லைகளுக்கு வடக்கும், கீழ்பாற்கெல்லை இரண்டு எல்லைகளுக்கு மேற்கும் இறையிலியாக விற்றுக்குடுத்த நிலம் உள்ளது.

மூன்றாம் இராசராசனின் 19-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 1234) கல்வெட்டில்".....பவுத்திர மாணிக்கவதிக்கு கிழக்கு இராசேந்திரசோழன் வாய்க்காலுக்கு வடக்கு முதல் கண்ணாற்று இரண்டாம் சதிரத்து கொல்லை நிலம்...." இதில், மேற்கு தெற்கு ஆகிய இரண்டு சுற்றுப்புற எல்லைகள் மட்டுமே குறிக்கப்பட்டுள்ளன.

"..... இவ்வூர் தேர்போகும் வீதிக்கு கிழக்கு இராசேந்திர சோழன் வாய்க்காலுக்கு வடக்கு, இரண்டாங் கண்ணாற்று மூன்றாஞ்சதிரத்து நிலம் ஆறுமாக்காணியும் மூன்றாங் கண்ணாற்று இரண்டாஞ் சதிரத்து நிலம் அரையே மூன்றுமா முக்காணியும் ஆக நிலம் வேலியும்...." இதில், மேற்கு, தெற்கு புற எல்லைகளைக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"..... மசான பூமிக்கு அரிசிலாற்றங்கரையில் தேர்போகும் வதிக்குக் கிழக்கு இவர்களுக்கு சொந்த இடத்திலே இருபத்தைஞ்சு குழி விடக்கடவதாகவும்....."

இதில், மசானபூமி (சுடுகாடு)க்கு அரிசிலாற்றங்கரை ஓரத்தில் உள்ள வயல்களில் தேர்போகும் வதி(வயல்)க்கு கிழக்கில் உள்ள நிலத்தை ஒதுக்கி விட்டிருக்கிறார்கள்.

❁❁❁

இறையிலி

மன்னர்கள் மக்களிடமிருந்து, ஆறில் ஒரு பங்கு வருமானத்தை வரியாக வசூலித்து வந்திருக்கின்றனர். அந்தராயம், பீடிலிகை வரி (பீலிகை வரி) என்ற பெயர்களுள்ள வரிகளும் வசூலிக்கப்பட்டிருக்கின்றன.

இறையிலி என்ற சொல் அரசனுக்குக் கொடுக்க வேண்டிய வரியைத் தள்ளுபடி செய்ததையும், வரிவிலக்கையும் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர்.

முதலாம் இராசராசன் காலம்

முதலாம் இராசராசனின் 14-ஆவது ஆட்சியாண்டு (கி.பி.998) கல்வெட்டில் "பரமேஸ்வரர்க்கு சந்திராதித்தவர் இறையிலியாக விற்றுக் கொடுத்த நிலம்" சந்திரனும், சூரியனும் இந்த உலகம் இருக்கும் மட்டும், காலங்கடந்தும் ஒளிர்ந்து கொண்டிருப்பவர்கள், அவர்கள் உள்ள மட்டும் இந்நிலத்திற்கு வரி தள்ளுபடி செய்து இறையிலியாக விற்றுக் கொடுத்த நிலமென்று பொருள்படுகிறது.

முதலாம் இராசேந்திரனின் 6-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 1017) கல்வெட்டில்,

"அடிகளாச்சான் காணியில் அந்தராயத்தில் கூடின முதலில்"

அடிகளாச்சான் காணியில் அந்தராயம் என்னும் வரியின் மூலம் வந்த தொகையை முதலாகக் கொண்டு கோயிலுக்குத் திருப்பணி செய்யப்பட்டிருக்கிறது.

இவனின் 14-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 1025) கல்வெட்டில், பீடிலிகை வரி (பீலிகை வரி)யால் வந்த முதலைக் கொண்டு இறைவனுக்குத் திருப்பள்ளித் தாமரைப் பொற்பூ செய்து சாத்தியிருக்கின்றனர்.

அந்தராயம்

முதலாம் இராசராசனின் 18, 19, 20, 24, 25, 26 ஆம் ஆட்சியாண்டுகளிலும், முதலாம் இராசேந்திரனின் 24, 26

ஆட்சியாண்டுகளிலும் அந்தராய வரியின் மூலம் கிடைத்தப் பொன்னைக் கொண்டு திருநாகேஸ்வரமுடையார்க்கு பலவித பொன் அணிகலன்கள் செய்து சாத்தியிருக்கின்றனர்.

வெள்ளான் வெட்டி

வெள்ளான் வெட்டி என்பது சோழர் காலத்தில் வேளாண்மைப் பணிகளை இலவசமாக (வெட்டி) செய்வது வழக்கிலிருந்திருக்கிறது. "வெள்ளான் வெட்டி" வரியை பணமாகவோ, வேறு பொருளாகவோ கொடுக்க முடியாது. "வெட்டி" என்பது இலவசமாகச் செய்யப்படும் வேலையைக் குறிக்கும்.

வெள்ளான் வெட்டி என்பது ஏரி, குளம், வாய்க்கால் வெட்டுதல், தூர்வாறுதல், நிலச்சீரமைப்பு, மராமத்துப் பணிகளில் அரசனின் ஆணைப்படி நேரடியாக "ஆட்கள்" கலந்து கொள்வதையே குறிக்கிறது.

தேவதான இறையிலி

ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்தி (கோனேரின்மைக்கொண்டான்) கல்வெட்டில், "இவ்வூரோடும் தேவதான இறையிலி மாறிக் கூடின கிழானடி மங்கலத்திலும்" இதில், தேவதான இறையிலி என்பது சிவன் கோயில்களுக்கு வழங்கப்படும் நிலங்களுக்கு அரசன் வரிவிலக்கு அளித்ததாகும். மாறிக்கூடின என்ற வார்த்தையின் மூலம், ஒரு கோயிலுக்கு தேவதானமாக இருந்த நிலம் மற்றொரு கோயிலுக்கு தேவதானமாக மாறியிருப்பதைக் காட்டுகிறது.

நொந்தா விளக்குகள் தானம்

கால்நடைகளை கோயில் நிர்வாகம், கோயில் மன்றாடிகளிடம் ஒப்படைத்து தன் பெயரில் விளக்கொளி ஏற்றிவரச் செய்திருக்கின்றனர். கால்நடைகளில் பெரும்பாலும் ஆடுகளே விளக்கொளி ஏற்றுவதற்கான காணிக்கைப் பொருளாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

பெரும்பாலும் ஆடுகளைக் கொடுக்கக் காரணம், தாய் ஆடுகளில் பால் கறந்து, அந்தப் பாலைக் கொண்டு நெய் தயாரித்து, அந்த நெய்யின் மூலம் நெய்விளக்கு ஏற்ற சாவாமூவாப் பேராடுகளாக தானமளித்துள்ளனர்.

சாவாமூவாப் பேராடுகள் என்பது தான் ஈன்ற குட்டிகளும், அந்தக் குட்டிகள் பெரியதாகி அவைகள் ஈனும் குட்டிகளும் என பல்கிப் பெருகிவிடும், காலங்காலமாக அதன் வாரிசுகளும் வாழ்ந்து வரும். விளக்கொளி ஏற்றும் பணியும் தொடர்ந்து நடைபெற்று வரும். சிலர் நிலங்களைக் கொடை கொடுத்தும் நொந்தா விளக்கொளி ஏற்றச் செய்திருக்கின்றனர்.

நொந்தா விளக்கு என்பது இடைவிடாது தொடர்ந்து எரிக்கப்படும் விளக்காகும். கல்வெட்டுகளில் கூறப்படும் 'நொந்தாவிளக்கு', வழக்கில் மருவி இன்று நந்தா விளக்கு என்று அழைக்கப்படுகிறது.

சுந்தரசோழனின் 9-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 985) கல்வெட்டில், திருநாகீஸ்வரமுடையார் கோயிலில், பிள்ளையார் அரிகுலகேசரியார் மகளார் அறிஞ்சிகைப் பிராட்டியாராகிய ஸ்ரீபாணப் பெருந்தேவியார் என்பவர் தான் எழுந்தருளிவித்த அமரசுந்தரதேவர்க்கு, சிறுகாலை (காலை), உச்சியம்போதை (மதியம்), இராவை (இரவு) என மூன்று காலச் சந்தி (பூஜை)க்கு ஒவ்வொரு சந்திக்கும் இரண்டு விளக்குகளின் மூலம் விளக்கொளி ஏற்றியிருக்கின்றார். இந்த சந்தி விளக்கொளி ஏற்றும் பணி சந்திராதித்தவர் வரை செல்ல வேண்டும் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

சந்திவிடங்கி என்பவள் தன் மகள் அரையன் உத்தமதாநிக்காக இத்திருக்கோயிலில் நாள்தோறும் பகல் மட்டும் ½ நொந்தா விளக்கு

ஏற்ற நினைத்து, இப்பணி தொடர்ந்து நடைபெறுவதற்காக ஜனநாதபுரத்தைச் சேர்ந்த மன்றாடி (இடையர்) சிங்கன்முடவனிடம் 48 சாவாமூவாப் பேராடுகளை வழங்கியிருக்கிறார்.

நாரக்கண் கிருஷ்ணன் இராமன் என்பவர் திருநாகீஸ்வர முடைய மஹாதேவர்க்கு திருநொந்தா விளக்குக்கு..... குறுணி எண்ணெய் கொடுத்திருக்கிறார். கல்வெட்டில் வார்த்தை பெயர்ந்து விட்டதால் எண்ணெய் கொடுத்த அளவு மிகச்சரியாக அறிய முடியவில்லை.

தேவதானம் திருநாகேஸ்வர நல்லூரில் உள்ள திருநாகீஸ்வர முடையார்க்கு நிலத்தைக் கொடை கொடுத்து "திருநொந்தா விளக்கொளி" ஏற்றி வைத்தச் செய்தியுள்ளது. கல்வெட்டு முடிவுறாமல் இருப்பதால் முழுச் செய்தியையும் அறிய முடியவில்லை.

மூன்றாம் குலோத்துங்கனின் 4-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 1181) கல்வெட்டில். துண்டநாட்டைச் சேர்ந்த ஏகவாச்சன் குலோத்துங்கன் வானகோவரையன் என்பவர் நிலத்தைக் கொடை கொடுத்து திருநாகீஸ்வரமுடையார்க்கு திருநொந்தா விளக்கொளி ஏற்றச் செய்திருக்கின்றார்.

இந்து, முஸ்லீம் தானமளித்த நொந்தா விளக்கு

கி.பி. 1783-இல் உள்ளூர் கடைக்காரர்கள் வைத்தக் கல்வெட்டில், "..... உள்ளூர் கடைக்காரர்கள் அனைவரும் மகமைப்பட்டையம் செய்து குடுத்தபடி பட்டையமாவது நிதம் திருவிளக்குப் பாத்துவர உப்பிலியப்பன் கோயில் கடை முதல், வடக்குக் கடை ராவுத்தர் கடை வரைக்கும் கடை ஒன்றுக்கு நிதம் அரைக்காசு வீதம் அவரவர் கடைத்தெருவில் ஒருத்தர் முறையா தண்டி, எல்லாக்காசும் ஒருத்தர் வசமாயிக்குடுத்து திருவிளக்குத் தாட்சி வராமல்பாத்து....."

உள்ளூர் கடைக்காரர்களில் இந்து, முஸ்லீம் வேற்றுமையின்றி அனைத்துக் கடைகளிலும் நாள் ஒன்றுக்கு அரைக்காசு வீதம் வசூலித்து நாகலிங்கசுவாமி கோயிலுக்கும், குன்றுமுலையம்மன் கோயிலுக்கும் திருவிளக்கொளி ஏற்றி வந்திருக்கின்றனர்.

❁❁❁

வழிபாடுகள் மற்றும் விழாக்கள்

கோயில்களில் ஒரு காலம் தொடங்கி ஆறு காலம் வரை வழிபாடுகள் நடைபெறுவது வாடிக்கையாகும். வாரம், பட்சத் திதி, நட்சத்திரம், மாதம், ஆண்டு என சிறப்பு நாட்களில் இறைவனுக்கு வழிபாடு நடத்துவதும் வழக்கமாகும். அவ்வாறு திருநாகேஸ்வரம் கோயிலில் நடைபெற்ற வழிபாடுகள் மற்றும் விழாக்கள் பற்றி கல்வெட்டுகள் வாயிலாக காண்போம்.

சுந்தர சோழன் காலம்

சுந்தர சோழனின் 9-ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்த (கி.பி. 965) கல்வெட்டில், பிள்ளையார் அரிகுல கேசரியார் மகளார் அறிஞ்சிகைப் பிராட்டியாரான ஸ்ரீபாணப் பெருந்தேவியார் அமரசுந்தர தேவரை எழுந்தருளிவித்தார். அமரசுந்தர தேவர்க்கு சிறுகாலை (காலை), உச்சியம்போது (மதியம்), இராவை (இரவு) என மூன்று கால வழிபாட்டை நடத்த நிவந்தம் அளித்துள்ளார்.

ஒவ்வொரு கால வழிபாட்டிற்கும் கீழ்க்கண்ட அட்டவணைப்படி அமரசுந்தர தேவர்க்கு அமுது படையல் தானமளித்துள்ளார்.

அமுதுவகைகள்	அளவு		
	காலை	மதியம்	இரவு
நெய்யமுது	2 நாழி	2 நாழி	2 நாழி
கறியமுது	ஒன்று(1)	ஒன்று(1)	ஒன்று(1)
மிளகுபொடிக் கறியமுது	ஒன்று(1)	ஒன்று(1)	ஒன்று(1)
பொரிக் கறியமுது	ஒன்று(1)	ஒன்று(1)	ஒன்று(1)
தயிரமுது	உழக்கு(1)	உழக்கு(1)	உழக்கு(1)
அடைக்காயமுது	இரண்டு(2)	இரண்டு(2)	இரண்டு(2)
வெற்றிலையமுது	எட்டு (8)	எட்டு (8)	எட்டு (8)
சந்தி விளக்கு	இரண்டு(2)	இரண்டு(2)	இரண்டு (2)

முதலாம் இராசராசன் காலம்

1) அ) முதலாம் இராசராசனின் 14-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 998) கல்வெட்டுகளிலும் பூஜை, படையல், விழா எடுத்தல் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன.

பிள்ளையார் அரிகுல கேசரியின் திருமகளார் அறிஞ்சிகைப் பிராட்டியாரான ஸ்ரீ பாணப்பெருந்தேவியாரால் திருநாகேஸ்வரமுடையார் கோயிலுக்கு திருவிழாப்புறத்துக்கும், பருப்பு போநகத்துக்கும் முன்பு 40 பொன் கழஞ்சு கொண்டு பூதர்கள் திருமேனி செய்வித்திருக்கிறார்.

இந்த 40 பொன் கழஞ்சும் கைச்செல்ல அறக்கொண்டு அதாவது, இந்த 40 பொன் கழஞ்சுக்கு ஈடாக இறையிலி நிலத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

1) ஆ) மற்றொரு நிலத்தின் விளைச்சலின் வருமானத்தை வைத்துக் கொண்டு பருப்பு போநகத்துக்கு செய்யும் நிவந்தமாவன,

அமுதுவகைகள்	அளவு
பூரிக்குத்தலரிசி	5 நாழி
தூப்பருப்பு	3 நாழி
கறியமுது	ஒன்று (1)
நெய்யமுது	ஆழாக்கு (1)
அடைக்காயமுது	நான்கு (4)
வெற்றிலையமுது	பதினாறு (16)

1) இ) கீழ்க்கண்ட இரு நிலங்களின் வருமானத்தை திருவிழா நிவந்தமாகப் பயன்படுத்தியிருக்கின்றனர்.

"திருவிழாப்புறத்துக்கு நிலமாவன பாரதாயகுடி முன் சொன்ன முறைபத்தென்று பேர் கூவப்படும் நிலம் வேலியும் நல்லூர்ச்சேரி முன்சொன்ன பாற்றுறையகையாற்று நிலம் இரண்டு மாவுமான.....த்து வடைத்தோம் இதற்கு இயன்றவாறு திருவிழாச் செய்து .... மாஹேஸ்வர ரகைஷி"

திருவிழாப்புரம் என்பது திருவிழா நடத்துவதற்காக கொடையாக அளிக்கப்பட்ட நிலம். இந்நிலத்தின் வருவாயைக் கொண்டு திருவிழா நடத்தப்படும்

2) சந்திராதித்தவரை இறையிலியாக 9 மாவரை நிலத்தை விற்றுக் குடுத்த பிள்ளையார் அரிகுல கேசரியார் திருமகளார் அறிஞ்சிகைப் பிராட்டியாரான ஸ்ரீவாணப் பெருந்தேவியார் இம்மகா தேவர்க்கு "அர்த்தயாமத்துக்காக" துளைப் பொன் முப்பத்து ஏழு கழஞ்சரை கொடுத்திருக்கிறார்.

"இப்பொன் முப்பத்தேழு கழஞ்சரையும் கொண்டு
எப்பேர்பட்ட.....யமதா ... கசந்திராதித்த வல்லிறையி
யாக விற்றுக் குடுத்தோம் தென்கரைத்
திரைமூர் நாட்டுத் தேவதானம் திருவிண்ணகர்
திருநாகேஸ்வரமுடைய மஹாதேவற்குத் திருநறையூர்
நாட்டு ப்ரம்மதேயம், நல்லூர்ச்சேரி சபையோம்
இவர்கள் பணிக்க"

என்று, கல்வெட்டு வாசகம் உள்ளது. இதனால் 37 கழஞ்சரையும் பிரம்மதேயம் நல்லூர்ச்சேரி சபையார்கள் பெற்றுக் கொண்டு வேறு புதிய நிலத்தைக் கொடுத்திருக்கின்றனர் என்று அறிய முடிகிறது.

இந்த நிலத்தின், விளைச்சலின் வருமானத்தை வைத்து அர்த்தயாமத்துக்கு (அர்த்தஜாம பூஜை) படைக்கும் அமுதுகளாவன,

அமுதுவகைகள்	அளவு
பூரிக்குத்தலரிசி	4 நாழி
கறியமுது	ஒன்று (1)
நெய்யமுது	ஆழாக்கு (1)
அடைக்காயமுது வெறுங்காய்	நான்கு (4)
வெற்றிலை	பத்தொன்பது (19)

இந்த வகையில் நிவந்தம் செய்யப்பட்டிருக்கிறது.

முதலாம் இராசேந்திரன் காலம்

முதலாம் இராசேந்திரனின் ஆறாவது ஆட்சியாண்டு (கி.பி. 1017) கல்வெட்டில், திருநாகீஸ்வரமுடையார்க்கு காவேரி ஆற்றில் இருந்து புனிதநீர் எடுத்து வந்து சுவாமிக்கு திருமஞ்சன

நீராட்டியிருக்கின்றனர். மூன்று சந்திகளுக்கும் (மூன்று காலபூஜை) திருமஞ்சனநீர் எடுத்து வரப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சந்திக்கும் நீர் எடுத்து வர வேண்டியதற்கான மங்களச் செலவு நாநாழி நெல்லாகக் கொண்டு மூன்று சந்திக்கும் குறுணி நாநாழி கொடுத்திருக்கின்றனர்.

ஒவ்வொரு சந்தி (பூஜை)யின் போதும் நாநாழி தும்பைப்பூ பறித்து திருப்பள்ளித்தாமம் (மாலை) கட்டி இறைவனுக்கு சாத்தியிருக்கின்றனர். நாநாழி தும்பைப்பூ பறித்து (திருப்பள்ளித்தாமம்) மாலை கட்டிக் கொடுப்பதற்கு கூலியாக நாநாழி நெல்லு கொடுத்திருக்கின்றனர்.

3) ஆ) ".....ப்ரம்மாதி ராஜர் அரசியார் மாராயன் சொழகுல.....யார்

நித்தம் வைத்த "தும்பைப்பூத் திருப்பள்ளித்தாமம்" நாநாழி பறித்தட்டுவார்க்கு நித்தம் நெல்லு நாநாழியும்.... யாக ஓராட்டைக்கு நெல்லு நூற்றைஞ்சு கலத்துக்கு....."

அரசகுலத்தைச் சேர்ந்த பெண்ணொருவரும் தும்பைப்பூ பறித்துத் திருப்பள்ளித்தாமம் (மாலை) கட்டி இறைவற்கு சாத்தியருளுவதற்காக நாநாழித் தும்பைப்பூப் பறித்துக் கொடுப்பதற்கு நெல்லு நாநாழியாக ஒரு ஆண்டுக்கு நூற்றைந்து கலம் நெல்லு கொடுத்திருக்கிறார்.

இரண்டாம் இராசேந்திரன் காலம்

இரண்டாம் இராசேந்திரனின் இரண்டாவது ஆட்சியாண்டு (கி.பி. 1052) கல்வெட்டில்,

அ) ".....ஆண்டு தோறுமுடையார்

திருநாகீஸ்வரமுடையார்க்கு

உத்தராயண தக்ஷிணாயன ஸாக்ரமங்கள் இரண்டுக்கும்

ஸநமநத்துக்கும் திருவமுதுக்கும் வேண்டு....."

பன்னிரண்டு மாதங்களில் ஆடி முதல் மார்கழி முடிய உள்ள ஆறு மாதங்கள் தட்சிணாயணக் காலமாகவும், தை முதல் ஆனி முடிய உள்ள ஆறு மாதங்கள் உத்தராயணக் காலமாகவும் கணக்கிட்டுள்ளனர்.

தட்சிணாயணக் காலம் ஆரம்பமாகும் ஆடி மாதம் முதல் தேதியும், உத்தராயணக் காலம் ஆரம்பமாகும் தை மாதம் முதல் தேதியும் ஆலயங்களில் சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டு வந்திருக்கின்றன.

இறைவர்க்கு ஸ்நானம் செய்தும் திருவமுது படைத்தும் வழிபட்டு வந்திருக்கின்றனர்.

ஆ) ".....திருவோலக்க மண்டபத்திலிருந்து சிவதர்மம் வாசித்து வக்காணிப்பான் ஒருவனுக்கு நாளொன்றுக்கு....."

ஆலயத்தில் திருவோலக்க மண்டபத்தில் அமர்ந்து கொண்டு, சிவநெறிகளை சிவதர்மங்களை, சிவனின் விசேஷ செய்திகளை, சிவ நூல்களைப் பற்றியெல்லாம் ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்கு எடுத்துரைத்து, சொற்பொழிவு செய்திருக்கின்றனர்.

கோயிலில் பணிபுரியும் அடுக்களைப் பெண்டுகளில் ஒருவராகிய மூப்பு உய்ய வந்தாள் ராஜவிச்சாதிரி என்பவள், திருநாகேஸ்வரர் திருவிழாவிற்காக எழுந்தருளி காவேரியில் தீர்த்தமாட சென்று வருகின்ற திருவீதியும், ஆற்றங்கரை ஓரத்தில் இறைவன் அமர்ந்து அருள் வழங்க திருத்தோப்பும் விலைக்கு வாங்கிக் கொடுத்திருக்கின்றாள் என்பதை மற்றொரு கல்வெட்டு மூலம் அறியலாம்.

கோயில் நிர்வாகம்

பொன், வெள்ளி தானம்

முதலாம் இராசேந்திரன் தன்னுடைய எட்டாவது ஆட்சியாண்டு (கி.பி. 1019) முதல் திருநாகேஸ்வர கோயில் நிர்வாகத்தில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளதை அவனுடைய 14. 30. 31 ஆவது ஆடசியாண்டு கல்வெட்டுகள் மூலம் அறியலாம்.

1) முதலாம் இராசேந்திரனுடைய 14-ஆவது ஆட்சியாண்டு (கி.பி.1025) கல்வெட்டில் பணிமகன் கண்டன் கொவல் நாதன் என்பவன் விக்கிரணங்கள் கல்லில் வெட்ட வேண்டுமென்று ஸ்ரீராசேந்திர சோழதேவரிடம் விண்ணப்பம் செய்ய, திருவுள்ளம் கொண்ட முதலாம் இராசேந்திரன் பாத்திரங்களும், பொன்னும் வெள்ளியும் எப்பேற்பட்டனவும் கல்லில் வெட்டுவிக்க என்று அருளிச் செய்வித்தான்.

"கண்டன் கோவல்நாதன் இத்தேவர்க்கு பீலிகைவரியால் பொன் சாத்தியருள திருப்பள்ளித் தர்மத்தாமரைப் பொற்பூ, இசரிடயும்" பள்ளி எழுந்தருளும்

2) முதலாம் இராசேந்திரனுடைய 30ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 1041) கல்வெட்டில் திருநாகேஸ்வரத்தில் வீற்றிருந்து அருள்புரியும் திருநாகேஸ்வரர்க்கு காலங்காலமாக, பொன் சாத்திவந்ததில் நகைகள் நிறைய குவிந்துவிட்டதைக் காட்டுகிறது.

குவிந்த நகைகளை சுவாமியின் அபிஷேகத்துக்கு, அலங்காரத்துக்குத் தொடர்ந்து பயன்படுத்தியதால் சில நகைகள் காலங்கடந்து இற்றினவும், முறிந்தனவுமாயின.

இந்த நகைகளை சுவாமிக்கு பொன் சாத்தியளுரும்போது நகைகளின் அளவு, சாத்துபவர் பெயர், அரசனின் ஆட்சியாண்டு ஆகியவை பண்டாரப் பதிவேட்டிலும், கல்வெட்டிலும் அவ்வப்போது எழுதப்பட்டிருக்கின்றன. இந்தக் குறிப்புகளை வைத்துக் கொண்டு, "இற்றிய, முறிந்த நகைகளை மீண்டும் அளந்து அவைகளை உருக்கி அந்நகைக் கொண்டு திருநாகேஸ்வரமுடையார்க்கு திருக்கொள்கையும்,

திருக்கொடுக்கும், திருக்கொசரமுமாக பண்ணிச் சாத்துக" என்று இராசேந்திர சோழ தேவரின் அதிகாரியான இராஜேந்திர சோழ மூவேந்த வேளாண், கோயில் நிர்வாகிகளுக்கு அரசாணை அனுப்பினான்.

நகைகள் மறுமதிப்பீடு

இதன்படி கோயில் நிர்வாகிகள், கங்கை கொண்ட சோழபுரத்தில் மும்முடிச் சோழப் பெருந்தெருவில் வசித்த வியாபாரி பிரம்மகுட்டன் உலகளந்தான் என்பவனை அழைத்து வந்து, பண்டாரப் பதிவேடு, கல்வெட்டுகளில் உள்ள நகைக் குறிப்புகளையும், பதிவாகியுள்ள நகைகளின் எடை அளவுகளையும், தற்போதுள்ள எடை அளவுகளையும் நகைகள் சாத்தியருளியபோது பயன்படுத்திய எடைக்கல்லின் அளவுக்கும், தற்போது நடைமுறையில் உள்ள எடைக்கல்லின் அளவுக்கும் சரிபார்க்கப்பட்டிருக்கிறது.

முதலாம் இராசராசனின் 5-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 989) முதல், முதலாம் இராசேந்திரனின் 30-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 1041) முடிய சுவாமிக்கு பொன் சாத்தியருளிய நகைகள் அனைத்தும் மறு எடைக்கு, அளவுக்கு உட்படுத்தப் பட்டிருக்கின்றன.

முதலாம் இராசேந்திரனின் இக்கல்வெட்டில் அரசனின் நேரடி அதிகாரிகள், கோயில் நிர்வாகப் பணியாளர்கள் பற்றியக் குறிப்புகள் காணப்படுகின்றன.

1. அரசனின் அதிகாரியாக இராஜேந்திர சோழ மூவேந்த வேளான் என்பவன் செயல்பட்டு வந்திருக்கிறான்.
2. இந்நாடு (பாம்பூர் நாடு) வகை செய்கின்ற கோட்டந்திட்டை உடையான்.
3. இத்தேவர் ஸ்ரீ கார்யம் பார்க்கின்ற கிடாரங் கொண்ட சோழ மாயிலட்டி
4. ஸ்ரீகோயில் வாரியம் செய்வார்கள்
5. தேவகண்மிகள்
6. பண்டாரி
7. கரணத்தான்
8. கண்காணி
9. இக்கோயில் காணி உடைய சிவபிராமணர்

10. திருமெய்க்காப்பான்
11. பன்மாகேசுவரக்கண்காணி
12. ஸ்தான வாரியன்
13. திருப்பதியம் பாடுவோர்

என, கோயிலுக்குரிய பல்துறை அதிகாரிகளை, பணியாளர்களை அறிந்துக் கொள்ள முடிகிறது.

நிவந்தம்

இரண்டாம் இராசேந்திரனின் இரண்டாவது ஆட்சியாண்டைச் சேர்ந்த (கி.பி. 1052) கல்வெட்டு ஒன்றின் மூலம், விக்கிரமசிங்கன் பல்லவரையன் என்பவர் திருநாகேஸ்வரமுடையார்க்கு செய்த நிவந்தத்தை இக்கோயில் நிர்வாகிகள் கல்லில் வெட்டுவித் திருக்கிறார்கள்.

1. வாரியஞ்செய்பவர்
2. கணத்தார்கள்
3. பன்மாகேசுவரக் கண்காணி செய்பவர்
4. சிவப்பிராமணர்கள்
5. ஸ்ரீ கார்யஞ்செய்வார்

ஆகிய இவ்வனைவரும் சேர்ந்து கூட்டாக எழுதிக் கொடுத்திருக்கின்றனர்.

சிவதர்மம் வாசித்து வக்காணிப்பான்

இரண்டாம் இராசேந்திரனின் 2-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 1052) கல்வெட்டில்,

சிவதர்மம் வாசித்து வக்காணிப்பான் ஒருவனை நியமித்து, அவனுக்கு நாள்தோறும் உணவுக்கு கோயில் பண்டாரத்திலிருந்து நெல் கொடுத்திருக்கின்றனர்.

இக்கோயிலுக்கு நெல், நிவந்தங்கொடுப்பவர்களிடமிருந்து கோயில் பண்டாரத்தார் பெற்றுக் கொண்டு சிவதர்மம் வாசித்து வக்காணிப்பாருக்கு நாள், மாதம், ஆண்டுக் கணக்கில் கோயில் பண்டாரத்திலிருந்து எடுத்துக் கொடுத்திருக்கின்றனர்.

கையாடல் செய்தவர்களுக்கு தண்டனை

மூன்றாம் இராசராசனின் 8-ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்த (கி.பி. 1223) இருகல்வெட்டுகளில், கோயில் பண்டாரக் கணக்கர்களாக பணிபுரிந்த இருவர்கள் பண்டாரத்திலிருந்து பணம் கையாடல் செய்ததை உடனடியாகக் கண்டுபிடித்து அரசனுக்குத் தெரிவிக்கப்பட்டு அரசனின் உத்தரவுப்படி இருவரும் சிவத்துரோகிகளாக அறிவிக்கப் பட்டிருக்கின்றனர்.

கணக்கர்களாகப் பணிபுரிந்த இவ்விருவருக்கும் கொடுக்கப்பட்டிருந்த காணிகளும் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பட்டிருக்கின்றன. இவர்களுடைய அசையும், அசையாச் சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டு ஏலமிடப்பட்டிருக்கின்றன. அரச தண்டனையும் வழங்கப்பட்டிருக்கிறது. மூன்றாம் இராசராசனின் காலத்திலேயே கோயில் பணத்தைக் கொள்ளையடித்துத் தண்டனைப் பெற்றவர்களை இக்கல்வெட்டு படம்பிடித்துக் காட்டுகிறது.

அடுக்களைப் பெண்டுகள்

கோயிலில் இறைவனுக்கு நைவேத்தியத்துக்காக உணவுப் பதார்த்தங்கள் தயாரிப்பதற்கும், அடியார்களுக்கு தானம் வழங்கவும், ஒவ்வொருக் கோயிலிலும் மடப்பள்ளி இயங்கி வருகிறது. திருநாகேஸ்வரத்தின் மடப்பள்ளியில் பெண்களே வேலை பார்த்திருக்கின்றனர். இவர்களை 'அடுக்களைப் பெண்டுகள்' என்று தொழில்முறை பெயரிட்டு அழைத்து வந்திருக்கின்றனர். அடுக்களைப் பெண்டுகளில் ஒருவராக மூப்பு உய்யவந்தாள் இராஜவிச்சாதிரி என்பவள் திருக்கோயிலில் பணிபுரிந்திருக்கிறாள் என்பது தெரியவருகிறது.

ஊர்க்கணக்கு

திருக்குடந்தையுடையான் என்பவன் ஊர்க்கணக்கராகப் பணிபுரிந்து தேவதான இறையிலி நிலங்களுக்குப் பிரமாணப் படிவங்கள் எழுதிக் கொடுத்திருக்கிறான்.

கோயில், பள்ளிவாசல்

கி.பி. 1783-இல் திருநாகேஸ்வரத்தில் உள்ள உள்ளூர் கடைக்காரர்கள் வைத்தக் கல்வெட்டில். உள்ளூர் கடைக்காரர்கள் எல்லாம் நாகலிங்க சுவாமியார், குன்றுமாமுலை அம்மனுக்கு திருவிளக்கு ஏற்றி வந்திருக்கின்றனர். இவர்கள் தங்களுக்குள் ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு தினமும் திருவிளக்கு ஏற்றி வந்திருக்கின்றனர். கடைத்தெருக்களில் இந்து, முஸ்லீம் கடைகள் என பாகுபாடு இல்லாமல் அனைவரின் கடைகளிலும் காசு வசூலித்திருக்கின்றனர்.

வசூலித்த மொத்தக் காசில், இரண்டு கடை காசுகள் இராவுத்தர் பள்ளிவாசலுக்கு மானியமாகவும் கொடுத்திருக்கின்றனர். இதற்கு மகமைப்பட்டையம் செய்து கொடுத்து பின் கல்லில் வெட்டி வைத்திருக்கின்றனர். இவ்வாறு, பக்தர்கள் குழுக்களும் கோயில் இறைவழிபாட்டில் தன்னார்வப்பங்கு கொண்டிருக்கின்றனர் என்பதும் தெரியவருகிறது.

செப்புத் திருமேனி

சுந்தரசோழனின் 9-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 965) கல்வெட்டில். பிள்ளையார் அரிகுல கேசரியார் மகளார் அறிஞ்சிகைப் பிராட்டியாரான ஸ்ரீபாணப்பெருந்தேவியார் என்பவர் அமரசுந்தரதேவர் என்னும் தேவரை செப்புத்திருமேனியாக எழுந்தருளிவித்திருக்கிறார்.

முதலாம் இராசேந்திரனின் ஆறாவது ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டில், இராசேந்திரசோழ தேவர் படையில் இளையகுஞ்சிர மல்லராக பணிபுரியும் அடிகள்ளாச்சான் தான் அனுபவித்து வந்த காணியில் அந்தராயவரியாக வந்த வரித்தொகையைச் சேர்த்து முதலாக்கி செப்புத் திருமேனியாக உள்ள ரிஷபவாகனதேவர்க்கு பொன் சாத்தியருளியுள்ளார். ரிஷபவாகனத்தேவரின் செப்புத் திருமேனியில், பொன், மரகதம், முத்து, கல்லோடும், பந்தத்தோடும் கோத்துள்ளனர். சரடும் செய்திருக்கிறார் என்பது கல்வெட்டு வாயிலாக தெரிகின்றது.

முதலாம் இராசேந்திரனின் அதிகாரியின் ஆணையின்படி கோயிலில் காலங்காலமாக சேர்த்து வந்த நகைகள் மறுமதிப்பீடு செய்து புதுப்பித்தச் செய்தியினை முதலாம் இராசேந்திரனின் 20-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு விவரிக்கிறது. முதலாம் இராசேந்திரனின் நான்காவது ஆட்சியாண்டிலேயே ஜனநாதபுரத்து வியாபாரி இரிஷபவாகன மாயிலட்டி என்பவர், இரிஷபவாகன தேவர்க்கு பொன் சாத்தியுள்ளார். இக்கல்வெட்டு குறிப்புகளின் வாயிலாக அமரசுந்தரதேவர், ரிஷப வாகன தேவர், ஆகிய செப்புத் திருமேனிகளும் அத்திருமேனிகளுக்கு சாத்திய பொன் ஆபரணங்களையும் அறிந்து கொள்ள முடிகிறது.

❁❁❁

அணிகலன்கள், எடைக்கற்கள்

முதலாம் இராசராசன்:

1) முதலாம் இராசராசனின் 14-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 998) கல்வெட்டுகளில், "குமரமாத்தாண்டபுரத்து நகரக் கல்லால் எம்மில்லிசைந்து கொண்ட விலைப்பொருள்பொன்....." என்ற கல்வெட்டு குறிப்பால் குமரமாத்தாண்டபுரத்து நகரக்கல் என்னும், பொன் நிறுக்கும் எடைக்கல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

2) ஆ) "....ஸ்ரீ பாணப் பெருந்தேவியார் திருவிழாவுக்கும் பருப்பு பொநகத்துக்கும் முந்நியொகித்து பூதர்களாய் இருந்த பொன் நாற்பதின் கழஞ்சும்....." என்ற குறிப்பால் பொன்னாலேயே பூதர்கள் திருமேனி உருவத்தை செய்து வைத்திருக்கின்றனர்.

முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டுகளிலும் அணிகலன்கள், எடைக்கற்கள் பற்றியக் குறிப்புகள் வருகின்றன.

1) இவனின் ஆறாவது ஆட்சியாண்டு (கி.பி. 1017) கல்வெட்டில்,

".....கூடின முதல்லில் இஷபவாகன ..... செய்த
திருஅபிஷேகம் ஒன்று பொன் ாயசும் இதில்
பனிக்கொடு ..... கல்லு ாநயசு இதில் பொத்திய
மரகதம் உயக இதில் ..... இதில் கோத்தமுத்து
சுயாசுயள ஆகக் கல்லோடும் பந்தத்தோடும்
கோத்த.....த் தோம் சரட்டோடும் நிறை அயசும்
பந்மாயேஸ்வரரகூஷி என்ற கல்வெட்டு குறிப்பால் ரிஷப வாகன தேவர்க்கு ஒரு பொன் கொண்டு அபிஷேகம் செய்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

ரிஷபவாகனத் தேவரின் மகுடத்தில் (கிரீடத்தில்) பொன் பதித்துள்ளனர், கல்லும் பதித்துள்ளனர், மரகதம் (பொத்தி) பொதித்துள்ளனர், முத்து கோத்துள்ளனர், கல்லும் பந்தத்தோடும் கோத்துள்ளனர், சரடும் செய்து சாத்தியிருக்கின்றனர்.

2) ஆ) "..... பொன் கொ .... சாத்தியருளிச் செய்வித்த திருப்பள்ளித் தர்மத் தாமரைப் பொற்பூ.....ல நின்ற குடிஞைக் கல்லால் குடிஞைக் கல் என்ற பொன் நிறுக்கும் எடைக்கல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"உய்யக்கொண்டார்க்கு சாத்தி அருளின என்ற கல்வெட்டு வரிகளால் குடிஞைக்கல்லால் எடையிடப்பட்ட அரைக்கழஞ்சுப் பொன்னை உய்யக் கொண்டார்க்கு சாத்தியிருக்கின்றனர்.

".....மெற்படியார்க்கு ... கைக்கு திருவளையில் ... நாலுக்குப் பொன் குடிஞை "

திருவளையல் அணிகலனாய் செய்து சாத்தப்பட்டிருக்கிறது. குடிஞைக்கல் என்னும் எடைக்கல்லால் பொன் எடை நிறுக்கப்பட்டிருக்கிறது.

வாணப் பெருந்தேவியார் எழுந்தருளிவித்த மாதேவர்க்கு, பதின்மூன்று கழஞ்சு பொன் கொண்டு திருவபிஷேகம் செய்யப்பட்டிருக்கிறது. அபிஷேகத் திற்குரிய பொன்னை, குடிஞைக்கல்லால் எடை நிறுத்து அளவு குறிக்கப்பட்டிருக்கிறது. குடிஞைக்கல்லின் அளவுப்படி இருகழஞ்சு பொன் கொண்டு ஒரு பொற்பூவும் செய்து இறைவர்க்கு சாத்தப்பட்டுள்ளது.

நகைகள் மறுமதிப்பீட்டுக்குழு

3) முதலாம் இராசேந்திரனின் முப்பதாவது ஆட்சியாண்டு (கி.பி. 1041) கல்வெட்டில் அணிகலன்கள். எடைக்கற்கள் பற்றிய குறிப்புகள் வருகின்றன.

இந்தக் கல்வெட்டில் பலரும், பல ஆண்டுகளாக திருநாகீஸ்வரமுடையார்க்கு பொன் சாத்தியருளின ஆபரணங்கள் அதிகம் பயன்படுத்தப்பட்ட நகைகள் சில (இற்றினவும்) மெலிந்து, பருமன் குறைந்து நொறுங்கும் அளவிற்கு வந்துவிட்டன. இன்னும் சில (முறிந்தன) துண்டு துண்டுகளாக முறிந்து விட்டிருக்கின்றன.

அபிஷேகத்திற்குச் சாத்தப்பட்ட பொன் நகைகளின் இத்தகைய நிலைக்கண்டு கோயில் அதிகாரிகள், திருநாகீஸ்வரம் உள்ளடங்கிய பாம்பூர் நாட்டை கண்காணித்து வரும் அதிகாரியான இராசேந்திர சோழ மூவேந்த வேளான் என்பவனிடம் முறையிட்டனர்.

அதிகாரியின் அனுமதி ஆணை திருநாகீஸ்வரம் உள்ளடங்கிய பாம்பூர் நாடு வகை செய்கின்ற கோட்டந்திட்டை உடையானுக்கும், இத்தேவர் ஸ்ரீ கார்யம் பார்க்கின்ற கிடாரங் கொண்ட சோழ

மாயிலட்டிக்கும், திருக்குடமூக்கில் மூலபருடையார்க்கும், ஸ்ரீ கோயில் வாரியம் செய்வார்க்கும், தேவ கண்மிகளுக்கும், பண்டாரிக்கும், கரணத்தானுக்கும் வந்து சேர்ந்தது.

இந்த ஆணையைக் கொண்டு, ஜயசிங்க குலகால விழுப்பறையன் என்பவன் அபிஷேகத்திற்காக சார்த்தப்பட்ட நகைகளை மறுமதிப்பீடு செய்ய, பல பிரிவு கோயில் பணியாளர்களைக் கூட்டி மறுமதிப்பீட்டுக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

கழஞ்சு, தன்மக் கட்டளைக்கல், காசு நிறைக்கல், குடிஞைஞக்கல்

சோழர் காலத்தில் நகைகளை எடை நிறுத்து, அளவு குறிக்க கழஞ்சு என்ற சொல் பயன்பட்டிருக்கின்றது. நகைகளை எடை நிறுக்க தன்மக் கட்டளைக்கல், காசு நிறைக்கல், குடிஞைக்கல் போன்ற துலாக்கோல் கற்கள் பயன்பட்டிருக்கின்றன.

தலைநகர் கங்கை கொண்ட சோழபுரத்தின் மும்முடிச் சோழப் பெருந்தெருவைச் சேர்ந்த வியாபாரி பிரம்மகுட்டன் உலகளந்தான் என்னும் நகை வியாபாரியை வரவழைத்து, நகைகளை மறு எடை நிறுத்து மறுமதிப்பீடு செய்திருக்கின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும், அபிஷேகத்திற்கு பொன் சார்த்தும்போதும் பொன் சார்த்தியருளியவர், பொன்னின் எடை அளவு, பொன் எடை நிறுக்கப்பயன்பட்டக் கல், பொன்னால் செய்யப்பட்ட நகை, பொன் சார்த்தப்பட்ட இறைவனின் பெயர், அரசனின் பெயர், அரசனின் ஆட்சியாண்டு, பொன் சார்த்துவதற்கான முதலீடு, ஆகியவற்றை அந்தந்த ஆண்டுப் பண்டாரப் பதிவேட்டில் குறித்துக் கொண்டும், கல்லில் வெட்டியும் வைத்திருக்கின்றனர்.

பத்திரமாகப் பாதுகாத்து வந்த இந்த பண்டாரக் கணக்குகளை கல்வெட்டுகளின் மூலம் விபரங்கள் அறிந்து நகைகளை மறு எடை நிறுத்திருக்கின்றனர்.

முன்பு எந்த, எந்த எடைக்கல்லால் எடை நிறுத்து, நகையை அபிஷேகத்திற்குப் பொன் சாற்றினரோ, அதே எடைக் கல்லால் தற்போது, அதே நகையை எடை நிறுக்கும்போது எடை மதிப்புக் குறைந்திருக்கிறது.

❁❁❁

காசுகள்

பண்ட மாற்று முறையில் பொருட்களை மாற்றித் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டிருந்த மனிதன், ஒவ்வொரு பொருளுக்கும் கொள்ளளவு, எடை, எண்ணிக்கை ஆகியவற்றில் வேறுபாடு அறிந்து அதன் வெளிப்பாடாக காசு (நாணயம்) கண்டுபிடித்தான்.

காசைப் பயன்படுத்தி வெவ்வேறு பொருட்களுக்கு வெவ்வேறு மதிப்பீடு செய்தான். அதனால் பண்டமாற்று முறையில் பொருட்களை வாங்க, மாற்றுப் பொருள் இல்லாதவர்கள் காசைப் பயன்படுத்தி பொருட்களை வாங்கினர்.

இதனால் காசு மனிதனிடம் முக்கியத்துவம் பெற்றது. மனிதன் பல குழுக்கள் முதல் பல நாடுகளாக பிரிந்து வாழ்ந்ததால் அந்தந்தப் பகுதிகளுக்கும் தனித்தனிக் காசுகள் உருவாகின.

அந்த வகையில் திருநாகேஸ்வரம் கல்வெட்டுகளிலும் காசுகளைப் பற்றியக் குறிப்புகள் காண முடிகிறது.

முதலாம் இராசேந்திர சோழன் காசு

முதலாம் இராசேந்திரனின் 31-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 1042) கல்வெட்டுகளில், ".....திருநாகீஸ்வரமுடையார்கள் பக்கலும் கொண்ட காசு....." சோழ நாட்டை ஆட்சி செய்து வந்த முதலாம் இராசேந்திரன் காலத்தில், "இராசேந்திர சோழன் காசு" என்ற காசு மக்களிடம் புழக்கத்தில் இருந்தது என்று தெரியவருகிறது.

இரண்டாம் இராசேந்திரனின் இரண்டாவது ஆட்சியாண்டு கல்வெட்டில்,

வெள்ள நீரால் உடைப்பெடுத்தக் கரைகளைக் கட்டுவதற்கு கூலியாக காசு கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த வகைக் காசு என்று குறிப்பிடவில்லை.

மூன்றாம் இராசராசனின் 19-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டுகளில், "..... நெல் நூற்றறுபத்திருகலமும் கையில்லை

ஏற்றத்தாழ்வு நிரலு முன்னாழி விலைப்படி காசு ஐயாயிரத்து ஒரு நூற்று எண்பத்து நாலும் நத்தங்குழி நாலாயிரத்து அறுநூற்று அறுபத்தெட்டே முக்கால் கடைத்தெருவு உடைய நிரவிகுழி ஒன்றுக்கு மூன்றாக வந்த காசு நாலாயிரத்தாறும் ஆகக்காசு ... நூற்றெண்பத்தாறு முட்பட ஆட்டைக்கு பத்தொன்பதினாயிரத் திருநூறு காசுகளாகவும் இருக்குமிடத்து எடுத்து மனை

162 கலம் நெல் முன்னாழி விலைப்படி 5184 காசுகள்

162×32 = 5184

ஆக, முன்னாழியின் மதிப்பு 32 காசுகள் எனத் தெரிகிறது.

❁❁❁

அளவைகள்

திருநாகேஸ்வரமுடையார் கோயிலுக்கு திருநொந்தா விளக்கொளி ஏற்றுவது, புதிய மண்டபங்கள் நிர்மாணிப்பது போன்ற திருப்பணிகளை நிறைவேற்ற கொடை காணிக்கையாகவும், நிலங்களை விற்றும் கொடுத்திருக்கின்றனர்.

நிலங்களின் நாற்புற எல்லைகளைக் குறித்தும், நிலத்தின் பரப்பளவை அளவுகோலால் அளந்தும், எதிர் காலத்தில் இந்நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் எழாத அளவிற்கு கைமாற்றம் செய்திருக்கின்றனர்.

இறைவர்க்கு பொன்னபிஷேகம் செய்யும்போது, இறை அன்பர்களால் பொன் நகைகள் சாத்தப்படுகின்றன. இவைகள் துலாக்கோல் கற்களால் எடையிட்டு மதிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்த எடை அளவுகளை பல வகை அளவுச் சொற்களால் குறித்திருக்கின்றனர். பல்வேறுபட்ட நகை அளவுச் சொற்கள் திருநாகேஸ்வரக் கல்வெட்டுகளில் காண முடிகிறது.

ஒவ்வொரு அமுதுக்கும் நாழி, பிடி, எண்ணிக்கை, உழக்கு என்று வெவ்வேறு அளவுகளை பயன் படுத்தியுள்ளனர்.

முதலாம் இராசராசன் காலம்

தடி இரண்டு

முதலாம் இராசராசனின் 14-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 998) கல்வெட்டுகளில், "..... இவ்விசைத்த பெருநான்கெல்லையிலும் அகப்பட்ட நிலம் பத்தும் மாகத்தடி இரண்டினால் நிலம் ஒன்றரை வேலி....." "தடி இரண்டு" என்று கூறப்படும் அளவுகோல் தடியைப் பயன்படுத்தி நிலத்தை அளந்திருக்கின்றனர்.

தடி மூன்று

2) இவரின் இதே ஆட்சியாண்டைச் சேர்ந்த மற்றொருக் கல்வெட்டில், "....இவ்விசைத்த பெருநான்கெல்லையிலும் உள்பட்ட நிலம் மிகுதிக் குறைவுள்ளடங்க வாய்கூற்று புள்ளிநிலம் இரண்டுமாவும் ஆகத்தடி மூன்றினால் வெற்றி வந்த நிலம் முக்காலே ஒருமா"

"தடி மூன்று" என்னும், நிலம் அளக்கும் அளவு கோல் தடியைப் பயன்படுத்தி நிலத்தை அளந்திருக்கின்றனர்.

கழஞ்சு, மா, காணி

"..... குமரமாத்தாண்டபுரத்து நகரக்கல்லால் எம்மில்லிசைந்து கொண்ட விலைப்பொருள் பொன் நூற்றொரு கழஞ்செய்யாறுமாக்காணிப் பொன்னும்....."

பொன்னின் மதிப்பைக் குறிக்க கழஞ்சு, மா. காணி, என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

பொன்னின் எடை நிறுக்க, குமரமாத்தாண்டபுரத்து நகரக்கல் என்ற துலாக்கோல் எடைக்கல்லைப் பயன்படுத்தியிருக்கின்றனர்.

குமரமாத்தாண்டபுரத்து நகரக்கல், கழஞ்சு

".....குமரமாத்தாண்டபுரத்து நகரக் கல்லால் கொண்ட பொன் நாற்பதின் கழஞ்சும்....."

குமரமாத்தாண்டபுரத்து நகரக்கல் என்னும், பொன் எடை நிறுக்கும் துலாக்கோல் கல்லைப் பயன்படுத்தியிருக்கின்றனர். பொன்னின் மதிப்பைக் கழஞ்சு என்ற வார்த்தையால் குறித்திருக்கின்றனர்.

இவனின் இதே ஆட்சியாண்டைச் சேர்ந்த மற்றுமொரு கல்வெட்டில், ".....அர்த்தயாமத்துக்கு குடுத்த துளைப்பொன் முப்பத்து ஏழுகழஞ்சரையும். . . . . ." பொன்னின் அளவுக்கு கழஞ்சு என்ற சொல் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

ஆழாக்கு

இவனின் 8-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 1019) கல்வெட்டில்,

".....சந்திராதித்தவற் இன்நெய் ஆழாக்கும் அட்டக்கடவேன்"

சந்திர சூரியர்கள் இருக்கும் வரை ஆழாக்கு (1) நெய் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளோன் என்று உறுதி கூறப்பட்டுள்ளது. நெய்யை ஆழாக்கு என்ற அளவால் அளந்திருக்கின்றனர்.

குடினைஞக்கல்

முதலாம் இராசேந்திரனின் 14-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 1025) கல்வெட்டில், ".....குடிஞன் ஞக்கல்லால் தொண இருபதின் கழஞ்செய்..."

"....இக்கல்லால் பொன் பதினஞ்சம் முஞ்சரை..... குடினைஞக்கல்லால் பதிந் கழஞ்சு....."

".....மாணிக்கடி இரண்டும்....."

".....வைரம் இருபத்...சும்....."

".....முத்து பத்தொன்பதும்....."

".....குடினைஞக்கல்லால் நின்றபொன் அரைக்கழஞ்சும்...."

".....குடினைஞக்கல்லால் இப்பத்து முக்கழஞ்செமுக்கால்...."

".....குடினைஞக்கல்லால் இப்பத்து முக்கழஞ்ச....."

".....குடினைஞக்கல்லால் நின்றபொன்....."

'குடினைஞக்கல்' என்ற பொன் எடை நிறுக்கும் துலாக்கோல்கல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

பொன்னை கழஞ்சு என்ற சொல்லால் அளவு குறித்திருக்கின்றனர். மாணிக்கம், வைரம், முத்துக்களை எண்களால் கணக்கிட்டுள்ளனர்.

முதலாம் இராசேந்திரனின் 30-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 1041) கல்வெட்டில், காசு நிறைக்கல், தன்மக்கட்டளைக்கல், குடினைஞக்கல் என்ற பொன் எடை நிறுக்கும் துலாக்கோல் கல்வகைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

பொன்னை கழஞ்சு, மஞ்சாடி, மா, காணி என்ற அளவுச் சொற்களால் மதிப்பிட்டிருக்கின்றனர்.

குறுணி, நாழி, கலம், மா, காணி, முந்திரிகை

முதலாம் இராசேந்திரனின் 31-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 1042) கல்வெட்டில்,

"....திருநொந்தா விளக்குக் கொடுத்த எண்ணையய்.... குறுணியும்...."

".....ஸந்தி மூன்றுக்கு வைத்த திருமஞ்சன நீர்குடம் மூன்றுக்கு நெல் குறுணி நாநாழியும்....."

".....ஓராட்டைக்கு நெல்லு நூற்றைங்கலத்துக்கு....."

".....நிலம் ஒருமா முக்காணிக்கீழ் அரையெமுக்காணி முந்திரிகைக்கும்.."

எண்ணெய் குறுணி என்ற அளவால் அளக்கப்பட்டிருக்கிறது. நெல்லைக்குறுணி, நாழி, கலம் என்ற அளவுகளால் அளக்கப் பட்டிருக்கிறது.

நிலத்தை அளக்க மா, காணி, முந்திரிகை என்ற சொற்பதங்களைப் பயன்படுத்தியிருக்கின்றனர்.

நாத்திபுகழன் மரக்கால்

இரண்டாம் இராசேந்திரனின் இரண்டாவது ஆட்சியாண்டு (கி.பி.1052) கல்வெட்டில், ".....காசொன்றுக்கு நாத்திபுகழன் மரக்காலால் இவ்வாட்டை மார்கழித் திங்கள் முதல்....." நாத்திபுகழன் மரக்கால், என்ற மரக்கால் அளக்கப் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வாட்டை மார்கழித் திங்கள் முதல் என்பதில், இந்த யாண்டு மார்கழி மாதம் முதல் என்பதாக பொருள்படும்.

கீழிலக்க நில அளவுகள்

திரிபுவன சக்கரவர்த்தி (கோனேரின்மைக் கொண்டான்) கல்வெட்டில், காணி, மா, முந்திரிகை போன்ற கீழிலக்க எண்களின்படியும் நிலத்தை அளந்து வைத்திருக்கின்றனர்.

கட்டடக் கலை

கோயிலின் பழமையை எடுத்துக்காட்டுவது அதன் கட்டடங்களே யாகும். மண், செங்கல், கருங்கல் சுவர் என காலங்காலமாக கட்டடங்கள் வளர்ச்சி பெற்று வந்திருக்கிறது.

கருங்கல் சுவரானது நெடுங்காலத்தைக் கடந்து நிற்கக் கூடியது. அதனால் அரசர்கள், பழைய கோயில்களை புதுப்பிக்கும் போதும், புதிய கோயில்களை நிர்மானிக்கும் போதும் கருங்கல்லைப் பயன்படுத்தியிருக்கின்றனர்.

திருநாகேஸ்வரம் கல்வெட்டுகளில் புதிய தெய்வம் எழுந்தருளிவித்தது, புதிய மண்டபங்கள் நிர்மானித்தது போன்ற செய்திகளை அறியமுடிகிறது.

திருச்சுற்றாலை, கோபுரம், நந்தவனம்

முதலாம் ஆதித்தனின் இரண்டாவது ஆட்சியாண்டு (கி.பி. 872) கல்வெட்டில்,

> ".....திருச்சுற்றாலைக்குங் கோபுரத்துக்கும் புதுக்குப் - புறமாக இப்பள்ளியின் கீழை நந்தவனத்துக்கும் மேலை நந்தவனத்துக்குமாக நகரத்தொங்கொள்ளும் வாராவைகல் ஆண்டடுத்து கொள்வது இத்திருச் சுற்றாலைக்குங் கோபுரத்துக்கும் புதுக்குப் புறமாக நகர அனுச்சையால் வைத்துக் கொடுத்தோம்...."

திருச்சுற்றாலை, கோபுரம், நந்தவனம் ஆகிய குறிப்புகள் இருப்பதால், முதலாம் ஆதித்தன் காலத்திலேயே இத்திருநாகேஸ்வரம் பிரசித்திப் பெற்ற, நன்கு வளர்ச்சியுற்றக் கோயிலாக இருந்திருக்கிறது.

திருச்சுற்றாலையும், கோபுரமும் கி.பி. 871-இல் ஆட்சிக்கு வந்த முதலாம் ஆதித்தனின் காலத்திற்கு முற்பட்டதாகக் கூட இருக்கலாம்.

திருவோலக்க மண்டபம்

இரண்டாம் இராசேந்திரனின் இரண்டாவது ஆட்சியாண்டு (கி.பி. 1052) கல்வெட்டில், "....இக்கோயிலில் இவனெடுப்பித்த திருச்சிற்றம்பல முடையானான திருவோலக்க மண்டபத்திலிருந்து...." என்ற கல்வெட்டு வாசகத்தின் வாயிலாக விக்கிரமசிங்க பல்லவனையன் என்பவர் திருவோலக்க மண்டபம் என்ற புதிய மண்டபத்தை கட்டியிருப்பதை அறியமுடிகிறது.

மூடுதளம்

சகலபுவனசக்கரவர்த்தி கோப்பெருஞ்சிங்கனின் மூன்றாவது ஆட்சியாண்டு கல்வெட்டில்,

கோயிலின் கருவறையைச் சுற்றியுள்ளப் பிரகாரத்தின் மேல் பகுதியில் மூடுதளம் போட்டுள்ள செய்தி தெரியவருகிறது.

பயிற்சிக் களம்

ஸ்ரீஇராஜேந்திர சோழ தேவர் படை

முதலாம் இராசேந்திரனின் ஆறாவது ஆட்சியாண்டு (கி.பி. 1017) கல்வெட்டில், "சோழ மூவேந்தவேளாளர் னாயகத்து உடையார் ஸ்ரீஇராசேந்திர சோழர் தேவர் படை இளைய குஞ்சிர மல்லரில் அடிகளாச்சான்" என்ற குறிப்பு வருகிறது. இதன் மூலம், முதலாம் இராசேந்திரனின் படைக்களமாக, படை வீரர்களுக்கு பயிற்சிக்களமாக அன்றைய திருநாகேஸ்வரம் விளங்கியிருக்கலாம் என்பது தெரியவருகிறது.

குஞ்சிரம் என்பது யானை, மல்லர் என்பது போர்வீரரையும், இளைய என்பது சிறிய என்ற பொருளைக் குறிக்கும். போரில் ஈடுபடுத்தப்படும் யானைகளும், யானை மீதேறி போர் செய்யும் திறம் தெரிந்த யானைப் படை வீரர்களும், போர்த்திறனில் தேர்ந்தவர், புதியவர் என்ற வேறுபாடுள்ளோரும் அன்றைய திருநாகேஸ்வரத்தில் வாழ்ந்துள்ளனர் என்றும், யானைப்போர் பயிற்சிக்களமாகவும் திருநாகேஸ்வரம் விளங்கியிருக்கிறது என்ற முடிவும் மிகையாகாது.

இயற்கைச் சீற்றம்

அதிவேகப்புயல், நிலநடுக்கம், அதிகமழை அதனால் வரும் வெள்ளம் போன்ற இயற்கை பேரழிவுகளும் நிகழ்ந்துள்ளன. அதனால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இயற்கைச் சீற்றத்தால் ஏற்பட்டச் சீரழிவைத் திருநாகேஸ்வரத்தில் உள்ள இரண்டாம் இராசேந்திரனின் இரண்டாவது ஆட்சியாண்டு (கி.பி. 1052) கல்வெட்டு மூலம் அறிய முடியகிறது.

".....விக்கிரமசிங்க பல்லவரையன் திருநாகீஸ்வர முடையார்க்குச் செய்த நிவந்தத்துக்குக் கல்லில் வெட்டுவித்துக் கொடுத்த பரிசாவது இத்தேவர் தேவதான.....நாட்டு வெண்ணாட்டு நாகக் கொட்டகம் வதிவாய்க்கால் கண்ணாற்றுச் சதிரவறுதியுஞ் சுற்றுக் குலையுமின்றி வெள்ளங்கொண்டமையில் சேதமாய் வருகையில் இதுக்கு வதி வாய்க்கால்க் கண்ணாற்றுச் சதிரவறுதி கட்டவும் இவன் பக்கல் கொண்ட காசு நூறு...."

வெள்ளம் சூழ்ந்து கொண்டு கரையைக் கரைத்தும், அரித்தும் உடைத்துவிட்டது.

சேதமடைந்த வதி வாய்க்கால் கரை, கண்ணாற்று சதுரத்துக்கரையையும் மீண்டும் கட்டித்தர விக்கிரமசிங்க பல்லவரையன் என்பவர் நூறுகாசு கூலியாகக் கொடுத்திருக்கிறார்.

ஆவணம்

குடிமக்கள், கீழதிகாரிகள், ஆகியோர் அரசன், மேலதிகாரிகளிடம் விண்ணப்பம் செய்ய, அதற்கு அரசன், மேலதிகாரிகள் தங்கள் ஆணையை உத்தரவைப் பிறப்பித்திருக்கின்ற செய்திகளும் திருநாகேஸ்வரம் கல்வெட்டுகளில் காணமுடிகிறது.

தேவதான இறையிலி நிலம் கொடுத்ததற்கான அத்தாட்சி ஆவணங்கள், இறைவனின் பொன் அபிஷேகத்திற்கு நகை சாத்தியருளியதற்கான ஆவணங்கள், நிலங்களை விற்றுக் கைமாற்றிக் கொள்ளும்போது எழுதப்பட்ட ஆவணங்கள் ஆகியவை பற்றிய குறிப்புகளும் திருநாகேஸ்வரம் கல்வெட்டுகளில் காணமுடிகிறது.

முதலாம் இராசராசன் - நிலத்தரகர்கள்:

முதலாம் இராசராசனின் 14-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 998) கல்வெட்டில், நிலம் விற்பவருக்கும், வாங்குபவருக்கும் இடையில் இருதரப்பின் சம்மதத்தோடும், ஒருகுழு நடுநிலையாக இருந்து நிலத்தை விலைபேசி விற்றுக்கொடுத்து, அதற்கான ஆவணப் பத்திரத்தையும் எழுதியிருக்கின்றனர். இந்தப் பத்திரத்தில் நிலம் விற்றவர்கள், வாங்கியவர்கள் நடுவில் நின்றவர்கள் அனைவரும் கையெழுத்திட்டிருக்கின்றனர்.

முதலாம் இராசேந்திரனின் 14-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 1025) கல்வெட்டில், கோவல்நாதன் என்பவர், திருநாகீஸ்வரமுடைய மகாதேவர் கோயிலில், விக்கிரணங்கள் கல்லில் வெட்டவேண்டுமென்று இராஜேந்திர சோழனிடம் விண்ணப்பம் செய்கிறான் (முறையிடுகிறான்)

இராஜேந்திர சோழதேவரும், கோவல்நாதனின் வேண்டுகோளுக்கிணங்க கல்லில் வெட்டுவிக்க என்று ஆணை வழங்கியுள்ளார்.

முதலாம் இராசேந்திர சோழனின் தலைமை அதிகாரியாக இராஜேந்திர சோழ மூவேந்த வேளாரின் நியோகம் (கட்டளை, உத்தரவு, அனுமதி) கீழ் அதிகாரிகளுக்கு வந்த செய்தி அறியமுடிகிறது.

இத்தேவர்க்கு, முன்பு பொன் அபிஷேகம் சாத்தியருளிய நகைகளின் விபரங்களைப் பண்டாரப் பதிவேட்டிலும், கல்வெட்டிலும் காணலாம்.

பிரமாணப் பத்திரம்

இரண்டாம் இராசேந்திரனின் இரண்டாவது ஆட்சியாண்டு (கி.பி. 1052) கல்வெட்டில், ''.....நிவந்தத்துக்கு கல்லில் வெட்டுவித்துக் கொடுத்த பரிசாவது.....'' விக்கிரமசிங்க பல்லவரையன் என்பவர் திருநாகீஸ்வர முடையார்க்கு செய்த பல நிவந்தங்கள் பற்றிய குறிப்புகள் கல்லில் வெட்டி வைக்கப்பட்டிருக்கின்றன.

மூன்றாம் குலோத்துங்கனின் 4-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 1181) கல்வெட்டில், திருநாகீஸ்வரமுடையார் கோயில் திருநொந்தா விளக்கொளி ஏற்றுவதற்காக, துண்டநாட்டைச் சேர்ந்த ஏகவாச்சகன் குலோத்துங்கர் என்கிற வாணகோவரையர் என்பவர் நிலத்தை விலைக்கு வாங்கிப்பிறகு திருநாகீஸ்வரமுடையார்க்குப் பதிவு செய்து கொடுத்திருக்கிறார்.

மூன்றாம் இராசராசனின் 8-ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 1223) கல்வெட்டில், திருநாகீஸ்வரமுடையார் கோயிலில், பண்டாரக் கணக்கர் களாகப் பணிபுரிந்த இருவர், பண்டாரப் பதிவேட்டில் நிலம் சம்பந்தப்பட்ட முறைகேடான வரவு செலவுக் கணக்கை எழுதிப் பணத்தைக் கையாடல் செய்துள்ளனர். இந்தக் குற்றம் உடனடியாக கண்டுபிடித்து, அரசனுக்குத் தெரிவிக்கப்பட்டு, அரசனின் ஆணைப்படி சிவத்துரோகர்களாக அறிவிக்கப்பட்டனர். அவர்களுக்குப் பண்டாரக் கணக்கர் காணியாகக் கொடுக்கப்பட்டிருந்த நிலம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன். அவர்களின் பொருட்களும் ஏலமிடப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு, கோயில் நிர்வாகச் செயல்பாட்டை மீறி கோயில் நிலங்களை மற்றவர்க்கு விற்று, பதிவு செய்து கொடுத்து சாதகமாக நடந்து கொண்ட இரு பண்டாரக் கணக்கர்களைப் பற்றி அறியமுடிகிறது.

❁❁❁

ஓம்படைக்கிளவி

ஒரு செயலை ஆதரித்து அதற்கு இடையூரின்றி தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு அவர்களை வணங்கியும், அச்செயலை எதிர்த்து அதைத் தடுப்பவர்களுக்கு எச்சரிக்கையும், சாபமும் விடுவதே ஓம்படைக்கிளவியின் சாராம்சமாகும்.

திருநாகேஸ்வரத்தில் உள்ள கல்வெட்டுகளிலும் ஓம்படைக் கிளவிகள் இடம் பெற்றிருக்கின்றன.

முதலாம் ஆதித்தன் : வரமும் சாபமும்

முதலாம் ஆதித்தனின் இரண்டாவது ஆட்சியாண்டு (கி.பி. 872) கல்வெட்டில்,

> "....இப்பள்ளி உடையோம் வன்னெ தான் வேண்டு
> களத்து தான் வேண்டு பொன் மறையிலி மன்றப்
> பெருவதாகவும் கங்கைக் கரை ஆயரங் குராலாக்
> கொன்றான் பாவங் கொள்வதாகவும்....."

இப்பள்ளியில் உள்ள இறைவனை வேண்டுபவர்கள் தாங்கள் விரும்பிய பொன், பொருட்கள் அனைத்தும் அடைவதாகவும், இறைவனை வேண்டாதவர்கள் கங்கைக் கரையில் ஆயிரங் குரால் (குரவை) மீன்களை கொன்றதற்குரிய பாவத்தை அடைவார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

கங்கைக் கரையில் காராம் பசுவை கொன்றதோஷம், மெக்காவிலே செய்யாது செய்த தோஷம்.

கி.பி. 1783-இல் உள்ளூர் கடைக்காரர்கள் வைத்தக் கல்வெட்டில்,

> ".....இதுக்கு விகாதம் நினைச்சால் கெங்கைக்
> கரையில் காராம் பசுவைக் கொன்ற தோஷம் வரும்.
> ராவுத்தர் மாரிலே விகாதம் நினைச்சால் மெக்காவிலே
> செய்யாது செயித தோஷம் வரும்"

உள்ளூர் கடைத் தெருவில் உள்ள கடைகளில் இந்து, முஸ்லீம் வேறுபாடின்றி அனைத்துக் கடைகளிலும், தினம் ஒன்றுக்கு கடைக்கு ½ காசு வீதம் வசூலித்து, அதில் நாகலிங்க சுவாமியார், குன்றுமுலை அம்மனுக்கு திருவிளக்கொளி ஏற்றிவர வேண்டுமென்றும், ராவுத்தர் பள்ளி வாசலுக்கு 2 கடை வசூலை மானியமாகக் கொடுத்துவிட வேண்டுமென்றும் முடிவெடுத்துள்ளனர்.

இந்த முடிவுக்கு உள்ளூர் கடைக்காரர்கள் அனைவரும் சம்மதித்திருக்கின்றனர். எதிர்வரும் நாட்களில் இந்த முடிவுக்கு எதிர்ப்பு, இடையூறு நினைத்தால் அவர்கள் கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்திற்கு ஆளாவார்கள் என்றும், முஸ்லீம்களாகிய ராவுத்தர்களில் யாரேனும் வில்லங்கம் நினைத்தால் அவர்களின் புனித தலமாகிய மெக்காவில் செய்யக்கூடாத பாவத்தைச் செய்துவிட்ட தோஷம் வந்து சேரும் என்றும் அச்சுறுத்தப்பட்டுள்ளது.

❁❁❁

உப்பிலியப்பன் கோயில்

ஊர் இருப்பிடம்

தமிழகத்தின் தலைநகர் சென்னையையும், தமிழகத்தின் நெற்களஞ்சியம் தஞ்சாவூரையும் நேர்வழியில் தொடர்பு படுத்தும் நெடுஞ்சாலையில் தஞ்சாவூரிலிருந்து சுமார் 40 கிலோ மீட்டர் தொலைவில் கும்பகோணம் உள்ளது. கும்பகோணத்திலிந்து (கிழக்கு நோக்கி) காரைக்கால் செல்லும் சாலையில் 6 கிலோ மீட்டர் தொலைவில் திருநாகேஸ்வரம் உள்ளது. இத்திருநாகேஸ்வரத்தில் உள்ள நாகநாதசுவாமி கோயிலுக்கும் கிழக்கில் சுமார் 1 கிலோ மீட்டர் தொலைவுக்குள்ளேயே உப்பிலியப்பன் கோயில் உள்ளது.

கோயில் இருப்பிடம்

திருநாகேஸ்வரம் கிழக்கு எல்லைப் பகுதியில் உப்பிலியப்பன் கோயில் அமைந்துள்ளது.

வடகலைக் கோயில்

வைணவத்தின் இருபிரிவுகளில் ஒன்றான, வடகலை வழிப்பாட்டு முறைகளை இக்கோயிலில் பின்பற்றப்படுகிறது.

சன்னதிகள்

1) ஆலயத்தில் நுழையும் போதே, தென்புற மாடத்தில் சிறிய கண்ணன் சன்னதி உள்ளது.

2) கருவறைச் செல்லும் பாதையில் கருவறையை நோக்கி கருடாழ்வார் சன்னதி உள்ளது.

3) கோயிலின் உட்பக்கம் (ஸ்ரீ வேங்கடாஜலபதி) உப்பிலியப்பர் நின்றருளும் கருவறைச் சன்னதி உள்ளது.

4) கோயிலின் உட்பிரகார வெளிமண்டபத்தில், கருவறை நோக்கியப் பாதையின் தென்புறத்தில் அனுமன் சன்னதி உள்ளது.

5) கோயிலின் உட்பிரகார வெளிமண்டபத்தில், கருவறை நோக்கியப் பாதையின் வடபுறத்தில் பாஷ்யகாரர், மண்ணுடையார், இராமன் சன்னதி ஆகியவை அமைந்திருக்கின்றன.

6) கோயிலின் வெளிப்பிரகாரத்தில் தென் மேற்கில் மணியப்பர் சன்னதியும், வடமேற்கில் என்னப்பர் சன்னதியும் அமைந்திருக்கின்றன.

கோபுரங்கள், கோபுரச் சிற்பங்கள்

ஒட்டுமொத்த ஆலயத்திற்கும் கிழக்கு திசையில் நுழைவு வாயில் உள்ளது. நுழைவு வாயிலில் 5 மாட நிலை ராஜகோபுரம் உள்ளது.

கோபுரத்தின் கிழக்கு, மேற்குப் பக்கங்களில் சிற்பங்கள் இல்லை, வடக்கு, தெற்குப் பக்கங்களில் சிற்பங்கள் உள்ளன. ஸ்ரீநரசிம்மர், கிருஷ்ணர் சிற்பங்களும் இடம்பெற்றிருக்கின்றன.

நுழைவு வாயிலில் 5 மாடநிலைக் கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றால் பலிபீடம் கருடாழ்வார் சன்னதியை அடுத்துள்ள மண்டபத்தில் மூடுதளத்திற்கும் மேல் இரண்டு மாடநிலைக் கோபுரங்கள் உள்ளன.

விமானம்

உப்பிலியப்பர் நின்றருளும் கருவறையின் விமானம் 2 மாடநிலை வேசர விமானமாக அமைந்திருக்கிறது. இந்த விமானத்திற்கு சுத்தானந்தம் (சுத்தம் +ஆனந்தம்) என்று பெயரிடப்பட்டுள்ளது.

கருவறை வெளிப்பிரகாரத்தின் வலதுபக்கம் (தெற்கில்) உள்ள மணியப்பன் சன்னதியின் விமானம் ஒரு நிலை வேசர விமானமாக உள்ளது. கருவறை வெளிப்பிரகாரத்தின் இடது பக்கம் (வடக்கில்) உள்ள என்னப்பன் சன்னதியின் விமானமும் ஒரு நிலை வேசர விமானமாக உள்ளது. இந்த இரு விமானங்களிலும் சிற்பங்கள் இடம்பெறவில்லை.

பெருமாளின் திருநாமம், ஐந்திருமேனி

உப்பிலியப்பன் கோயிலில் நின்றருளும் பெருமாள்-திருவிண்ணகரப்பன், தன்னொப்பாரில்லப்பன், உப்பிலியப்பன், ஸ்ரீனிவாசன், ஸ்ரீவேங்கடாஜலபதி என்ற திருநாமங்களைக் கொண்டு விளங்குகிறார்.

இத்தலப் பெருமாள் - பொன்னப்பன், மணியப்பன். முத்தப்பன், என்னப்பன், திருவிண்ணகரப்பன், ஆகிய ஐந்து திருநாமம் கொண்ட திருமேனிகளுடன் நம்மாழ்வாருக்கு காட்சியளித்திருக்கிறார்.

தாயார்

உப்பிலியப்பன் கோயிலில் தாயாருக்கென்று தனிச் சன்னதிக் கிடையாது. கருவறையில் கிழக்கு நோக்கி நின்றருளும் பெருமாளுக்கு வலது பக்கத்தில் - பூமிநாச்சியார் வடக்கு நோக்கி ஒருகால் மண்டியிட்டு அமர்ந்த கோலத்தில் உள்ளார்.

தாயார் பூமிதேவி, பூதேவி, பூமிநாச்சியார், தரணிதேவி, வஸுந்தரை ஆகிய திருநாமங்களுடன் விளங்குகிறார்.

பெருமாள் ஆஸ்தானத்தை விட்டு எழுந்தருளும் அத்தனை விழாக்களிலும் தாயாரும் உடன் எழுந்தருள்கிறார்.

கருவறை தெய்வ அமைப்பு

1) கருவறையில் வட்டவடிவ பத்மாசனத்தில் பெருமாள் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் உள்ளார். கர்த்தரிமுக ஹஸ்தங்களாகவுள்ள மேல் வலதுகரத்தில் சக்கரமும், மேல் இடது கரத்தில் சங்கும் உள்ளன.

கீழ் வலது கரம் வரத ஹஸ்த (வழங்கும்) கரமாகவும், கீழ் இடது கரம் ஊருஹஸ்த (தொடைக்கை)கரமாகவும் உள்ளன.

கிழக்கு நோக்கி நின்றருளும் பெருமாளுக்கும் வலது புறத்தில், வடக்கு நோக்கி மண்டியிட்டு அமர்ந்து அஞ்சலி ஹஸ்தத்துடன் (வணங்கும் கை) தாயார் உள்ளார்.

கிழக்கு நோக்கி நின்றருளும் பெருமாளுக்கும் இடது புறத்தில், தெற்கு நோக்கி மண்டியிட்டு அமர்ந்து அஞ்சலி ஹஸ்தத்துடன் (வணங்கும் கை) மார்க்கண்டேயர் உள்ளார்.

மணியப்பன் சன்னதி

மணியப்பன் சன்னதி மூலஸ்தானத்தில், பெருமாள் மற்றும் இருதேவியர்களும் வீற்றிருக்கின்றனர்.

என்னப்பன் சன்னதி

என்னப்பன் சன்னதி மூலஸ்தானத்தில், பெருமாள் இருதேவியருடன் வீற்றிருக்கிறார். மணியப்பன் சன்னதி மூலஸ்தான தெய்வ உருவங்களைவிட இவை பெரியதாக இருக்கின்றன.

கோட்டங்கள்

கிழக்கு நோக்கிய கருவறையைச் சுற்றி 5 கோஷ்டங்களும், முன்மண்டபத்தில் 9 கோஷ்டங்களும் உள்ளன. மணியப்பன் சன்னதியில் 5 கோஷ்டங்கள் உள்ளன. என்னப்பன் சன்னதியில் கோஷ்டங்கள் இடம்பெறவில்லை.

பலிபீடம், கொடிமரம், கருடாழ்வார்

கோயிலின் நுழைவாயிலாக விளங்கும் 5 மாடநிலைக் கோபுரத்தைக் கடந்து உள்ளே வந்தவுடன், கருவறை நோக்கியப் பாதையில் முதலில் (கிழக்கிலிருந்து) பலிபீடம், கொடிமரம் அடுத்து கருடாழ்வார் மண்டபம் ஆகியவை அமைந்துள்ளன.

எட்டுக்கால் மண்டபம்

ஆலயத்தில் மேற்கு நோக்கி கருவறைச் செல்லும் பாதையில உள்ள கருடாழ்வார் சன்னதிக்கும் வடக்கில் குடைவடிவத்தில் ஒரு சிறிய எட்டுக்கால் மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தில் தெப்பத் திருவிழா நடக்கும் ஐந்து நாட்களிலும் பெருமாள் எழுந்தருளித் திருவாராதனம் கோஷ்டி கண்டருள்கிறார். மாட்டுப்பொங்கல் விழா நாளன்றும், தீர்த்தவாரி தினங்களிலும் இம்மண்டபத்தில் எழுந்தருள்கிறார்.

திருமண மண்டபம் :

ஆலய நிர்வாகத்திற்குச் சொந்தமாக இரண்டு திருமண மண்டபங்கள் இருக்கின்றன. பழைய அமைப்புடைய திருமண மண்டபம் ஒன்றும், நவீன வசதி கொண்ட திருமண மண்டபம் ஒன்றுமாக உள்ளன.

பகலிராப் பொய்கை

ஆலயத்தின் வடகிழக்கு (ஈசான்ய) மூலையில் பகலிராப் பொய்கை (அஹோராத்ர புஷ்கரிணி) அமைந்துள்ளது. மற்ற ஆலயத்

திருக்குளங்கள் போலல்லாமல், இப்பொய்கையில் காலவரையறையின்றி இரவு பகல் எந்நேரமும் நீராடலாம் என்ற வகையில் 'பகலிராப் பொய்கை' என்னும் பெயர் பெற்றிருக்கிறது. ஆனால் தற்போது, கோயில் வழிபாட்டிற்காக திறந்திருக்கும் நேரங்களில் மட்டும் பகலிராப் பொய்கையில் நீராட நிர்வாகத்தினர் அனுமதிக்கின்றனர்.

பகலிராப் பொய்கையின் கிழக்கு, தெற்கு, மேற்குப் பக்கங்களில் நீராடும் வசதி உள்ளது. நீராடுவோரின் வசதிக்காக - பாதுகாப்புக்காக தெற்குப் பக்கம் தடுப்புக்கம்பி போடப்பட்டுள்ளது.

வில்வமரம்

ஒட்டுமொத்த ஆலயத்தின் வடகிழக்கு மூலையில் சுமார் 600 ஆண்டு பழமை வாய்ந்த வில்வமரம் உள்ளது. வைணவ ஆலயத்தில் வில்வமரம் இடம்பெற்றிருப்பது சிறப்பம்சமாகும்.

வாகன மண்டபம்

நுழைவாயிலிலிருந்து மகா மண்டபத்திற்கு முன்பாக (வலது பக்கம்) வடக்கில் வாகன மண்டபம் இருக்கிறது. வாகன மண்டபத்தில் கருடாழ்வார் வாகனம், பின்னமரவாகனம் இருக்கின்றன. பின்னமர வாகனமும் பெருமாள் எழுந்தருளும் வாகனமாக பயன்படுத்தப்படுகிறது.

துலாபாரம்

வாகன மண்டபத்திற்கு முன், வலப்பக்கத்தில் துலாபாரம் - தராசு உள்ளது. பக்தர்களின் எடைக்கு எடை காசு, தானியம், பழம் போன்ற பிரார்த்தனைகளுக்காக துலாபாரம் அமைக்கப்பட்டிருக்கிறது.

தேசிகன் சன்னதி

கருவறையை ஒட்டியுள்ள முன் மண்டபத்தின் வடக்கில் (இடது புறம்) ஸ்ரீ தேசிகர் சன்னதி இருக்கிறது. பெருமாளுக்கும், தாயாருக்கும் நடைபெறும் பல்வேறு உற்சவங்களிலும் ஸ்ரீதேசிகன் உடன் எழுந்தருள்கிறார்.

அனுமன் சன்னதி

கருவறையை அடுத்த வெளி மண்டபத்தில் கருவறைப் பாதைக்கு தெற்கில் அனுமன் சன்னதி உள்ளது.

மடப்பள்ளி

ஆலயத்தின் கருவறை, முன் மண்டபத்தை அடுத்த மகா மண்டபத்தின் தென் கிழக்கில் திருமடப்பள்ளி இருக்கிறது. இங்கு பெருமாளுக்கு நைவேத்தியத்திற்காகவும், பக்தர்களுக்கு வழங்கவும் உணவு வகைகள் தயாரிக்கப்படுகின்றது. இங்கு தயாரிக்கும் உணவில் முழுவதுமாக உப்பு சேர்த்துக் கொள்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பாடலும் ஓவியமும்

உப்பிலியப்பர் கருவறையைச் சுற்றியுள்ள உட்பிரகாரத் திருச்சுற்று மண்டபத்தில், கிழக்கு நோக்கிய கருவறைக்கும் (வலது புறத்தில்) தெற்கில் உள்ள சுவரில், ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவைப் பாடல்களை மொசைக் கல்லில் வெட்டுவித்து சுவரில் பதித்துள்ளனர். ஒவ்வொரு கருத்துப் பாடல்களுக்கும் காட்சி ஓவியம் தீட்டப்பட்டுள்ளன.

ஆழ்வார்கள் சன்னதி

கருவறையை அடுத்த வெளி மண்டபத்தில் கருவறைப் பாதைக்கும் வடக்கில் ஆழ்வார்கள் சன்னதி உள்ளது.

கோதண்டராமர் சன்னதி

கருவறையை அடுத்த வெளி மண்டபத்தில், கருவறைப் பாதைக்கும் வடக்கில் ஆழ்வார்கள் சன்னதிகளுக்கும் கிழக்கில் கோதண்டராமர் சன்னதி உள்ளது.

கண்ணாடிப் பள்ளியறை

கிழக்கு நோக்கியக் கருவறையை அடுத்த மகா மண்டபத்தின் வடகிழக்கில் கண்ணாடிப் பள்ளியறை உள்ளது. விழா நாட்களில் மட்டுமே கண்ணாடிப் பள்ளியறை பயன்படுத்தப்படுகிறது. மேலும் இக்கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமாளின் ஐந்திருமேனிகளில் ஒன்றான முத்தப்பனுக்கு மட்டுமே பள்ளியறை சேவை நடைபெறுகிறது.

கோகுலம், கஜவளாகம்

ஓட்டுமொத்த ஆலயத்தின் தென் மேற்கில், கிழக்கு நோக்கி உள்ள மணியப்பன் சன்னதிக்கும் வலது பக்கம் - வெளி மதில் சுவரின் உட்பக்கம் மதில் சுவருடன் இணைத்து மூடுதளமுள்ள 'கோகுலம்' கட்டப்பட்டிருக்கிறது. இக்கோகுலத்தில் தான் மாடுகள் பராமரிக்கப்படுகின்றன. கோகுலத்திற்கும் மேற்கில் கஜவளாகம் உள்ளது. இந்த கஜவளாகத்தில்தான் யானை உள்ளது. யானையைப் பராமாரிக்க ஒரு யானைப் பாகனும் இருக்கிறார்.

நந்தவனம்

ஆலயத்தின் இடது (வடக்கு), பின் (மேற்கு) புறங்களில் (தோட்டம்) நந்தவனம் உள்ளது. அது மட்டுமின்றி ஆலயத்தின் தென்புறத்தில், இரண்டு மைல் தொலைவில் பெரிய நந்தவனமும் உள்ளது. தினந்தோறும் பெருமாளுக்கு நடைபெறும் வழிபாட்டிற்கு வேண்டிய பூக்களும், திருத்துழாயும் மேற்படி நந்தவனத்திலிருந்தே கைக்கொள்ளப்படுகின்றன. இந்த நந்தவனத்தின் நடுவில் பெருமாள் எழுந்தருளும் ஆறுநாள் வசந்த உற்சவத்திற்கு ஒரு பெரிய மண்டபமும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆழ்வார்கள் :

ஆழ்வார்களின் மங்களாசாசனம் பெற்றத் திருத்தலங்களில் உப்பிலியப்பன் கோயிலும் ஒன்றாகும். இத்தலத்திற்கும், இங்கு நின்றருளும் பெருமாளுக்கும் பொய்கையாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், ஆகிய நான்கு ஆழ்வார்களும் மங்களாசாசனம் செய்தருளியிருக்கின்றனர்.

நம்மாழ்வார்

இத்தலத்தில் நம்மாழ்வார் வருந்தி நின்ற நிலையில், பெருமாளே தானாக நம்மாழ்வார் மேல் விழுந்து நம்மாழ்வாரை அணைத்துக் களித்திருக்கிறார்.

பெருமாள் நம்மாழ்வாருக்குக் காட்சி தந்த கோலங்கள்

திருவிண்ணகரப்பன்	-	மூலவர்
பொன்னப்பன்	-	உற்சவர்
மணியப்பன்	-	பரிவார தனி சன்னதி (தென்மேற்கு மூலை)
என்னப்பன்	-	பரிவார தனி சன்னதி (வடமேற்கு மூலை)
முத்தப்பன் (பகோரீனிவாசன்)	-	உற்சவர் பக்கத்தில் (இவருக்கு மட்டுமே பள்ளியறை சேவை நடைபெறுகிறது).

திவ்ய பிரபந்தம்

இத்திவ்யதேசத்திற்கு ஆழ்வார்கள் அருளிச் செய்த திவ்ய பிரபந்தங்களாவன,

1. பொய்கையாழ்வார் அருளிச்செய்த முதல் திருவந்தாதி 77-ஆவது பாசுரம்
2. பேயாழ்வார் அருளிச்செய்த மூன்றாம் திருவந்தாதி 61,62 ஆவது பாசுரங்கள்
3. நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி ஆறாம்பத்து மூன்றாம் திருவாய்மொழி
4. திருமங்கைமன்னன் அருளிச்செய்த பெரிய திருமொழி ஆறாம்பத்து முதல் திருமொழி, இரண்டாம் திருமொழி, மூன்றாம் திருமொழி
5. திருமங்கை மன்னன் அருளிச்செய்த பெரியதிருமொழி எட்டாம்பத்து - 1-ஆம் திருமொழி 2-ஆவது பாசுரம்.
6. திருமங்கை மன்னன் அருளிச்செய்த பெரியதிருமொழி 10-ஆம் பத்து - 1ஆம் திருமொழி 8-ஆவது பாசுரம்.

7. திருமங்கை மன்னன் அருளிச்செய்த சிறிய திருமடல் 37-ஆவது பாசுரம்.
8. திருமங்கை மன்னன் அருளிச்செய்த பெரிய திருமடல் 62-ஆவது பாடல்
9. திருமங்கை மன்னன் அருளிச்செய்த திருநெடுந்தாண்டவம் 29-ஆவது பாசுரம்.
10. ஸ்ரீதேசிகன் அருளிச்செய்த த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்னாவளி சுலோகம்.
11. பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் இயற்றிய நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதியில் திருவிண்ணகரைப் பற்றிய வெண்பா.

இடப்பெயர்

மார்க்கண்டேய முனிவரின் மாதவத்தால் பெருமாளும், பிராட்டியும் இத்தலத்தில் அவதரித்த காரணத்தால், இத்தலம் மார்கண்டேய க்ஷேத்திரம் என்றும் வழங்கப்படுகிறது.

திருத்துழாய்க்காட்டில், தாயார் பூமிதேவி எனும் நாமத்தில் அவதரித்ததால் இத்தலம் "துளசிவனம்" என்றும் அழைக்கப்படுகிறது.

விழாக்கள்

உப்பிலியப்பன் கோயிலில் பெருமாளுக்கு தினந்தோறும் ஏதேனும் ஒரு விழா நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் எந்தெந்த நாட்களில், யார் யார் பிரார்த்தனை வழிபாடு நிறைவேற்றுகின்றனர் என்றும், ஆலய நிர்வாகத்தினரால் நடத்தப்படும் விசேஷ விழாக்களும் அடங்கிய திருநாட்கள் விவரக் குறிப்பேடு சிறிய புத்தகமாக வெளியிடப்படுவதால் உப்பிலியப்பருக்கு ஆண்டு முழுவதும் அருள் வழங்கும் நாட்களாகவே அமைந்துள்ளன.

நாள்தோறும் நடைபெறும் ஆறுகாலப் பூஜை கூட, சூழ்நிலைக்கேற்ப பூஜை நடைபெறும் காலங்களில் சிறுமாறுதல்கள் ஏற்படக்கூடுமென்று திருநாட்கள் விவரக்குறிப்பேட்டில் அறிவிக்கின்ற அளவுக்குப் பெருமாளுக்குப் பிரார்த்தனை வழிபாடுகள் நிறைவேறி வருகின்றன.

ஒவ்வொரு சனிக்கிழமை, வியாழக்கிழமை மற்றும் திருவோண நட்சத்திர நாட்களில் மூலவருக்கும், உற்சவருக்கும் இரத்தினக் கிரீடம், திருமண்காப்பு சாத்தப்படுகின்றன.

ஒவ்வொரு புரட்டாசி, பங்குனி மாதங்களில் பிரம்மோற்சவங்கள், அதி விமரிசையாக நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு ஸ்ரீராம நவமி உற்சவமும் 10 நாட்களுக்கு கொண்டாடப்படுகிறது.

உற்சவ செப்புத் திருமேனிகள்

இத்திருக்கோயிலில் முக்கியமான கருவறைத் தெய்வங் களுக்கும், சமயம் சார்ந்த மற்ற சில தெய்வங்களுக்கும் உற்சவத்திருமேனிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கி.பி. 10ஆம் நூற்றாண்டு முதல் - கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலகட்டத்தைச் சேர்ந்த 20 செப்புத்திருமேனிகள் இருக்கின்றன. இவை அனைத்தும் அந்தந்த காலகட்டத்தைச் சேர்ந்த செப்புத்திருமேனி நுண்கலை வடிவமைப்பு முறையில் உருவாக்கப் பட்டிருக்கின்றன.

ஆண்டு வாரியாக இவ்வாலயத்தில் செய்யப்பட்டுள்ள செப்புத்திருமேனிகள் பற்றிய விபரம்,

1. கி.பி. 10-11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஸ்ரீதேவி
2. கி.பி. 11-12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பூதேவி
3. கி.பி. 11-12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பங்கல் பெருமாள்
4. கி.பி. 11-12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பகோ ஸ்ரீனிவாசன்
5. கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த என்னப்பன்
6. கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விஷ்வக்சேனர்
7. கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நம்மாழ்வார்
8. கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இராமர் (பெரியது)
9. கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீதை (பெரியது)
10. கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இலட்சுமனர் (பெரியது)
11. கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அனுமார் (பெரியது)
12. கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நவநீத கிருஷ்ணன்

13. கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சந்தான கிருஷ்ணன்
14. கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஹயக்ரீவர்
15. கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுதர்ஸன ஆழ்வார்
16. கி.பி. 18-19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இராமர் (சிறியது)
17. கி.பி. 18-19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இலட்சுமனர் (சிறியது)
18. கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீதை (சிறியது)
19. கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அனுமார் (சிறியது)
20. கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செல்வர்

கல்வெட்டு விபரம்

1. திருநாகேஸ்வரத்தின் வடகோடியில் நாகநாதசுவாமி கோயிலும் (ஸ்ரீராகுஸ்தலம்), தென் கோடியில் உப்பிலியப்பன் கோயிலும் உள்ளது. உப்பிலியப்பன் கோயிலுக்கு திருவிண்ணகர் என்ற இடப்பெயரும் உண்டு.

2. கிழக்கு நோக்கிய 5 நிலை ராஜ கோபுரத்தைக் கடந்து உள்ளே செல்லும் வழியில் கருடன் சன்னதிக்கும் பின்புறத்தில் நடை பாதைக்கும் (வலதுபுறம்) வடக்கில் உள்ள தூணில், இக்கோயில் சம்பந்தப்பட்ட கல்வெட்டுகளின் விபரம் தற்காலக் கல்வெட்டில் பதிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டுகளில் . . . . .

அ) நாகநாதசுவாமி ஆலயத்தில் உள்ள முதலாம் இராசராசன் காலத்தைச் சேர்ந்தக் கல்வெட்டில் 'திருவிண்ணகர்த் திருநாகேஸ்வரம்' என்று கூறப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

ஆ) நாகநாதசுவாமி ஆலயத்தில் உள்ள முதலாம் இராசேந்திரன் காலத்தியக் கல்வெட்டில் 'திருவிண்ணகர் திருநாகேஸ்வரம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

ஆய்வின் வழித்துணை நூல்கள்

1. இந்தியக் கல்வெட்டுத் துறையின் ஆண்டறிக்கைகள்
   1897, 1911, 1931-32
2. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி XIII
3. கல்வெட்டியல் - நால்வர்கள்
4. தமிழகக் கோயிற் கலைகள் - முனைவர் இராநாகசாமி,
   மா. சந்திரமூர்த்தி
5. தமிழும் பிராகிருதமும்
6. கிரந்தபாடமாலா
7. மூவருலா
8. கல்வெட்டு ஓர் அறிமுகம் - நடன காசிநாதன்
9. சோழர் வரலாறு
10. The Cholas - K.A. Nilakanda Sastri
11. Early Chola Architecture and Sculpture - Douglas Barret
12. Early Chola Art Part 1 - S.R. Balasubramanian.
13. அபிதான சிந்தாமணி
14. கதவுப் பட்டைகள்
15. இற்றினவும், முறிந்தனவும் - முனைவர். சு. இராஜகோபால்
16. தேவாரப் பாடல்கள்
    திருஞானசம்பந்தர்
    திருநாவுக்கரசர்
    சுந்தரர்
17. திருப்புகழ் - அருணகிரிநாதர்
19. உப்பிலியப்பன் கோயில்
    ஆழ்வார் பாடல்கள்
    பொய்கையாழ்வார்
    பேயாழ்வார்
    நம்மாழ்வார்
    திருமங்கையாழ்வார்

ஸ்ரீதேசிகன்


பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

நிழற்படங்கள்

1. திருநாகேஸ்வரம்



கிழக்கு வாயில் ராஜகோபுரம்




கோயிற்குளம் (சூர்யபுஷ்கரணி தீர்த்தம்)




கட்டைக் கோபுரத்தைக் கடந்து,
அலங்கார மண்டபத்தில்
(நாயக்கர் மண்டபம்)
கருவறைப் பாதைக்கும்
வடக்கில் உள்ள தூணில்
செதுக்கப்பட்டுள்ள குரங்கு சிற்பம்



கட்டைக் கோபுரத்தைக் கடந்து,
அலங்கார மண்டபத்தில்
(நாயக்கர் மண்டபம்)
கருவறைப் பாதைக்கும்
தெற்கில் உள்ள தூணில்
செதுக்கப்பட்டுள்ள
நாகநாத கொத்தனார் சிற்பம்




கிழக்கு நோக்கிய கருவறையின் பின்புற தேவகோட்டத்தில் மேற்கு நோக்கியுள்ள லிங்கோத்பவர், சுவரில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டெழுத்துகள்




ஒட்டுமொத்த ஆலயத்தின் வடகிழக்கு மூலையில் தனி ஆலயமாக விளங்கும் குன்றுமாமுலை அம்மன் ஆலய அமைப்பு

2. உப்பிலியப்பன் கோயில்



கோயிலின் வடகிழக்கு மூலையில் உள்ள பகலிராப் பொய்கை (அஹோராத்ர புஷ்கரணி). எட்டுக்கால் மண்டபம்



ஆலயத்தின் தென்மேற்கு மூலையில் உள்ள மணியப்பன் சன்னதி, கோகுலம், கஜவளாகம்

